www.Padasalai.Net

வெற்றி வாகை சூட

# வெற்றிக்கு வழி

# 10

# சமூக அறிவியல்

வரலாறு - அலகு 1

புவியியல் - அலகு 1

குடிமையியல் - அலகு 1

பொருளியல் - அலகு 1

மேலும் பல படிப்புதவி குறிப்பேடுகளுக்கு
**www.waytosuccess.org**
என்ற இணையதளத்திற்கு செல்லவும்

# www.Padasalai.Net

படங்களை தொடுக! பாடசாலை வலைதளத்தை சமூக ஊடகங்களில் பின்தொடர்க!! உடனுக்குடன் புதிய செய்திகளை Notifications-ல் பெறுக!

Zoom Touch Below Links Download!

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 12th Standard | Syllabus | Books | Study Materials – EM | Study Materials - TM | Practical | Online Test (EM & TM) |
| | Monthly Q&A | Mid Term Q&A | Revision Q&A | PTA Book Q&A | Centum Questions | Creative Questions |
| | Quarterly Exam | Half Yearly Exam | Public Exam | NEET | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 11th Standard | Syllabus | Books | Study Materials – EM | Study Materials - TM | Practical | Online Test (EM & TM) |
| | Monthly Q&A | Mid Term Q&A | Revision Q&A | Centum Questions | Creative Questions | |
| | Quarterly Exam | Half Yearly Exam | Public Exam | NEET | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 10th Standard | Syllabus | Books | Study Materials - EM | Study Materials - TM | Practical | Online Test (EM & TM) |
| | Monthly Q&A | Mid Term Q&A | Revision Q&A | PTA Book Q&A | Centum Questions | Creative Questions |
| | Quarterly Exam | Half Yearly Exam | Public Exam | NTSE | SLAS | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 9th Standard | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Quarterly Exam | Half Yearly Exam | Annual Exam | RTE | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **8th Standard** | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Term 1 | Term 2 | Term 3 | Public Model Q&A | NMMS | Periodical Test |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **7th Standard** | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Term 1 | Term 2 | Term 3 | Periodical Test | SLAS | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **6th Standard** | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Term 1 | Term 2 | Term 3 | Periodical Test | SLAS | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **1st to 5th Standard** | Syllabus | Books | Study Materials | Periodical Test | SLAS | |
| | Term 1 | Term 2 | Term 3 | Public Model Q&A | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **Exams** | TET | TNPSC | PGTRB | Polytechnic | Police | Computer Instructor |
| | DEO | BEO | LAB Asst | NMMS | RTE | NTSE |

| | | | |
|---|---|---|---|
| **Portal** | Matrimony | Mutual Transfer | Job Portal |

| | | | |
|---|---|---|---|
| **Volunteers** | Centum Team | Creative Team | Key Answer Team |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **Downloads** | LESSON PLAN | Department Exam | Income Tax | Forms & Proposals | Fonts | Downloads |
| | Proceedings | GO's | Regulation Orders | Pay Orders | Panel | |

**Padasalai – Official Android App – Download Here**

**Kindly Send Your Study Materials, Q&A to our Email ID** – Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

# வெற்றிக்கு வழி 2020-21 ஆண்டுக்கான 10-ம் வகுப்பு சமூக அறிவியல் முழுமைகையேடு

**சிறப்பு அம்சங்கள்**



- புத்தக வினாக்களுக்கான சரியான விடைகள் எளிய நடையில் Point by point ஆக கொடுக்கப்பட்டுள்ளன.
- தேர்வு அடிப்படையிலான கூடுதல் வினாக்கள், விரைவுக் குறியீட்டு(QR code) வினாக்கள், புத்தகத்தின் நிலவரைபடப்பயிற்சி அட்டவணை மற்றும் குறிக்கப்பட்ட வரைபடங்கள் போன்றவை தொகுத்து கொடுக்கப்பட்டுள்ளன.
- 5 மதிப்பெண் வினாக்களின் விளக்கங்கள் பல தலைப்புகளாக படிப்பதற்கேற்ப பிரித்து குறிப்புச் சட்டகத்துடன் கொடுக்கப்பட்டுள்ளது.

**அரசு மாதிரி வினாத்தாள் - 2019, 6 PTA வினாத்தாள்களுக்கான விடைகள் அந்தந்த பகுதிகளில் சேர்க்கப்பட்டுள்ளன.**

- சுயமதிப்பீடு செய்ய **பயிற்சி புத்தகம்**

இலவச பாட உதவிக்குறிப்புகளுக்கு
**www.waytosuccess.org**

- இந்த இணையதளத்தில், 6 முதல் 12 வகுப்பு வரை ஆசிரியர்கள் மற்றும் மாணக்கர்கள் பயன்பெறும் வகையில்
  - பாட உதவிக்குறிப்புகள்
  - வினாத்தாள்கள் மற்றும் விடைக்குறிப்புகள்
  - வீடியோ மற்றும் ஆடியோ வடிவிலான பயிற்சிகள்
  - தலைசிறந்த ஆசிரியர்களின் வழிகாட்டுதல்கள்
- *Career, Life Skills, Co-curricular...* முதலியவற்றுக்கான சிறந்த வழிகாட்டுதல்கள்
- மாணக்கர்களுக்கு தேவையான செய்திகள் மற்றும் நிகழ்வுகள்
- மாணக்கர்கள் எந்த நேரத்திலும் எமது படிப்புதவி குறிப்புகளை இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்..




**------ புத்தகங்கள் வாங்க ------**
**மின்னஞ்சல்** : way2s100@gmail.com
**தொடர்பு எண்** : 9787609090, 9787201010
**இணையதளம்:** www.bookade.com
*(ஆன்லைன் மூலம் புத்தகங்கள் வாங்க)*

**--- பாடம் சார்ந்த சந்தேகங்களுக்கு ----**
**மின்னஞ்சல்** : wtsteam100@gmail.com
**தொடர்பு எண்** : 7397774508, 9994394610
**இணையதளம்** : www.waytosuccess.org
*(இலவச பாட உதவி குறிப்புகளை பதிவிறக்கம் செய்ய)*

**VPP மூலம் புத்தகங்களை பெற : 9787104040 என்ற எண்ணுக்கு *SMS* செய்யவும்**

Way to Success புத்தகங்கள் வேண்டுவோர் இப்புத்தகத்தின் கடைசிப் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள அலைபேசி எண்களில் உங்கள் **மாவட்ட ஒருங்கிணைப்பாளரை** அழைத்து பேசுங்கள், அல்லது **9787609090, 9787201010** எண்களைத் தொடர்புகொள்ளுங்கள்.

**குறிப்பு: WAY TO SUCCESS** - main புத்தகத்தின் ஒரு சில பகுதிகள் மட்டுமே இந்த குறிப்பேட்டில் தரப்பட்டள்ளது. இது ஒரு Sample மட்டுமே. முழுமைக்கையேடு வேண்டுவோர் மேலே கொடுக்கபட்டுள்ள தகவல்களை பார்க்கவும்.

www.Padasalai.Net

# வரலாறு

# 1. முதல் உலகப்போரின் வெடிப்பும் அதன் பின்விளைவுகளும்

## முக்கிய குறிப்புகள்

| | |
|---|---|
| முதல் உலகப்போர் | ♣ 1914இல் தொடங்கி 1918வரை நடைபெற்றது.<br>♣ நேச நாடுகளுக்கும் நட்பு நாடுகளுக்கும் இடையில் நடைபெற்றது. |
| போரின் விளைவு | ♣ முதல் உலகப்போரின் விளைவாக சிதறுண்ட மூன்று பேரரசுகள் ஜெர்மனி, ஆஸ்திரிய-ஹங்கேரி, உதுமானியப் பேரரசு<br>♣ ரஷ்யப்புரட்சி ஏற்பட்டது. உலக வரைபடம் மாற்றி அமைக்கபட்டது. |
| ஏகாதிபத்தியம் | முதலாளித்துவத்தின் உச்சகட்டமே ஏகாதிபத்தியமென லெனின் கூறுகிறார். |
| காலனியாதிக்கப் போட்டி | 1870ஆம் ஆண்டிற்குப் பின்னர் இங்கிலாந்து, பிரான்ஸ், பெல்ஜியம், இத்தாலி, ஜெர்மனி ஆகிய நாடுகள் காலனியாதிக்கப் போட்டியில் கலந்து கொண்டன. |
| சீன-ஜப்பானியப் போர் | சீன-ஜப்பானியப் போரில் சீனாவை சிறிய நாடான ஜப்பான் தோற்கடித்தது. |
| ரஷ்ய ஜப்பானியப் போர் | 1904இல் தொடங்கிய ரஷ்ய ஜப்பானியப் போரில் ஜப்பான் ரஷ்யாவைத் தோற்கடித்தது. |
| கொரியாவின் இணைப்பு | 1910ஆம் ஆண்டு கொரியாவை ஜப்பான் இணைத்துக் கொண்டது. |
| மஞ்சு அரசவம்சம் | 1912ஆம் ஆண்டு மஞ்சு அரசவம்சம் வீழ்ச்சியுற்றது. |
| ஐரோப்பாவின் ஆட்சி | 1876இல் ஆப்பிரிக்காவின் பத்து சதவீதப் பகுதிகள் மட்டுமே ஐரோப்பாவின் ஆட்சியின் கீழிருந்தது. |
| செல்வாக்கு மண்டலங்கள் | இங்கிலாந்து, பிரான்ஸ், ரஷ்யா, ஜெர்மனி ஆகிய நாடுகள் சீனாவில் தங்களுக்கென 'செல்வாக்கு மண்டலங்களை' நிறுவின. |
| மூவர் கூட்டு நாடுகள் | இங்கிலாந்து, பிரான்சு, இரஷ்யா |
| வன்முறைசார்ந்த தேசியம் | எனது நாடு சரியோ தவறோ நான் ஆதரிப்பேன் என்ற மனப்பாங்கு |
| இரண்டாம் கெய்சர் | ஜெர்மனியே உலகத்தின் தலைவர் எனப் பிரகடனம் செய்தார். |
| டிரபால்கர் போர் | 1805ஆம் ஆண்டு டிரபால்கர் போரில் நெப்போலியன் தோல்வியடைந்தார். |
| பிரான்ஸின் இழப்பு | 1871இல் அல்சேஸ், லொரைன் பகுதிகளை பிரான்ஸ் ஜெர்மனியிடம் இழக்க நேரிட்டது. |
| இளம் துருக்கியர் புரட்சி | 1908ஆம் ஆண்டில் துருக்கியில் ஒரு வலுவான நவீன அரசை உருவாக்கும் முயற்சியாக இளம் துருக்கியர் புரட்சி நடைபெற்றது. |
| பால்கன் போர் | ஆஸ்திரியாவிற்கும் செர்பியாவிற்குமான பகை 1914இல் பால்கன் போர் வெடிக்கக் காரணமாயிற்று. |
| புகாரெஸ்ட் உடன்படிக்கை | 1913ஆம் ஆண்டு புகாரெஸ்ட் உடன்படிக்கையோடு இரண்டாம் பால்கன் போர் முடிவடைந்தது, அல்பேனியா எனும் புதியநாடு உருவாக்கப்பட்டது. |
| ஜெர்மனி போர் அறிவிப்பு | 1914 ஆகஸ்டு திங்கள் முதல் நாள் ஜெர்மனி ரஷ்யாவிற்கு எதிராகப் போர் அறிவிப்பு செய்தது. |
| மைய நாடுகள் | ஜெர்மனி, ஆஸ்திரியா, ஹங்கேரி, துருக்கி, பல்கேரியா |
| லண்டன் ரகசிய ஒப்பந்தம் | 1915ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் பிரான்ஸ், இங்கிலாந்து, இத்தாலி ஆகிய நாடுகளிடையே லண்டனில் ரகசிய ஒப்பந்தமொன்று கையெழுத்தாயிற்று. |
| நேச நாடுகள் | ரஷ்யா, பிரான்ஸ், பிரிட்டன், இத்தாலி, அமெரிக்கா, பெல்ஜியம், ருமேனியா, செர்பியா, கிரீஸ் (9 நாடுகள்) |
| இரண்டாம் நிக்கோலஸ் | ரஷ்யப் பேரரசர் இரண்டாம் நிக்கோலஸ் உலகப்போரின் போது மன்னராக இருந்தார். |
| அமைதி மாநாடுகள் | 1899, 1907 ஆகிய ஆண்டுகளில் ஹாலந்து நாட்டின் தி ஹேக் நகரில் இரண்டு அமைதி மாநாடுகள் கூட்டப்பட்டன. |

| | |
|---|---|
| ☯ வெர்டன் போர் | *வெர்டன் போரில் இரண்டு மில்லியன் வீரர்கள் பங்கெடுத்தனர்.* |
| ☯ சோம்மி நதிப்போர் | *சோம்மி நதிப்போரில் இங்கிலாந்து 20,000 வீரர்களை இழந்தது.* |
| ☯ பிரேஸ்ட்-லிட்டோவ்ஸ்க் உடன்படிக்கை | *ரஷ்யா ஜெர்மனியோடு 1918ஆம் ஆண்டு மார்ச்திங்கள் 3ஆம் நாள் பிரேஸ்ட்-லிட்டோவ்ஸ்க் உடன்படிக்கையில் கையெழுத்திட்டு போரிலிருந்து விலகியது.* |
| ☯ ஜுட்லேண்டு போர் | *1916ஆம் ஆண்டு வடகடலில் கப்பற்படைப் போர் எனும் ஜுட்லேண்டு போரில் இங்கிலாந்து வெற்றிபெற்றது.* |
| ☯ எம்டன் கப்பல் | *எம்டன் கப்பல் சென்னை மீது குண்டுகளை வீசியது.* |
| ☯ உட்ரோவில்சன் | *குடியரசுத்தலைவர் உட்ரோவில்சன் ஜெர்மனிக்கு எதிராக 1917ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் போர்ப் பிரகடனம் செய்தார்.* |
| ☯ போர் நிறுத்தம் | *1918ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 11 போர் நிறுத்தம் முதல் நடைமுறைக்கு வந்தது.* |
| ☯ அமைதி மாநாடு | *பாரிஸ் அமைதி மாநாடு 1919ஆம் ஆண்டு ஜனவரி திங்களில் தொடங்கியது.* |
| ☯ வெர்சேல்ஸ் கண்ணாடி மாளிகை | *1919ஆம் ஜுன் திங்கள் 28ஆம் நாள் அமைதி உடன்படிக்கை வெர்சேல்ஸ் கண்ணாடி மாளிகையில் கையெழுத்திடப்பட்டது.* |
| ☯ முஸ்தபா கமால் பாட்சா | *துருக்கி மீண்டும் ஒரு நாடாக மறுபிறவி எடுப்பதற்கு முஸ்தபா கமால் பாட்சா காரணம்.* |
| ☯ தன்னாட்சி இயக்கம் | *முதல் உலகப்போர் இந்திய அரசியலில் தன்னாட்சி இயக்கம் உதயமாக வழிகோலியது.* |
| ☯ லெனின் | *லெனின் ரஷ்யாவில் கம்யூனிச அரசை நிறுவினார்.* |
| ☯ இரண்டாம் கேதரின் | *ரஷ்யாவில் மகா பீட்டரும், இரண்டாம் கேதரினும் ஐரோப்பியமயமாக்கலை மேற்கொண்டனர்.* |
| ☯ பண்ணை அடிமை முறை | *1861இல் சர் இரண்டாம் அலெக்ஸாண்டர் பண்ணை அடிமை முறையை ஒழித்து அவர்களை மீட்டார்.* |
| ☯ கபொன் | *1905ஆம் ஆண்டு ஜனவரி 22ஆம் நாளன்று கபொன் எனும் பாதிரியார் குருதி ஞாயிறு நிகழ்ந்தது.* |
| ☯ ரஸ்புட்டின் | *ரஸ்புட்டின் என்பவர், சார்மன்னரின் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவரால் கொலை செய்யப்பட்டார்.* |
| ☯ புதிய கம்யூனிஸ்ட் ஆட்சி | *1917ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 8ஆம் நாள் ரஷ்யாவில் புதிய கம்யூனிஸ்ட் அரசு ஆட்சிப் பொறுப்பேற்றது.* |
| ☯ போல்ஷ்விக் கட்சி | *போல்ஷ்விக் கட்சிக்கு ரஷ்யக் கம்யூனிஸ்ட் கட்சி எனப் புதுப் பெயரிடப்பெற்றது.* |
| ☯ பிராவ்தா | *பிராவ்தா (உண்மை) சோவியத் யூனியனின் கம்யூனிஸக் கட்சியினுடைய அதிகார பூர்வமான நாளேடாகும்.* |
| ☯ சர்வதேச சங்கம் | *பிரிட்டன், பிரான்ஸ், இத்தாலி, ஜப்பான், அமெரிக்கா ஆகிய நாடுகளே தொடக்கத்தில் இச்சபையின் நிரந்தர உறுப்பினர்கள் ஆவர்.* |
| ☯ ஜெனீவா | *சர்வதேச சங்கத்தின் செயலகம் ஜெனீவாவில் அமைந்து இருந்தது.* |
| ☯ எரிக் டிரம்மாண்ட் | *சர்வதேச சங்கத்தின் முதல் பொதுச் செயலாளர் பிரிட்டனைச் சேர்ந்த சர் எரிக் டிரம்மாண்ட் ஆவார்.* |
| ☯ தி ஹேக் | *பன்னாட்டு நீதிமன்றமானது 'தி ஹேக்' நகரில் அமைக்கப்பட்டது.* |
| ☯ பன்னாட்டு நீதிமன்றம் | *பன்னாட்டு நீதிமன்றமானது பதினைந்து நீதிபதிகளைக் கொண்டிருந்தது.* |
| ☯ சர்வதேச சங்கத்தில் சேர்தல் | *ஜெர்மனியும் ரஷ்யாவும் முறையே 1926, 1934 ஆகிய ஆண்டுகளில் சங்கத்தில் சேர்ந்தன.* |
| ☯ ஆலேண்டு தீவுகள் | *ஆலேண்டு தீவுகள் பின்லாந்திற்கே உரியது என சர்வதேச சங்கம் தீர்ப்பளித்தது.* |
| ☯ மஞ்சூரியவைத் தாக்குதல் | *1931ஆம் ஆண்டு ஜப்பான் மஞ்சூரியவைத் தாக்கியது.* |
| ☯ ரஷ்யாவின் வெளியேற்றம் | *1939 டிசம்பர் திங்கள் பின்லாந்தைத் தாக்கியதற்காக ரஷ்யாவை வெளியேற்றிய தேசங்கத்தின் இறுதியான உறுதியான நடவடிக்கையாகும்.* |
| ☯ கூட்டுப்பாதுகாப்பு | *சர்வதேச சங்கத்தால் கூட்டுப்பாதுகாப்பு என்ற கோட்பாட்டை நடைமுறைப்படுத்த முடியவில்லை.* |
| ☯ சங்கம் கலைப்பு | *1946ஆம் ஆண்டில் சர்வதேச சங்கம் கலைக்கப்பட்டது.* |

## புத்தக வினாக்கள்

### I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்.

1. முதல் உலகப்போரின் இறுதியில் நிலைகுலைந்து போன மூன்று பெரும் பேரரசுகள் யாவை?
**அ) ஜெர்மனி, ஆஸ்திரிய-ஹங்கேரி, உதுமானியர்** ஆ) ஜெர்மனி, ஆஸ்திரிய-ஹங்கேரி, ரஷ்யா
இ) ஸ்பெயின், போர்ச்சுகல், இத்தாலி ஈ) ஜெர்மனி, ஆஸ்திரிய-ஹங்கேரி, இத்தாலி

2. பத்தொன்பதாம் நூற்றாண்டு முடிவடையுந் தருவாயில் கிழக்கு ஆசியாவில் உதயமான வலிமை வாய்ந்த நாடு எது?
அ) சீனா **ஆ) ஜப்பான்** இ) கொரியா ஈ) மங்கோலியா

3. "ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்ச கட்டம்" எனக் கூறியவர் யார்? **(PTA -6)**
**அ) லெனின்** ஆ) மார்க்ஸ் இ) சன் யாட் சென் ஈ) மா சே துங்

4. மார்ன் போர் எதற்காக நினைவு கூறப்படுகிறது?
அ) ஆகாயப் போர்முறை **ஆ) பதுங்குக் குழிப்போர் முறை**
இ) நீர்மூழ்கிக் கப்பல் போர்முறை ஈ) கடற்படைப் போர்முறை

5. பன்னாட்டுச் சங்கத்தின் முதல் பொதுச்செயலாளர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?
**அ) பிரிட்டன்** ஆ) பிரான்ஸ் இ) டச்சு ஈ) அமெரிக்க ஐக்கிய நாடுகள்

6. பின்லாந்தைத் தாக்கியதற்காக பன்னாட்டுச் சங்கத்திலிருந்து வெளியேற்றப்பட்ட நாடு எது?
அ) ஜெர்மனி **ஆ) ரஷ்யா** இ) இத்தாலி ஈ) பிரான்ஸ்

#### கூடுதல் வினாக்கள்

7. எவ்விடத்தில் எத்தியோப்பியாவின் படை இத்தாலியின் படைகளைத் தோற்கடித்தது?
அ) டெல்வில்லி ஆ) ஆரஞ்சு நாடு **இ) அடோவா** ஈ) அல்ஜியர்ஸ்

8. உலக வரலாற்றின் திருப்பு முனையாக அமைந்த ஆண்டு ......................
அ) 1911 **ஆ) 1914** இ) 1919 ஈ) 1939

9. முதல் உலகப்போருக்கு முன்..................ஒப்புயர்வற்ற உலக முதலாளித்துவத்தின் தலைவராகவும் விளங்கியது.
அ) அமெரிக்கா ஆ) ரஷ்யா **இ) இங்கிலாந்து** ஈ) ஜெர்மனி

10. ஜப்பான் ..................தீபகற்பத்தை ஆர்தர் துறைமுகத்துடன் சேர்த்து இணைத்துக் கொண்டது.
அ) காண்டன் ஆ) ஹாங்காங் இ) ஷாங்காய் **ஈ) லியோடங்**

11. 1913ஆம் ஆண்டு .........உடன்படிக்கையின்படி அல்பேனியா எனும் புதியநாடு உருவாக்கப்பட்டது.
அ) பாரிஸ் **ஆ) லண்டன்** இ) புகாரெஸ்ட் ஈ) மாஸ்கோ

12. 1918இல் ...................................... நோயில் பல மில்லியன் மக்கள் மாண்டனர்.
அ) மலேரியா ஆ) பிளேக் **இ) இன்ஃப்ளுயன்ஸா** ஈ) பன்றி காய்ச்சல்

13. கடன்பட்ட ஒரு நாடாகப் போரில் நுழைந்த ...............போருக்குப் பின்னர் உலகத்திற்கே கடன் கொடுக்கும் நாடாக மேலெழுந்தது.
**அ) அமெரிக்கா** ஆ) ரஷ்யா இ) இங்கிலாந்து ஈ) ஜெர்மனி

14. ...................................... ரஷ்யாவில் கம்யூனிச அரசை நிறுவினார்.
**அ) லெனின்** ஆ) ஸ்டாலின் இ) மண்டேலா ஈ) மார்ஷல்

15. முதல் உலகப் போரின்போது ரஷ்யப் பேரரசின் தலைநகராக ........................இருந்தது.
அ) மாஸ்கோ ஆ) ஸ்டாலனிகிரேடு **இ) பெட்ரோகிரேடு** ஈ) லெனின்கிரேடு

16. சர்வதேச சங்கத்தின் செயலகம் அமைந்துள்ள இடம் ......................................
அ) பாரிஸ் **ஆ) ஜெனீவா** இ) வாஷிங்டன் ஈ) லண்டண்

17. பன்னாட்டு நீதிமன்றமானது ...................................... நகரில் அமைக்கப்பட்டது.
**அ) தி ஹேக்** ஆ) நியூயார்க் இ) வாஷிங்டன் ஈ) கலிபோர்னியா

18. ...................................... ஆம் ஆண்டில் சர்வதேச சங்கம் கலைக்கப்பட்டது.
அ) 1919 ஆ) 1939 இ) 1945 **ஈ) 1946**

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக

1. ***1894***ஆம் ஆண்டில் ஜப்பான் சீனாவுடன் வலுக்கட்டாயமாகப் போரிட்டது.
2. 1913ஆம் ஆண்டு மே மாதம் கையெழுத்திடப்பட்ட ***இலண்டன்*** உடன்படிக்கையின்படி அல்பேனியா எனும் புதிய நாடு உருவாக்கப்பட்டது.
3. ***1902***ஆம் ஆண்டில் ஜப்பான் இங்கிலாந்துடன் நட்பினை ஒப்பந்தம் செய்து கொண்டது.
4. பால்கனில் ***மாசிடோனியா*** நாடு பல்வகை இனமக்களைக் கொண்டிருந்தது.
5. டானென்பர்க் போரில் ***ரஷ்யா*** பேரிழப்புகளுக்கு உள்ளானது.
6. பாரிஸ் அமைதி மாநாட்டில் பிரதிநிதியாகப் பங்கேற்ற பிரான்ஸின் பிரதமர் ***கிளமென்சோ*** ஆவார்.
7. ***1925***ஆம் ஆண்டில் லொக்கர்னோ உடன்படிக்கை கையெழுத்திடப்பட்டது. **(PTA -1)**

### கூடுதல் வினாக்கள்

8. 1805ஆம் ஆண்டு ***டிரபால்கர்*** போரில் நெப்போலியன் தோல்வியடைந்தார்.
9. 1913ஆம் ஆண்டு ***புகாரெஸ்ட்*** உடன்படிக்கையோடு இரண்டாம் பால்கன் போர் முடிவடைந்தது.
10. ***ருமேனியா*** நாடு 1916ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் நேசநாடுகள் அணியில் இணைந்தது.
11. விஷவாயுவை அறிமுகம் செய்த நாடு ***ஜெர்மனி***
12. ***எம்டன்*** கப்பல் சென்னை மீது குண்டுகளை வீசியது
13. ***லூசிடானியா*** என்னும் அமெரிக்கக் கப்பல் ஜெர்மனியின் நீர்மூழ்கிக் கப்பலால் தாக்கப்பட்டு மூழ்கடிக்கப்பட்டது.
14. அமெரிக்க குடியரசுத் தலைவர் உட்ரோவில்சன் ***பதினான்கு*** அம்சத் திட்டத்தை நேசநாடுகள் பின்பற்றுவதற்காக முன்வைத்தார்.
15. 1861இல் ***சார் இரண்டாம் அலெக்ஸாண்டர்*** பண்ணை அடிமை முறையை ஒழித்து அவர்களை மீட்டார்.
16. ***பிராவ்தா*** சோவியத் யூனியனின் கம்யூனிஸக் கட்சியினுடைய அதிகார பூர்வமான நாளேடாகும்.
17. சர்வதேச சங்கம் ***ஐந்து*** உறுப்புகளைக் கொண்டிருந்தன
18. சர்வதேச சங்கத்தின் முதல் பொதுச் செயலாளர் ***சர் எரிக் டிரம்மாண்ட்*** ஆவார்.

## III. சரியான கூற்றைத் தேர்வு செய்யவும்.

1. i) துருக்கியப் பேரரசு, பால்கனில் துருக்கியரல்லாத பல இனமக்களைக் கொண்டிருந்தது.
ii) துருக்கி மையநாடுகள் பக்கம் நின்று போரிட்டது.
iii) பிரிட்டன் துருக்கியைத் தாக்கி கான்ஸ்டாண்டிநோபிளைக் கைப்பற்றியது.
iv) சூயஸ்கால்வாயைத் தாக்க துருக்கி மேற்கொண்ட முயற்சி முறியடிக்கப்பட்டது.
அ) i), ii) ஆகியன சரி ஆ) i), iii) ஆகியன சரி
இ) iv) சரி **ஈ) i), ii), iv) ஆகியன சரி**

2. **கூற்று:** ஜெர்மனியும் அமெரிக்காவும் மலிவான தொழிற்சாலைப் பொருள்களை உற்பத்தி செய்து இங்கிலாந்தின் சந்தையைக் கைப்பற்றின.
**காரணம்:** இரு நாடுகளும் தங்கள் தொழிற்சாலைகளுக்குத் தேவையான மூலப்பொருள்களை உற்பத்தி செய்தன.
அ) கூற்று, காரணம் ஆகிய இரண்டும் சரி.
**ஆ) கூற்று சரி, ஆனால் காரணம் கூற்றுக்கான விளக்கம் அல்ல.**
இ) கூற்று, காரணம் ஆகிய இரண்டும் தவறு
ஈ) காரணம் சரி ஆனால் கூற்று தவறு.

3. **கூற்று:** ஆப்பிரிக்காவில் குடியேற்றங்களை ஏற்படுத்துவதற்காக ஐரோப்பிய நாடுகள் மேற்கொண்ட முதற்கட்ட முயற்சிகள் ரத்தக்களரியான போர்களில் முடிந்தன.
**காரணம்** : சொந்த நாட்டு மக்களிடமிருந்து கடுமையான எதிர்ப்பு இருந்தது.
***அ) காரணம், கூற்று ஆகிய இரண்டும் சரி.***
ஆ) கூற்று சரி, ஆனால் காரணம் கூற்றுக்கான விளக்கம் அல்ல.
இ) கூற்று, காரணம் இரண்டுமே தவறு.
ஈ) காரணம் சரி ஆனால் கூற்று தவறு.

**கூடுதல் வினா**

4. i) முதல் உலகப்போர் வெடித்தபோது இத்தாலி நடுநிலைமை வகிக்கும் நாடாக இருந்தது.
ii) வெர்செய்ல்ஸ் அமைதி உடன்படிக்கையில் இத்தாலி பெரும் ஏமாற்றமடைந்தது.
iii) செவ்ரஸ் உடன்படிக்கை இத்தாலியுடன் கையெழுத்திடப்பட்டது.
iv) சிறிய இடங்களான ட்ரைஸ்டி, ஆஸ்திரியா, தெற்கு டைரோல் போன்றவைக் கூட இத்தாலிக்கு மறுக்கப்பட்டது. **(PTA- 4)**
***அ) i) மற்றும் ii) ஆகியன சரி*** ஆ) ii) சரி
இ) iv) சரி ஈ) i), iii) மற்றும் iv) ஆகியன சரி

## IV. பொருத்துக

1. பிரெஸ்ட்-லிடோவஸ்க் உடன்படிக்கை - அ) வெர்செய்ல்ஸ்
2. ஜிங்கோயிசம் - ஆ) துருக்கி
3. கமால் பாட்ஷா - இ) ரஷ்யாவும் ஜெர்மனியும்
4. எம்டன் - ஈ) இங்கிலாந்து
5. கண்ணாடி மாளிகை - உ) சென்னை

| விடைகள்: | 1 - இ | 2 - ஈ | 3 - ஆ | 4 - உ | 5 - அ |
|---|---|---|---|---|---|

**கூடுதல் வினா**

1. அமெரிக்கா - அ) கிளமென்சோ
2. இங்கிலாந்து - ஆ) கெய்சர் வில்லியம்
3. ரஷ்யா - இ) உட்ரோ வில்சன்
4. பிரான்சு - ஈ) லாயிட் ஜார்ஜ்
5. ஜெர்மனி - உ) சார் இரண்டாம் நிக்கோலஸ்

| விடைகள்: | 1 - இ | 2 - ஈ | 3 - உ | 4 - அ | 5 - ஆ |
|---|---|---|---|---|---|

## V. சுருக்கமாக விடையளிக்கவும்.

**1. சீன - ஜப்பானியப் போரின் முக்கியத்துவத்தை நீ எவ்வாறு மதிப்பீடு செய்வாய்?**
♣ 1894இல் நடைபெற்ற சீன - ஜப்பானிய போரில் சிறிய நாடான ஜப்பான் சீனாவைத் தோற்கடித்தது.
♣ மேலும் ரஷ்யா, ஜெர்மனி, பிரான்ஸ் ஆகிய வல்லரசுகளின் எச்சரிக்கையை மீறி ஜப்பான் லியோடங் தீபகற்பத்தை ஆர்தர் துறைமுகத்துடன் இணைத்துக் கொண்டது.
♣ இந்நடவடிக்கை மூலம் கிழக்கு ஆசியாவில் தானே வலிமைமிகுந்த அரசு என ஜப்பான் மெய்பித்தது.

**2. மூவர் கூட்டு நாடுகளின் பெயர்களைக் குறிப்பிடுக.**
♣ இங்கிலாந்து ♣ பிரான்ஸ் ♣ ரஷ்யா

**3. ஐரோப்பிய போர்க்குணம் வாய்ந்த தேசியவாதத்தின் மூன்று வடிவங்கள் எவை?**
♣ இங்கிலாந்தின் ஆரவாரமான நாட்டுப்பற்று (Jingoism)
♣ பிரான்சின் அதிதீவிரப்பற்று (Chauvinism)
♣ ஜெர்மனியின் வெறிகொண்ட நாட்டுப்பற்று (Kultur)

**4. பதுங்குக் குழி போர்முறை குறித்து நீங்கள் அறிந்ததென்ன? (PTA -3)**

- ♣ போர்வீரர்களால் தோண்டப்படும் பதுங்குக் குழிகள் எதிரிகளின் சுடுதலில் இருந்து தங்களைக் காத்துக்கொண்டு பாதுகாப்பாக நிற்க உதவின.
- ♣ பிரதானப் பதுங்குக் குழிகள் ஒன்றோடொன்றும் பின்புறமுள்ள குழிகளோடும் இணைக்கப்பட்டிருக்கும்.
- ♣ இப்பதுங்கு குழிகளின் வழியாக உணவு, ஆயுதங்கள், கடிதங்கள், ஆணைகள் ஆகியவை வந்துசேரும். புதிய வீரர்களும் வந்து சேர்வர்.

**5. முஸ்தபா கமால் பாட்சா வகித்த பாத்திரமென்ன?**

- ♣ துருக்கி மீண்டும் ஒரு நாடாக மறுபிறவி எடுப்பதற்கு முஸ்தபா கமால் பாட்சா வகித்த உன்னதமான பாத்திரமே முக்கிய காரணமாகும்.
- ♣ கமால் பாட்சா துருக்கி நாட்டிற்கு விடுதலையை மட்டும் பெற்றுத்தரவில்லை. அவர் துருக்கியை நவீனமயமாக்கி அதன் எதிர்மறையான அங்கீகாரத்திலிருந்தும் மாற்றியமைத்தார்.

**6. பன்னாட்டுச் சங்கத்தின் தோல்விக்கான ஏதேனும் இரண்டு காரணங்களைப் பட்டியலிடுக. (PTA -5)**

- ♣ பன்னாட்டு சங்கம் முதல் உலகப்போரில் வெற்றி பெற்ற நாடுகளின் அமைப்பாக மட்டும் இருந்தது.
- ♣ சங்கத்திற்கென்று இராணுவம் இல்லை என்பதால் தான் எடுத்த முடிவுகளை நடைமுறைப்படுத்த முடியவில்லை.
- ♣ அமைதிக்காக இவ்வமைப்பை உருவாக்கிய அமெரிக்கா இதன் உறுப்பினராகவில்லை.
- ♣ சர்வாதிகாரிகளால் தலைமையேற்கப்பட்ட இத்தாலி, ஜப்பான், ஜெர்மனி ஆகிய நாடுகள் சங்கத்தின் ஆணைகளுக்கு கட்டுப்பட மறுத்தன.

**கூடுதல் வினாக்கள்**

**7. வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின் ஏதேனும் இரண்டு சரத்துக்களை எழுதுக. (PTA -6)**

- ♣ போரைத்தொடங்கிய குற்றத்தைச் செய்தது ஜெர்மனி என்பதால் போர் இழப்புகளுக்கு ஜெர்மனி இழப்பீடு வழங்கவேண்டும் எனவும் மைய நாடுகள் அனைத்தும் போர் இழப்பீட்டுத்தொகையை வழங்கவும் வலியுறுத்தப்பட்டன.
- ♣ ஜெர்மன் படை 1,00,000 வீரர்களை மட்டுமே கொண்டதாக அளவில் சுருக்கப்பட்டது. சிறிய கப்பற்படையொன்றை மட்டுமே வைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டது.

**8. ரஷ்யப் புரட்சியின் உலகளாவிய தாக்கத்தினைக் கோடிட்டுக்காட்டுக.**

- ♣ ரஷ்யப் புரட்சி உலக மக்களின் கற்பனையைத் தூண்டியது.
- ♣ பல நாடுகளில் கம்யூனிஸ்ட் கட்சிகள் உருவாக்கப்பட்டன.
- ♣ ரஷ்ய கம்யூனிஸ்ட் அரசு காலனி நாடுகளை விடுதலைக்காக போராட ஊக்குவித்து அவர்களுக்கு முழுமையாக ஆதரவையும் நல்கியது.

**9. மைய நாடுகளின் பெயர்களை குறிப்பிடுக.**

♣ ஜெர்மனி ♣ ஆஸ்திரியா ♣ ஹங்கேரி ♣ துருக்கி ♣ பல்கேரியா

**10. மையநாடுகளை எதிர்த்த நேசநாடுகள் யாவை?**

♣ ரஷ்யா ♣ பிரான்ஸ் ♣ பிரிட்டன் ♣ இத்தாலி ♣ அமெரிக்கா
♣ பெல்ஜியம் ♣ ருமேனியா ♣ செர்பியா ♣ கிரீஸ் **(9 நாடுகள்)**

**11. முதல் உலகப்போரில் அமெரிக்கா ஈடுபட காரணம் என்ன?**

- ♣ லூசிடானியா என்னும் அமெரிக்க போர்க்கப்பல் ஜெர்மானிய நீர்மூழ்கிக் கப்பல்களால் தாக்கப்பட்டு மூழ்கடிக்கப்பட்டது.
- ♣ அமெரிக்கர்கள் பலர் உயிரிழந்தை கண்டித்து அமெரிக்க குடியரசுத்தலைவர் உட்ரோவில்சன் ஜெர்மனிக்கு எதிராக 1917 ஏப்ரல் திங்களில் போர்ப்பிரகடனம் செய்தார்.

**12. பன்னாட்டுச் சங்கத்தின் இரண்டு குறிக்கோள்கள் யாவை?**

- ♣ போர்களைத் தவிர்த்து உலகில் அமைதியை நிலைநாட்டுவது.
- ♣ சமூகப் பொருளாதார விசயங்களில் பன்னாட்டு ஒத்துழைப்பை மேம்படுத்துவது.

**13. பன்னாட்டு சங்கத்தின் ஐந்து உறுப்புகளை எழுதுக.**

- ♣ பொதுச்சபை
- ♣ செயற்குழு
- ♣ செயலகம்
- ♣ பன்னாட்டு நீதிமன்றம்
- ♣ பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பு

**14. வெர்டன் போர் - குறிப்பு வரைக.**

- ♣ 1916ஆம் ஆண்டு பிப்ரவரி - ஜுலை மாதங்களுக்கிடையே ஜெர்மானியர் பிரான்சின் முக்கியக் கோட்டையான வெர்டனைத் தாக்கினர்.
- ♣ ஐந்து மாத காலம் நடைபெற்ற வெர்டன் போரில் சரிபாதி வீரர்கள் கொல்லப்பட்டனர்.
- ♣ வெர்டன் போர் முதல் உலகப்போரில் நேச நாடுகளே வெற்றி பெறும் என்பதை தீர்மானித்தது.

**15. குருதி ஞாயிறு - குறிப்பு வரைக.**

- ♣ ரஷ்யாவின் மன்னர் சார் நிக்கோலஸின் ஆட்சியை எதிர்த்து கபான் எனும் பாதிரியார் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் பங்கேற்ற பேரணியை புனித பீட்டர்ஸ்பர்க் நகரின் குளிர்கால அரண்மனையை நோக்கி நடத்திச் சென்றார்.
- ♣ காவல்துறையும் இராணுவமும் அப்பேரணியின் மீது துப்பாக்கிச்சூடு நடத்தினர்.
- ♣ இதனால் நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டு, பல்லாயிரக்கணக்கானோர் காயமடைந்தனர்.
- ♣ 1905 ஜனவரி 22 ஞாயிறு அன்று ஏற்பட்ட இந்நிகழ்ச்சி 'குருதி ஞாயிறு' எனப்படுகிறது.

## VI. பின்வரும் வினாக்களுக்கு விரிவான விடையளிக்கவும்.

**1. முதல் உலகப்போருக்கான முக்கிய காரணங்களை விவாதி. (PTA-1)**

| முதல் உலகப்போருக்கான முக்கிய காரணங்கள் |
|---|
| அ) ஐரோப்பிய நாடுகளின் அணி சேர்க்கைகளும், எதிர்அணி சேர்க்கைகளும் |
| ஆ) வன்முறை சார்ந்த தேசியம் |
| இ) ஜெர்மனி பேரரசின் ஆக்கிரமிப்பு மனப்பாங்கு |
| ஈ) பிரான்ஸ் ஜெர்மனியோடு கொண்ட பகை |
| உ) பால்கன் பகுதியில் ஏகாதிபத்திய அரசியல் அதிகாரத்திற்கான வாய்ப்பு |
| ஊ) பால்கன் போர்கள் |
| எ) உடனடிக் காரணம் - ஆஸ்திரிய இளவரசர் படுகொலை |

**அ) ஐரோப்பிய நாடுகளின் அணி சேர்க்கைகளும், எதிர்அணி சேர்க்கைகளும்**

- ♣ 1900இல் ஐரோப்பிய வல்லரசுகளில் ஐந்து அரசுகள், இரண்டு ஆயுதமேந்திய முகாம்களாகப் பிரிந்தன.
- ♣ ஒரு முகாம் மையநாடுகளான ஜெர்மனி, ஆஸ்திரிய - ஹங்கேரி, இத்தாலி ஆகியவற்றைக் கொண்டிருந்தது. மற்றொரு முகாமில் பிரான்சும் ரஷ்யாவும் அங்கம் வகித்தன.
- ♣ இங்கிலாந்து, பிரான்ஸ், ரஷ்யா ஆகிய மூவரைக் கொண்ட மூவர்கூட்டு உருவாக்கப்பட்டது.

**ஆ) வன்முறைசார்ந்த தேசியம்**

- ♣ தேசப்பற்றின் வளர்ச்சியோடு "எனது நாடு சரியோ தவறோ நான் அதை ஆதரிப்பேன்" என்ற மனப்பாங்கும் வளர்ந்தது.
- ♣ ஒரு நாட்டின் மீதான பற்று மற்றொரு நாட்டை வெறுக்கும் தேவையை ஏற்படுத்தியது.

**இ) ஜெர்மனி பேரரசின் ஆக்கிரமிப்பு மனப்பாங்கு**

- ♣ ஜெர்மன் பேரரசர் இரண்டாம் கெய்சர் வில்லியம் ஜெர்மனியே உலகத்தின் தலைவன் எனப் பிரகடனம் செய்தார். ஜெர்மனியின் கப்பற்படை விரிவுபடுத்தப்பட்டது.
- ♣ இங்கிலாந்தும் கப்பற்படை விரிவாக்கப் போட்டியில் இறங்கவே இரு நாடுகளுக்குமிடையிலான பதற்றம் மேலும் அதிகரித்தது.

**ஈ) பிரான்ஸ் ஜெர்மனியோடு கொண்ட பகை**

- ♣ 1871இல் ஜெர்மனியால் தோற்கடிக்கப்பட்ட பிரான்ஸ், அல்சேஸ், லொரைன் பகுதிகளை ஜெர்மனியிடம் இழக்க நேரிட்டது. இது குறித்த கசப்பான நினைவுகளை பிரெஞ்சு மக்கள் ஜெர்மனியின் மீது கொண்டிருந்தனர்.
- ♣ மொராக்கோ விவகாரத்தில் ஜெர்மனியின் தலையீடு இக்கசப்புணர்வை மேலும் அதிகரித்தது.

**உ) பால்கன் பகுதியில் ஏகாதிபத்திய அரசியல் அதிகாரத்திற்கான வாய்ப்பு**

- ♣ இளம் துருக்கியர் புரட்சி ஆஸ்திரியாவும் ரஷ்யாவும் பால்கன் பகுதிகளில் தங்கள் நடவடிக்கைகளை மீண்டும் தொடங்கும் வாய்ப்பினை வழங்கியது.
- ♣ பாஸ்னியாவையும் ஹெர்சகோவினாவையும் ஆஸ்திரியா இணைத்துக் கொண்டதாக வெளியான அறிவிப்பு செர்பியாவில் தீவிரமான எதிர்ப்பை தூண்டியது.
- ♣ ஆஸ்திரியா செர்பியாவின் மீது படையெடுக்கும்போது, செர்பியாவிற்கு ரஷ்யா உதவினால், ஆஸ்திரியாவிற்கு ஆதரவாக நான் களமிறங்குவேன் என ஜெர்மனி அறிவித்தது.
- ♣ ஆஸ்திரியாவிற்கும் செர்பியாவிற்குமான இப்பகை 1914இல் போர் வெடிக்கக் காரணமாயிற்று.

**ஊ) பால்கன் போர்கள்**

- ♣ பால்கன் பகுதியை சேர்ந்த துருக்கியரும் துருக்கியரல்லாதவரும் பயங்கரமான படுகொலைகளிலும் அட்டூழியங்களிலும் ஈடுபட்டனர்.
- ♣ இதனால் கிரீஸ், செர்பியா, பல்கேரியா, மாண்டி நீக்ரோ ஆகிய நாடுகள் ஒன்றிணைந்து பால்கன் கழகம் எனும் அமைப்பை உருவாக்கி, துருக்கியப் படைகளை முதல் பால்கன் போரில் தோற்கடித்தனர்.
- ♣ மாசிடோனியாவைர் பிரித்தளித்தலில் செர்பியாவையும் கிரீஸையும் பல்கேரியா தாக்கியது. இது இரண்டாம் பால்கன் போராகும்.

**எ) உடனடிக் காரணம் - ஆஸ்திரிய இளவரசர் படுகொலை**

- ♣ 1914ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 28ஆம் நாள் ஆஸ்திரிய பேரரசரின் மகனான பிரான்ஸ் பெர்டினாண்டு, பிரின்ஸப் எனும் பாஸ்னிய செர்பியனால் கொலைசெய்யப்பட்டார்.
- ♣ ஆஸ்திரியா இதனை செர்பியாவைக் கைப்பற்றுவதற்கான வாய்ப்பாக எண்ணியது.
- ♣ செர்பியாவிற்கு ஆதரவாகத் ரஷ்யா படைகளை திரட்டுகிறது எனும் வதந்தியால், ஜெர்மனி ரஷ்யாவிற்கு எதிராகப் போர்அறிவிப்பு செய்தது.

2. **ஜெர்மனியுடன் தொடர்புடைய வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின் சரத்துக்களை கோடிட்டுக்காட்டுக.** **(PTA -2)**

| வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின் சரத்துக்கள் |
|---|
| அ) இழப்பீட்டுத் தொகை வழங்குதல் |
| ஆ) படை வைத்துக்கொள்ள அனுமதி |
| இ) ஒருங்கிணைப்புக்கு தடை |
| ஈ) பன்னாட்டு சங்கத்தின் பாதுகாப்பு நாடுகள் |
| உ) உடன்படிக்கைகள் மீதான வற்புறுத்தல் |

**அ) இழப்பீட்டுத் தொகை வழங்குதல்**

போரைத்தொடங்கிய குற்றத்தைச் செய்தது ஜெர்மனி என்பதால் போர் இழப்புகளுக்கு ஜெர்மனி இழப்பீடு வழங்கவேண்டும் எனவும் மைய நாடுகள் அனைத்தும் போர் இழப்பீட்டுத்தொகையை வழங்கவும் வலியுறுத்தப்பட்டன.

**ஆ) படை வைத்துக்கொள்ள அனுமதி**

ஜெர்மன் படை 1,00,000 வீரர்களை மட்டுமே கொண்டதாக அளவில் சுருக்கப்பட்டது. சிறிய கப்பற்படையொன்றை மட்டுமே வைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டது.

**இ) ஒருங்கிணைப்புக்கு தடை**

ஆஸ்திரியா, ஜெர்மனி ஆகிய இரண்டின் ஒருங்கிணைப்பு தடைசெய்யப்பட்டது.

**ஈ) பன்னாட்டு சங்கத்தின் பாதுகாப்பு நாடுகள்**

ஜெர்மனியின் அனைத்து காலனிகளும் பன்னாட்டு சங்கத்தின் பாதுகாப்பு நாடுகளாக ஆக்கப்பட்டன.

**உ) உடன்படிக்கைகள் மீதான வற்புறுத்தல்**

- ♣ ரஷ்யாவுடன் செய்து கொள்ளப்பட்ட பிரெஸ்ட்-லிடோவஸ்க் உடன்படிக்கையையும் பல்கேரியாவுடன் மேற்கொள்ளப்பட்ட புகாரெஸ்ட் உடன்படிக்கையையும் திரும்பப் பெற்றுக் கொள்ள ஜெர்மனி வற்புறுத்தப்பட்டது.
- ♣ ஜெர்மனியின் அல்சேஸ்-லொரைன் பகுதிகள் பிரான்சுக்குத் திருப்பித் தரப்பட்டன.

www.Padasalai.Net



3. **லெனின் தலைமையிலான ரஷ்யப் புரட்சியின் போக்கினை விளக்குக.**

**அ) ரஷ்யப்புரட்சி:**

முதல் உலகப்போரின் விளைவு உலக வரலாற்றில் தனித்தன்மை கொண்ட ரஷ்யப்புரட்சியாகும்.

**ஆ) ரஷ்யாவில் கம்யூனிய அரசு:**

சார் மன்னர் பதவி விலகியதைத் தொடர்ந்து பொறுப்பேற்ற பூர்ஷ்வாக்கள் போரைத்தொடர விரும்பினர். அதனால் லெனின் ஆட்சியைக் கைப்பற்றி ரஷ்யாவில் கம்யூனிச அரசை நிறுவினார்.

**இ) லெனின் தலைமையிலான ரஷ்யப் புரட்சியின் போக்கு**

- ♣ 1907ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில், லெனின் போல்ஷ்விக் கட்சியின் மத்தியக் குழுவை உடனடிப் புரட்சி குறித்து முடிவு செய்யக் கேட்டுக்கொண்டார்.
- ♣ டிராட்ஸ்கி ஒரு விரிவான திட்டத்தைத் தயாரித்தார்.
- ♣ நவம்பர் திங்கள் 7ஆம் நாள் முக்கியமான அரசுக் கட்டிடங்கள், குளிர்கால அரண்மனை, பிரதம மந்திரியின் தலைமை அலுவலகங்கள் ஆகியவை உட்பட அனைத்தும் ஆயுதம் ஏந்திய ஆலைத் தொழிலாளர்களாலும், புரட்சிப்படையினராலும் கைப்பற்றப்பட்டன.
- ♣ 1917ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 8ஆம் நாள் ரஷ்யாவில் புதிய கம்யூனிஸ்ட் அரசு ஆட்சிப் பொறுப்பேற்றது.
- ♣ போல்ஷ்விக் கட்சிக்கு ரஷ்யக் கம்யூனிஸ்ட் கட்சி எனப் புதுப் பெயரிடப்பெற்றது.

4. **பன்னாட்டு சங்கத்தின் பணிகளை மதிப்பிடுக.** **(PTA - 4)**

➔ **பன்னாட்டு சங்கம்:**

- ♣ பன்னாட்டு சங்கத்தின் முதன்மை குறிக்கோள் போர்களைத் தவிர்த்து உலகில் அமைதியை நிலைநாட்டுவதே ஆகும்.
- ♣ 1920-1925 ஆகிய ஆண்டுகளிடையே பன்னாட்டுசங்கம் பல சிக்கல்களைத் தீர்த்து வைக்க அழைக்கப்பட்டது. மூன்று பிரச்சனைகளைத் தீர்த்துவைப்பதில் சங்கம் வெற்றிபெற்றது.

➔ **பன்னாட்டு சங்கத்தின் பணிகள்**

**அ) ஆலேண்டு தீவுகள் பிரச்சனைக்கான தீர்வு**

1920ஆம் ஆண்டில் பின்லாந்தின் மேற்குக் கடற்கரைக்கும் சுவீடனின் கிழக்குக் கடற்கரைக்கும் இடையில் அமைந்திருந்த ஆலேண்டு தீவுகள் யாருக்குச் சொந்தம் என்ற பிரச்சனையில் அத்தீவு பின்லாந்திற்கே உரியது என தீர்ப்பளித்தது.

**ஆ) சைலேஷியா எல்லை பிரச்சனை முடிவு**

1921ல் போலந்திற்கும் ஜெர்மனிக்குமிடையே மேலை சைலேஷியா பகுதியில் எல்லைப் பிரச்சனை ஏற்பட்ட, பிரச்சனையை சங்கம் வெற்றிகரமாகத் தீர்த்துவைத்தது.

**இ) கிரீஸ் போர் இழப்பீடு வழங்குதல்**

கிரீஸ் பல்கேரியாவின் மீது படையெடுத்தபோது பன்னாட்டு சங்கம் போர் நிறுத்தம் செய்ய உத்தரவிட்டது. விசாரணைக்குப்பின் சங்கம் கிரிஸுன் மீது குற்றம் நாட்டி கிரீஸ் போர் இழப்பீடு வழங்க வேண்டுமெனத் தீர்மானித்தது.

**VIII. நிலவரைபடப் பயிற்சி (இப்புத்தகத்தின் பின் இணைப்பை பார்க்கவும்)**

www.Padasalai.Net

# புவியியல்

# 1. இந்தியா – அமைவிடம், நிலத்தோற்றம் மற்றும் வடிகாலமைப்பு

## முக்கிய குறிப்புகள்

| | |
|---|---|
| இந்தியாவின் நிலை | இந்தியா பரப்பளவில் உலகின் ஏழாவது பெரிய நாடாகவும் ஆசியா கண்டத்தின் இரண்டாவது பெரிய நாடாகவும் உள்ளது. |
| இந்தியாவின் நிலப்பரப்பு | இந்தியாவின் நிலப்பரப்பு 32,87,263 ச.கி.மீ ஆகும். |
| இந்தியாவின் நில, நீர் எல்லைகள் | **நில எல்லைகள்**<br>வடக்கு – சீனா, நேபாளம், பூடான்<br>வடமேற்கு – பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான்<br>கிழக்கு – வங்காள தேசம், மியான்மர்<br>**நீர் எல்லைகள்**<br>கிழக்கு – வங்காள விரிகுடா<br>மேற்கு – அரபிக்கடல்<br>தெற்கு – இந்தியப்பெருங்கடல் |
| பாக்நீர்சந்தி | இந்தியாவையும் இலங்கையையும் பிரிக்கும் குறுகிய ஆழமற்ற கடல் பகுதி பாக்நீர்சந்தி ஆகும். |
| இந்தியாவின் திட்ட நேரம் | இந்திய திட்ட நேரமானது கீரீன்வீச் சராசரி நேரத்தைவிட 5 மணி 30 நிமிடம் முன்னதாக உள்ளது. |
| துணைக் கண்டம் | பாகிஸ்தான், மியான்மர், வங்காளதேசம், நேபாளம், பூடான் மற்றும் இலங்கை ஆகிய நாடுகளுடன் இணைந்து இந்தியா துணைக்கண்டமாக உள்ளது. |
| உலகின் கூரை | பாமீர் முடிச்சு உலகின் கூரை என அழைக்கப்படுகிறது. |
| பனி உறைவிடம் | இமாலயா என்ற சொல் சமஸ்கிருத மொழியில் "பனி உறைவிடம்" என அழைக்கப்படுகிறது. |
| இயற்கை பிரிவுகள் | வடக்கு மலைகள், வடபெரும் சமவெளிகள், தீபகற்ப பீடபூமிகள், கடற்கரைச் சமவெளிகள் மற்றும் தீவுகள். |
| இந்தியாவின் வடிகாலமைப்பு | வடிகாலமைப்பு என்பது முதன்மை ஆறும், துணை ஆறும், இணைந்து மேற்பரப்பு நீரை கடல், ஏரி அல்லது நீர்நிலையில் சேர்க்கும் செயல் ஆகும்.<br>1. இமயமலையில் தோன்றும் ஆறுகள்: சிந்து, கங்கை, பிரம்மபுத்திரா<br>2. தீபகற்ப இந்திய ஆறுகள்: நர்மதை, தபதி, மகாநதி, கோதாவரி, கிருஷ்ணா, காவிரி. |
| மலபார் கடற்கரை | மேற்கு கடற்கரைச் சமவெளியின் தென்பகுதி மலபார் கடற்கரை என அழைக்கப்படுகிறது. |
| சோழ மண்டல கடற்கரை | கிருஷ்ணா மற்றும் காவேரி ஆற்றிற்கு இடைப்பட்டப் பகுதி சோழ மண்டல கடற்கரை என அழைக்கப்படுகிறது. |
| ஒரே செயல்படும் எரிமலை | இந்தியாவின் ஒரே செயல்படும் எரிமலை அந்தமான் நிகோபர் தீவுக்கூட்டத்தில் உள்ள பாரன் தீவாகும். |
| நிர்வாகத் தலைநகரம் | அந்தமான் நிகோபரின் நிர்வாகத் தலைநகரம் போர்ட்பிளேயர் ஆகும். |
| இந்திரா முனை | நிகோபரின் தென்கோடி முனை "இந்திரா முனை" என்று அழைக்கப்படுகிறது. |
| பிட் தீவு | இலட்சத்தீவில் மனிதர்கள் வசிக்காத பிட் தீவு, பறவைகள் சரணாலயத்திற்கு பெயர் பெற்றது. |
| வற்றாத ஜீவ நதிகள் | இமய மலையில் உற்பத்தியாகும் ஆறுகள் அனைத்தும் வற்றாத ஜீவ நதிகள் என்று அழைக்கப்படுகின்றன. |
| தீபகற்ப ஆறுகள் | தென் இந்தியாவில் பாயும் ஆறுகள் தீபகற்ப ஆறுகள் எனப்படுகின்றன. |

## புத்தக வினாக்கள்

### I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்.

1. இந்தியாவின் வடக்கு தெற்கு பரவல ________
   அ) 2500 கி.மீ  ஆ) 2933 கி.மீ  ***இ) 3214 கி.மீ***  ஈ) 2814 கி.மீ

2. பீகாரின் துயரம் என்று அழைக்கப்படும் ஆறு ________
   அ) நர்மதா  ஆ) கோதாவரி  ***இ) கோசி***  ஈ) தாமோதர்

3. மூன்று பக்கம் நீரால் சூழப்பட்ட பகுதி ________ என அழைக்கப்படுகிறது. **(PTA -3)**
   அ) கடற்கரை  ***ஆ) தீபகற்பம்***  இ) தீவு  ஈ) நீர்ச்சந்தி

4. பாக் நீர்சந்தி மற்றும் மன்னார் வளைகுடா ________ஐ இந்தியாவிடமிருந்து பிரிக்கிறது. **(PTA -4)**
   அ) கோவா  ஆ) மேற்கு வங்காளம்  ***இ) இலங்கை***  ஈ) மாலத்தீவு

5. தென்னிந்தியாவின் மிக உயரமான சிகரம் ________ **(PTA -2, MDL -19)**
   அ) ஊட்டி  ***ஆ) ஆனை முடி***  இ) கொடைக்கானல்  ஈ) ஜின்டா கடா

6. பழைய வண்டல் படிவுகளால் உருவான சமவெளி ________
   அ) பாபர்  ஆ) தராய்  ***இ) பாங்கர்***  ஈ) காதர்

7. பழவேற்காடு ஏரி ________ மாநிலங்களுக்கிடையே அமைந்துள்ளது. **(PTA -1)**
   அ) மேற்கு வங்காளம் மற்றும் ஒடிசா  ஆ) கர்நாடகா மற்றும் கேரளா
   இ) ஒடிசா மற்றும் ஆந்திரப் பிரதேசம்  ***ஈ) தமிழ்நாடு மற்றும் ஆந்திரப் பிரதேசம்***

#### கூடுதல் வினாக்கள்

8. ________ ஆறு விருத்த கங்கா என அழைக்கப்படுகிறது. **(PTA -6)**
   அ) கிருஷ்ணா  ***ஆ) கோதாவரி***  இ) நர்மதை  ஈ) காவிரி

9. இந்தியாவிற்கு சொந்தமான இரண்டு தீவுகள் எவை? **(PTA -6)**
   அ) அந்தமான் மற்றும் நிகோபார்  ***ஆ) அந்தமான் நிகோபார் மற்றும் லட்சத் தீவுகள்***
   இ) மாலத்தீவு மற்றும் நிகோபார்  ஈ) இலங்கை மற்றும் அந்தமான்

10. இந்தியாவின் பழைய தென்கோடி முனை ________
    அ) அந்தமான்  ஆ) கன்னியாகுமரி  ***இ) இந்திராமுனை***  ஈ) காவரட்தி

11. இமயமலையின் கிழக்கு - மேற்கு பரவல்
    ***அ) 2500 கி.மீ***  ஆ) 2400 கி.மீ  இ) 800 கி.மீ  ஈ) 2200 கி.மீ

12. தக்காண பீடபூமியின் பரப்பளவு ________ சதுர கி.மீ ஆகும்.
    அ) 6 லட்சம்  ஆ) 8 லட்சம்  இ) 5 லட்சம்  ***ஈ) 7 லட்சம்***

13. புவியில் மொத்த பரப்பளவில் இந்தியா ________ சதவீதமாகும்.
    அ) 3.2  ***ஆ) 2.4***  இ) 5.2  ஈ) 7.1

14. இந்தியாவையும் இலங்கையையும் பிரிக்கும் பகுதி ________ ஆகும்.
    அ) மன்னார் வளைகுடா  ***ஆ) பாக்நீர்சந்தி***
    இ) இந்திய பெருங்கடல்  ஈ) வங்காள விரிகுடா

15. 23°30' வட அட்சமான ________ இந்தியாவை இரு பெரும் பகுதிகளாக பிரிக்கிறது.
    ***அ) கடகரேகை***  ஆ) மகரரேகை  இ) நிலநடுக்கோடு  ஈ) தீர்க்கரேகை

16. ________ உலகின் கூரை என அழைக்கப்படுகிறது.
    அ) இமயமலை  ஆ) திபெத் பீடபூமி  ***இ) பாமீர் முடிச்சு***  ஈ) எவரெஸ்ட்

17. ________ என்ற சொல் சமஸ்கிருத மொழியில் “பனி உறைவிடம்” என அழைக்கப்படுகிறது.
    அ) இமாச்சல்  ஆ) சிவாலிக்  ***இ) இமாலயா***  ஈ) இமாத்ரி

18. ______________ மலையில் முக்கியமானவை எவரெஸ்ட் மற்றும் கஞ்சன் ஜங்கா ஆகும்.
அ) இமாச்சல் ஆ) சிவாலிக் இ) இமாலயா **ஈ) இமாத்ரி**

19. ________________ மலையில் கங்கோத்திரி, சியாச்சின் போன்ற பனியாறுகள் காணப்படுகின்றன.
அ) இமாச்சல் ஆ) சிவாலிக் இ) இமாலயா **ஈ) இமாத்ரி**

20. பீர்பாஞ்சல், தவ்லதார், மற்றும் மகாபாரத் ஆகிய மலைகள் _________ தொடரில் காணப்படுகின்றன.
**அ) இமாச்சல்** ஆ) சிவாலிக் இ) இமாலயா ஈ) இமாத்ரி

21. சிம்லா, முசௌரி, நைனிடால், அல்மோரா, ராணிகட் மற்றும் டார்ஜிலிங் போன்ற கோடைவாழிடங்கள் _______________ மலைத் தொடரில் அமைந்துள்ளன.
**அ) இமாச்சல்** ஆ) சிவாலிக் இ) இமாலயா ஈ) இமாத்ரி

22. ____________________ மலையின் சராசரி உயரம் 1000 மீ ஆகும்
அ) இமாச்சல் **ஆ) சிவாலிக்** இ) இமாலயா ஈ) இமாத்ரி

23. இமயமலையின் கிழக்கு கிளை ____________________ குன்றுகளாகும்.
அ) இமாச்சல் ஆ) சிவாலிக் **இ) பூர்வாஞ்சல்** ஈ) இமாத்ரி

24. வடபெரும் சமவெளி ____________________ சதுர கிலோ மீட்டர் பரப்பளவிற்கு பரவியுள்ளது.
அ) 5 லட்சம் ஆ) 6 லட்சம் **இ) 7 லட்சம்** ஈ) 8 லட்சம்

25. _______________________ ஆறு தீபகற்ப பீடபூமியை இரு பெரும் பகுதிகளாக பிரிக்கின்றது.
அ) தபதி ஆ) சரஸ்வதி இ) சபர்மதி **ஈ) நர்மதை**

26. ஆரவல்லி மலைத் தொடரின் மிக உயரமான சிகரம் ______________________ ஆகும்.
அ) எவரெஸ்ட் **ஆ) குருசிகார்** இ) அபு மலை ஈ) கே2

27. ___________ பீடபூமி இரும்புத்தாது மற்றும் நிலக்கரி போன்ற கனிம வளத்திற்கு புகழ்பெற்றது.
**அ) சோட்டாநாகபுரி** ஆ) தக்காண இ) மாளவ ஈ) பண்டேல்கண்ட்

28. கிழக்கு தொடர்ச்சி மலைகளும், மேற்கு தொடர்ச்சி மலைகளும், _________ மலையில் ஒன்றிணைகின்றன.
அ) ஆனைமலை **ஆ) நீலகிரி** இ) தொட்டபெட்டா ஈ) ஆனைமுடி

29. ____________ ஏரி மேற்கு கடற்கரைச் சமவெளி பகுதியில் உள்ள ஒரு முக்கியமான ஏரியாகும்.
அ) சிலிக்கா ஆ) கொல்லேறு இ) பழவேற்காடு **ஈ) வேம்பநாடு**

30. இந்தியாவின் மிகப்பெரிய காயல் ஏரி _______________
**அ) சிலிகா** ஆ) கொல்லேறு இ) பழவேற்காடு ஈ) வேம்பநாடு

31. கோதாவரி டெல்டா பகுதியில் அமைந்துள்ள நன்னீர் ஏரி_____________
அ) சிலிக்கா **ஆ) கொல்லேறு** இ) பழவேற்காடு ஈ) வேம்பநாடு

32. தமிழ்நாடு மற்றும் ஆந்திரப்பிரதேச எல்லையில் ____________________ ஏரி அமைந்துள்ளது.
அ) சிலிக்கா ஆ) கொல்லேறு **இ) பழவேற்காடு** ஈ) வேம்பநாடு

33. இந்தியாவின் ஒரே செயல்படும் எரிமலை எங்குள்ளது?
அ) இந்திரா முனை **ஆ) அந்தமான் நிக்கோபார் தீவுகள்**
இ) இலட்சத்தீவுகள் ஈ) நிக்கோபார் தீவுகள்

34. தீபகற்ப ஆறுகளில் இரண்டாவது பெரிய நதி _______________
அ) கிருஷ்ணா ஆ) நர்மதை இ) காவிரி **ஈ) கோதாவரி**

35. ____________________ தென் இந்தியாவின் கங்கை என்றும் அழைக்கப்படுகிறது.
அ) கிருஷ்ணா ஆ) நர்மதை **இ) காவிரி** ஈ) கோதாவரி

36. இந்தியாவில் மேற்கு நோக்கி பாயும் ஆறுகளில் நீளமானது ____________________
அ) கிருஷ்ணா **ஆ) நர்மதை** இ) காவிரி ஈ) கோதாவரி

37. காம்பே வளைகுடா வழியாக அரபிக் கடலில் கலக்கும் நதி _________________
**அ) தபதி** ஆ) நர்மதை இ) காவிரி ஈ) கோதாவரி

www.Padasalai.Net



## II. பொருத்துக

1. சாங்போ **(MDL -19)** - அ) கங்கை ஆற்றின் துணை ஆறு
2. யமுனை - ஆ) இந்தியாவின் உயர்ந்த சிகரம்
3. புதிய வண்டல் படிவுகள் - இ) பிரம்மபுத்திரா
4. காட்வின் ஆஸ்டின் (K2) - ஈ) தென்கிழக்கு கடற்கரைச் சமவெளி
5. சோழ மண்டலக்கடற்கரை - உ) காதர்

| விடைகள்: | 1 - இ | 2 - அ | 3 - உ | 4 - ஆ | 5 - ஈ |
|---|---|---|---|---|---|

### கூடுதல் வினாக்கள்

1. திபெத்தியன் இமயமலை - அ) பாகிஸ்தான்
2. கஞ்சன் ஜங்கா - ஆ) பூர்வாஞ்சல் குன்றுகள்
3. முசௌரி - இ) மேற்கு இமயமலை
4. மியான்மர் - ஈ) பெரிய இமயமலை
5. போலன் கணவாய் - உ) சிறிய இமயமலை

| விடைகள்: | 1 - இ | 2 - ஈ | 3 - உ | 4 - ஆ | 5 - அ |
|---|---|---|---|---|---|

1. பாங்கர் சமவெளி - அ) கிழக்கு தொடர்ச்சி மலை
2. புஷ்கர் ஏரி - ஆ) வண்டல் விசிறி
3. பிரம்மபுத்திரா சமவெளி - இ) இராஜஸ்தான் சமவெளி
4. பூர்வாதிரி - ஈ) மேற்கு தொடர்ச்சி மலை
5. சயாத்ரி - உ) மேட்டு நில வண்டல்

| விடைகள்: | 1 - உ | 2 - இ | 3 - ஆ | 4 - அ | 5 - ஈ |
|---|---|---|---|---|---|

## III. காரணம் கூறுக.

**1. இமயமலைகள் மடிப்புமலைகள் என அழைக்கப்படுகின்றன.**

- ♣ இமய மலைகள் சில மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் உருவாகியவை.
- ♣ மேலும் இவை புவி மேலோட்டு பேரியக்க விசைகள் காரணமாக புவி மேலோடு மடிக்கப்பட்டு, மடிப்பு மலைகளாக உருவாகின.

**2. வட இந்திய ஆறுகள் வற்றாத ஆறுகள்**

- ♣ வட இந்திய ஆறுகள் வடக்கே இமயமலையில் உள்ள பனி உறைந்த மலைகளில் இருந்து உருவாகின்றன.
- ♣ இந்த ஆறுகள் பருவ காலங்களில் மழையிலிருந்தும், கோடைக்காலங்களில் பனி உறைந்த மலைகளிலிருந்தும் நீரைப் பெறுவதால் வற்றாத ஆறுகள் எனப்படுகின்றன.

**3. தென்னிந்திய நதிகள் கிழக்கு நோக்கிப் பாயும் நதிகள்**

- ♣ தென்னிந்திய நதிகள் பெரும்பாலும் மேற்கு தொடர்ச்சி மலைகளில்தான் உற்பத்தியாகின்றன. மேலும் இந்த ஆறுகள் செங்குத்து சரிவுடன் கூடிய பள்ளத்தாக்கு வழியே பாய்கின்றது.
- ♣ தென்னிந்தியாவின் நில அமைப்பு கிழக்கு நோக்கி சாய்ந்திருக்கிறது எனவே இவை கிழக்கு நோக்கி பாய்ந்து சமவெளிகளை உருவாக்கி வங்காள விரிகுடாவில் கலக்கிறது.

**4. மேற்கு நோக்கிப் பாயும் நதிகள் டெல்டாவை உருவாக்குவதில்லை.**

- ♣ மேற்கு நோக்கி பாயும் ஆறுகள் நர்மதை, தபதி இரண்டும் விந்தியா, சாத்பூரா மலைத் தொடரில் உற்பத்தியாகிறது. இவை நீண்ட கழிமுகத்தை உருவாக்குகின்றது.
- ♣ உற்பத்தியாகும் மலைக்கும், கடற்கரைக்கும் இடையே சமவெளிப் பகுதிகள் குறைவாக இருக்கிறது.
- ♣ கரடு முரடான ஏற்றத்தாழ்வு கொண்ட மலைப் பள்ளத்தாக்குகள் இடையே கடலில் பாய்வதால் டெல்டாக்களை உருவாக்க முடியவில்லை.

### கூடுதல் வினாக்கள்

**5. வடக்கு கிழக்கு மாநிலங்கள் “ஏழு சகோதரிகள்” என அழைக்கப்படுகின்றன.**

வட கிழக்கில் உள்ள ஏழு மாநிலங்களும் ஒரே மாதிரியான புவித்தோற்றத்தை கொண்டிருப்பதாலும், சமூக, பொருளாதார மற்றும் அரசியல் அமைப்புகளில் ஒன்றையொன்று சார்ந்து காணப்படுவதாலும் அவை ஏழு சகோதரிகள் என அழைக்கப்படுகின்றன.

6. **கோதாவரி ஆறு விருத்தகங்கா என அழைக்கப்படுகிறது.**
வட இந்தியாவில் கங்கை ஆற்றினைப் போல தீபகற்ப இந்தியாவில் கோதாவரி ஆறு மிக நீளமாகவும், அதிகப் பரப்பளவு கொண்ட வடிநிலங்களையும் கொண்டதால் விருத்தகங்கா என அழைக்கப்படுகிறது.

7. **சோட்டா நாகபுரி பீடபூமி கனிம வளம் நிறைந்தது.**
   - ♣ சோட்டா நாகபுரி பீடபூமி தீப்பாறை மற்றும் உருமாறிய பாறைகளால் ஆனது.
   - ♣ இப்பகுதி இரும்புத்தாது மற்றும் நிலக்கரி போன்ற கனிம வளத்திற்கு புகழ் பெற்றது.
   - ♣ இது கனிம வளங்களின் சேமிப்பு பெட்டகம் என்றும் அழைக்கப்படுகிறது.

## IV. வேறுபடுத்துக

1. **இமயமலை ஆறுகள் மற்றும் தீபகற்ப ஆறுகள்** **(PTA - 5)**

| | இமயமலை ஆறுகள் | தீபகற்ப ஆறுகள் |
|---|---|---|
| அ) | வட இந்தியாவில் பாய்கின்றன. | தென் இந்தியாவில் பாய்கின்றன. |
| ஆ) | இமய மலையில் உற்பத்தியாகின்றன. | மேற்குதொடர்ச்சிமலையில் உற்பத்தியாகின்றன. |
| இ) | இவை வற்றாத ஜீவநதிகள் | இவை பருவகாலங்களுக்கு ஏற்ப வற்றுகின்றன. |
| ஈ) | இவ்வாறுகளால் நீர்மின் உற்பத்தி செய்ய முடியாது. | இவ்வாறுகளால் நீர்மின் உற்பத்தி செய்ய முடிகிறது. |
| உ) | நீர்வழிப் போக்குவரத்து நடைபெறுகிறது. | நீர்வழிப் போக்குவரத்து நடைபெறுவதில்லை. |

2. **மேற்குத் தொடர்ச்சி மலைகள் மற்றும் கிழக்கு தொடர்ச்சி மலைகள்** **(PTA -1)**

| | மேற்குத் தொடர்ச்சி மலைகள் | கிழக்கு தொடர்ச்சி மலைகள் |
|---|---|---|
| அ) | தீபகற்ப பீடபூமியின் மேற்கு விளிம்பு பகுதியில் காணப்படுகிறது. | தீபகற்ப பீடபூமியின் கிழக்கு விளிம்பு பகுதியில் காணப்படுகிறது. |
| ஆ) | இவை மேற்கு கடற்கரைக்கு இணையாகச் செல்கிறது. | இவை கிழக்கு கடற்கரைக்கு இணையாகச் செல்கிறது. |
| இ) | இம்மலையின் வடபகுதி சயாத்ரி என்று அழைக்கப்படுகிறது. | இம்மலை பூர்வாதிரி என்று அழைக்கப்படுகிறது. |
| ஈ) | இதன் உயரமானது வடக்கிலிருந்து தெற்கு நோக்கி செல்லச்செல்ல அதிகரிக்கிறது. | இதன் உயரமானது வடக்கிலிருந்து தெற்கு நோக்கி செல்லச்செல்ல அதிகரிப்பதில்லை. |
| உ) | மலை வாழிடமான கொடைக்கானல் பழனி மலையில் அமைந்துள்ளது. | மலை வாழிடமான ஏற்காடு, ஏலகிரி மலையில் அமைந்துள்ளது. |

3. **மேற்கு கடற்கரைச் சமவெளி மற்றும் கிழக்கு கடற்கரைச் சமவெளி**

| | மேற்கு கடற்கரைச் சமவெளி | கிழக்கு கடற்கரைச் சமவெளி |
|---|---|---|
| அ) | மேற்கு தொடர்ச்சி மலைக்கும், அரபிக் கடலுக்கும் இடையே அமைந்துள்ளது. | கிழக்கு தொடர்ச்சி மலைக்கும், வங்காள விரிகுடாவிற்கும் இடையே அமைந்துள்ளது. |
| ஆ) | வடக்கில் ரானாப் கட்ச் முதல் தெற்கில் கன்னியாக்குமரி வரை நீண்டுள்ளது. | கிழக்கு தொடர்ச்சி மலைக்கும் வங்காள விரிகுடாவிற்கும் இடையே நீண்டுள்ளது. |
| இ) | இச்சமவெளி மணற்கடற்கரை, கடற்கரை மணல் குன்றுகள், கழிமுகங்கள், காயல்கள் போன்ற நிலத்தோற்றங்களை கொண்டுள்ளது. | இச்சமவெளி புதிய வண்டல் படிவுகளால் நன்கு வரையறுக்கப்பட்ட கடற்கரையைக் கொண்டது. |
| ஈ) | இதன் வடப்பகுதியில் கொங்கணக் கடற்கரை அமைந்துள்ளது. | இதன் வடப்பகுதியில் வடசர்க்கார் அமைந்துள்ளது. |
| உ) | இதன் தென் பகுதியில் மலபார் கடற்கரை அமைந்துள்ளது. | இதன் தென் பகுதியில் சோழ மண்டல கடற்கரை அமைந்துள்ளது. |
| ஊ) | வேம்பநாடு ஏரி இப்பகுதியின் முக்கிய ஏரியாகும். | சிலிகா ஏரி இப்பகுதியின் முக்கிய ஏரியாகும். |

www.Padasalai.Net



## கூடுதல் வினாக்கள்

**4. இமாத்ரி மற்றும் இமாச்சல்**

| | இமாத்ரி | இமாச்சல் |
|---|---|---|
| அ) | இதன் சராசரி அகலம் 25 கி.மீ ஆகும். | இதன் சராசரி அகலம் 80 கி.மீ ஆகும். |
| ஆ) | இதன் சராசரி உயரம் 6000 மீ. | சராசரி உயரம் 3500 மீ முதல் 4500 மீ |
| இ) | குறைவான மழையைப் பெறுகின்றது. | மிக அதிக மழைப்பொழிவு ஏற்படுகிறது. |
| ஈ) | இம்மலைத்தொடரில் காணப்படும் மலைகள் கஞ்சன் ஜங்கா, எவரெஸ்ட். | இம்மலைத்தொடரில் காணப்படும் மலைகள் பீர்பாஞ்சல், தவ்லதார், மற்றும் மகாபாரத். |
| உ) | இங்கு கங்கோத்திரி, சியாச்சின் போன்ற பனியாறுகள் காணப்படுகின்றன. | சிம்லா, முசௌரி, நைனிடால், டார்ஜிலிங் போன்ற கோடை வாழிடங்கள் அமைந்துள்ளன. |

**5. கங்கை சமவெளி - பிரம்மபுத்திரா சமவெளி**

| | கங்கை சமவெளி | பிரம்மபுத்திரா சமவெளி |
|---|---|---|
| அ) | இச்சமவெளி மேற்கிலுள்ள யமுனை ஆற்றிலிருந்து கிழக்கிலுள்ள வங்காளதேசம் வரை பரவிக் காணப்படுகிறது. | இச்சமவெளியின் பெரும்பகுதி அஸ்ஸாமில் பரவிக் காணப்படுகிறது. |
| ஆ) | 3.75 லட்சம் சதுர கிலோ மீட்டர் பரப்பளவைக் கொண்டுள்ளது. | 56.275 சதுர கிலோ மீட்டர் பரப்பளவைக் கொண்டுள்ளது. |
| இ) | அதிக அளவில் வண்டல் படிவுகளை படியவைக்கிறது | வண்டல் விசிறிகளாவும், சதுப்பு நிலக் காடுகளாகவும் காணப்படுகிறது. |
| ஈ) | கங்கையும் அதன் துணை ஆறுகளும் பெரிய சமவெளியை உருவாக்குகிறது | பிரம்மபுத்திரா ஆற்றினால் உருவாக்கப்பட்ட ஒரு தாழ்நில சமவெளியாக அமைந்துள்ளது. |

**6. அந்தமான் தீவுகள் - இலட்சத் தீவுகள்**

| | அந்தமான் தீவுகள் | இலட்சத் தீவுகள் |
|---|---|---|
| அ) | 572 தீவுகளைக் கொண்டது | 27 தீவுகளைக் கொண்டது |
| ஆ) | வங்காள விரிகுடாவில் அமைந்துள்ளது | அரபிக் கடலில் அமைந்துள்ளது |
| இ) | இத்தீவின் பரப்பளவு 8,249 ச.கி.மீ | இத்தீவின் பரப்பளவு 32 ச.கி.மீ. |
| ஈ) | இதன் நிர்வாகத்தலைநகர் போர்ட்பிளேயர் | இதன் நிர்வாகத் தலைநகரம் கவரட்டி |
| உ) | இங்கு செயல்படும் எரிமலை உள்ளது | இங்கு முருகைப் பாறைகள் உள்ளது |
| ஊ) | இத்தீவுகளை $10^0$ கால்வாய் பிரிக்கிறது. | இத்தீவுகளை $8^0$ கால்வாய் பிரிக்கிறது. |

**7. நர்மதை - தபதி**

| | நர்மதை | தபதி |
|---|---|---|
| அ) | மத்திய பிரதேசத்தில் அமர்கண்டாக் பீடபூமியில் உற்பத்தியாகிறது | மத்திய பிரதேசத்தில் முல்டாய் என்ற இடத்திலிருந்து உற்பத்தியாகிறது |
| ஆ) | 1312 கி.மீ. நீளம் கொண்டது | 724 கி.மீ நீளம் கொண்டது. |
| இ) | 98796 ச.கி.மீ பரப்பளவு வடிநிலத்தை கொண்டது | 65145 ச.கி.மீ பரப்பளவு வடிநிலத்தை கொண்டது |
| ஈ) | பர்னா, ஹலுன், ஹெரன், பஞ்சர், தூதி, சக்கார், டவா மற்றும் கோலர் இதன் துணை ஆறுகளாகும். | வாகி, கோமை, அருணாவதி, அனெர், நீசு, புரெ, பஞ்சரா மற்றும் போரி இதன் துணை ஆறுகளாகும். |

**8. சிவாலிக் - பூர்வாஞ்சல்**

| | சிவாலிக் | பூர்வாஞ்சல் |
|---|---|---|
| அ) | இம்மலைத் தொடர் ஜம்மு காஷ்மீர் முதல் அசாம் வரை பரவி காணப்படுகிறது. | இம்மலை வடகிழக்கு மாநிலங்களில் பரவி உள்ளது. |
| ஆ) | இத்தொடரின் ஒரு பகுதி ஆறுகளால் உருவாக்கப்பட்ட படிவுகளாலானது. | சிறு, சிறு குன்றுகளால் ஆனது. |
| இ) | கிழக்கு பகுதி டுயார்ஸ் எனவும், மேற்கு பகுதி டூன்கள் என அழைக்கப்படுகிறது. | குன்றுகள் அனைத்தும் ஒன்றிணைந்து பூர்வாஞ்சல் மலைகள் எனப்படுகின்றன. |

www.Padasalai.Net



9. கங்கை ஆற்று தொகுப்பு - பிரம்மபுத்திரா ஆற்றுத்தொகுப்பு

| | கங்கை ஆற்று தொகுப்பு | பிரம்மபுத்திரா ஆற்றுத்தொகுப்பு |
|---|---|---|
| அ) | கங்கை ஆறு உத்தரகாண்ட மாநிலத்தில் உள்ள உத்தர் காசி மாவட்டத்தில் உருவாகிறது. | திபெத்தில் உள்ள மானசரோவர் ஏரிக்கு அருகில் உருவாகிறது. |
| ஆ) | கங்கோத்ரி பனியாற்றிலிருந்து உற்பத்தியாகிறது. | கைலாஷ் மலைத்தொடரில் உற்பத்தியாகிறது. |
| இ) | இந்நதியின் நீளம் சுமார் 2525 கி.மீ | இவ்வாற்றின் நீளம் சுமார் 2900 கி.மீ |
| ஈ) | பாகிரதி என்ற பெயருடன் உற்பத்தியாகிறது. | சாங்போ என்ற பெயருடன் உற்பத்தியாகிறது. |
| உ) | உலகின் மிகப்பெரிய டெல்டா | சீனா, இந்தியா, பங்களாதேஷ் நாடுகளின் டெல்டா |
| ஊ) | கோமதி, கோசி, யமுனை, சாம்பல் போன்ற துணை ஆறுகள் இணைகின்றன. | திஸ்டா, மனாஸ், பராக், சுபன்ஸ்ரீ ஆகியவை இவ்வாற்றின் துணையாறுகளாகும். |

## V. சுருக்கமாக விடையளி




**1. இந்தியாவின் அண்டை நாடுகளின் பெயர்களைக் கூறுக.**

- ♣ வட மேற்கில் - பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான்
- ♣ வடக்கில் - சீனா, நேபாளம், பூடான்
- ♣ கிழக்கில் - வங்காள தேசம் மற்றும் மியான்மர்
- ♣ தெற்கில் - இலங்கை

**2. இந்திய திட்டநேரத்தின் முக்கியத்துவம் பற்றி கூறுக.** **(PTA – 2)**

- ♣ இந்தியாவின் கிழக்கிலுள்ள அருணாச்சல பிரதேசத்தில் மேற்கிலுள்ள குஜராத்தைக் காட்டிலும் இரண்டு மணி நேரம் முன்னதாகவே சூரியன் உதயமாகிறது.
- ♣ இந்த நேர வேறுபாட்டை தவிர்ப்பதற்காக, இந்தியாவின் மத்திய தீர்க்க ரேகையான 82°30' கிழக்கு தீர்க்கரேகையின் தலநேரம், இந்திய திட்ட நேரமாக எடுத்துக் கொள்ளப்படுகிறது.
- ♣ இத்தீர்க்கரேகை மிர்சாபூர் (அலகாபாத்) வழியாக செல்கிறது.
- ♣ இந்திய திட்டநேரமானது கீரீன்வீச் திட்ட நேரத்தைவிட 5 மணி 30 நிமிடம் முன்னதாக உள்ளது.

**3. தக்காண பீடபூமி - குறிப்பு வரைக.**

- ♣ தக்காண பீடபூமி, தீபகற்ப பீடபூமியில் அமைந்துள்ள மிகப்பெரிய இயற்கை அமைப்பைக் கொண்டதாகும். இது தோராயமாக முக்கோண வடிவம் கொண்டது.
- ♣ **தக்காண பீடபூமியின் எல்லைகள்:**
  - ★ வடக்கில் - மகாதேவ், மைக்காலா குன்றுகள்
  - ★ வடமேற்கு - விந்திய, சாத்பூரா மலைத் தொடர்கள்
  - ★ வடகிழக்கில் - இராஜ்மகால் குன்றுகள்
  - ★ மேற்கில் - மேற்கு தொடர்ச்சி மலைகள்
  - ★ கிழக்கில் - கிழக்கு தொடர்ச்சி மலைகள்
- ♣ சுமார் 7 லட்சம் சதுர கி.மீ பரப்பளவையும் கடல் மட்டத்திலிருந்து 500மீ முதல் 1000மீ உயரம் வரையும் அமைந்துள்ளது.

**4. இந்தியாவின் மேற்கு நோக்கி பாயும் ஆறுகளைப் பற்றி கூறுக.** **(PTA -3)**

- ♣ **நர்மதை:** மத்திய பிரதேசத்தில் அமர்கண்டாக் பீடபூமியில் உற்பத்தியாகிறது. இதன் நீளம் 1312 கி.மீ. ஆகும். இது 27 கிமீ நீளத்திற்கு ஒரு நீண்ட கழிமுகத்தை உருவாக்கி காம்பே வளைகுடா வழியாக அரபிக்கடலில் கலக்கிறது.
- ♣ **தபதி:** மத்திய பிரதேசத்தில் உள்ள பெட்டூல் மாவட்டத்தில் முல்டாய் என்ற இடத்திலிருந்து உற்பத்தியாகிறது. இதன் நீளம் 724 ஆகும். இது காம்பே வளைகுடா வழியாக அரபிக்கடலில் கலக்கிறது.
- ♣ **மாஹி:** மத்திய பிரதேச மாநிலத்தில் தார் மாவட்டத்தில் உருவாகி குஜராத் வழியாக அரபிக்கடலில் கலக்கிறது.

5. **இலட்சத்தீவுக் கூட்டங்கள் பற்றி விவரி.** **(PTA -4)**

- ♣ இலட்சத்தீவுகள் இந்தியாவின் மேற்குப் பகுதியின் உள்ள அரபிக்கடலில் அமைந்துள்ளது.
- ♣ இத்தீவு முருகைப் பாறைகளால் ஆனது.
- ♣ இத்தீவுகள் சுமார் 32 ச.கி.மீ பரப்பளவைக் கொண்டதாகும்.
- ♣ இதன் நிர்வாகத் தலைநகரம் கவரட்டி ஆகும்.
- ♣ இலட்சத்தீவுக்கூட்டங்களை 8° கால்வாய் மாலத்தீவிலிருந்து பிரிக்கிறது.
- ♣ இங்கு மனிதர்கள் வசிக்காத பிட் தீவு பறவைகள் சரணாலயத்திற்கு பெயர் பெற்றது.
- ♣ இலட்சத்தீவு, மினிக்காய் மற்றும் அமினித் தீவு கூட்டங்களை 1973 ஆம் ஆண்டு முதல் இலட்சத்தீவுகள் என அழைக்கப்படுகிறது.

**கூடுதல் வினாக்கள்**

6. **இந்தியாவின் அட்ச மற்றும் தீர்க்க ரேகைகளின் பரவலைக் குறிப்பிடுக.** **(PTA -5)**

- ♣ அட்ச ரேகை - இந்தியா $8^0$ 4' வட அட்சம் முதல் $37^0$ 6' வட அட்சம் வரையிலும் பரவியுள்ளது.
- ♣ தீர்க்க ரேகை - $68^0$ 7' கிழக்கு தீர்க்கம் முதல் $97^0$ 25' கிழக்கு தீர்க்கம் வரையிலும் பரவியுள்ளது.
- ♣ அட்ச தீர்க்க பரவல்படி இந்தியா முழுமையும் வடகிழக்கு அரைக் கோளத்தில் அமைந்துள்ளது.

7. **இமயமலையில் உள்ள முக்கிய கணவாய்கள் யாவை?**

- ♣ ஜம்மு- காஷ்மீர் - காரகோரம் கணவாய்
- ♣ இமாச்சல்பிரதேசம் - ஜொஷிலா கணவாய், சிப்கிலா கணவாய்
- ♣ அருணாச்சல பிரதேசம் - பொமிடிலா கணவாய்
- ♣ சிக்கிம் - நாதுலா, ஜெலிப்லா கணவாய்

8. **அந்தமான் நிக்கோபார் தீவுகள் - குறிப்பு வரைக.**

- ♣ அந்தமான் நிக்கோபார் தீவுகள் வங்காள விரிகுடாவில் அமைந்துள்ளது.
- ♣ இது 572 தீவுகளைக் கொண்டது.
- ♣ இவை புவி உள் இயக்க விசைகள் மற்றும் எரிமலைகளால் உருவானதாகும்.
- ♣ இத்தீவுக்கூட்டங்கள் கடலடி மலைத்தொடரின் மேல்பகுதியாக அமைந்துள்ளன.
- ♣ இதன் நிர்வாகத் தலைநகரம் போர்ட் பிளேயர் ஆகும்
- ♣ அந்தமான் தீவுக் கூட்டங்களை நிக்கோபர் தீவுக்கூட்டங்களிலிருந்து 10° கால்வாய் பிரிக்கிறது.
- ♣ வடபகுதி தீவுகள் அந்தமான் என்றும், தென் பகுதி தீவுகள் நிக்கோபார் எனவும் அழைக்கப்படுகின்றன.
- ♣ நிக்கோபாரின் தென்கோடி முனை "இந்திரா முனை" என அழைக்கப்படுகிறது.

9. **இமயமலை ஆறுகளின் சிறப்பு இயல்புகள் யாவை?**

- ♣ இமயமலையில் தோன்றும் ஆறுகள் நீளமானவை மற்றும் அகலமானவை.
- ♣ இவை வற்றாத நதிகள் ஆகும்.
- ♣ நீர் மின் உற்பத்தி செய்ய இயலாதவை
- ♣ ஆற்றின் மத்திய மற்றும் கீழ்நிலைப்பகுதிகள் போக்குவரத்திற்கு ஏற்றது.

10. **தீபகற்ப ஆறுகளின் சிறப்பு இயல்புகள் யாவை?**

- ♣ மேற்குத் தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகின்றன.
- ♣ குறுகலானவை மற்றும் நீளம் குறைந்தவை
- ♣ இவை காலத்திற்கேற்ப வற்றும் ஆறுகள் ஆகும்.
- ♣ இந்த ஆறுகள் நீர் மின்சாரம் உற்பத்திக்கு ஏற்றது.
- ♣ இவ்வாறுகள் நீர்வழி போக்குவரத்திற்குப் பயன்படாதவை.

11. **இந்தியாவின் வட, தென் முனைகள் - குறிப்பு வரைக.**

- ♣ இந்தியாவின் வடகோடி முனை - ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் உள்ள இந்திரா கோல்.
- ♣ இந்தியாவின் தென்கோடி முனை - அந்தமான் நிகோபார் தீவில் அமைந்துள்ள இந்திரா முனை.

## VI. ஒரு பத்தியில் விடையளிக்கவும்.

1. இமயமலையின் உட்பிரிவுகளையும் அதன் முக்கியத்துவம் பற்றியும் விவரி. (PTA -1)

➲ **இமயமலையின் உட்பிரிவுகள்:**

★ ட்ரான்ஸ் இமயமலைகள் ★ இமயமலைகள் ★ கிழக்கு இமயமலை / பூர்வாஞ்சல் குன்றுகள்

இமயமலை மூன்று பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

1. இமாத்ரி - உள் இமயமலை
2. இமாச்சல் - மத்திய இமயமலை
3. சிவாலிக் - வெளி இமயமலை

➲ **இமயமலையின் முக்கியத்துவம்:**

♣ தென்மேற்கு பருவக் காற்றைத் தடுத்து வட இந்திய பகுதிக்கு கனமழையைக் கொடுக்கிறது.
♣ இந்திய துணைக் கண்டத்திற்கு இயற்கை அரணாக அமைந்துள்ளது.
♣ வற்றாத நதிகளின் பிறப்பிடமாக உள்ளது. (எ.கா) சிந்து, கங்கை, பிரம்புத்திரா
♣ இயற்கை அழகின் காரணமாக சுற்றுலா பயணிகளின் சொர்க்கமாகத் திகழ்கிறது.
♣ பல கோடை வாழிடங்களும், புனித தலங்களான அமர்நாத், கேதார்நாத், பத்ரிநாத் மற்றும் வைஷ்ணவிதேவி கோயில்களும் இம்மலைத் தொடரில் அமைந்துள்ளன.
♣ மத்திய ஆசியாவிலிருந்து வீசும் கடும் குளிர் காற்றை தடுத்து இந்தியாவை குளிரிலிருந்து பாதுகாக்கிறது. இமயமலை பல்லுயிர் மண்டலத்திற்கு பெயர் பெற்றவை.

2. **தீபகற்ப ஆறுகளைப் பற்றி விவரி.**

➲ **தீபகற்ப ஆறுகள்**

♣ தென் இந்தியாவில் பாயும் ஆறுகள் தீபகற்ப ஆறுகள் எனப்படுகின்றன.
♣ பெரும்பாலான ஆறுகள் மேற்குத் தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகின்றன.
♣ இவை பருவகால ஆறுகள் அல்லது வற்றும் ஆறுகள் எனப்படும்.
♣ தீபகற்ப ஆறுகளை அவை பாயும் திசையின் அடிப்படையில் இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

1. கிழக்கு நோக்கி பாயும் ஆறுகள் 2. மேற்கு நோக்கி பாயும் ஆறுகள்

| 1. கிழக்கு நோக்கி பாயும் ஆறுகள் | |
|---|---|
| அ) மகாநதி | ஆ) கோதாவரி |
| இ) கிருஷ்ணா | ஈ) காவிரி |

**அ) மகாநதி**

♣ இந்நதி சத்தீஸ்கர் மாநிலத்திலுள்ள ராய்ப்பூர் மாவட்டத்தில் உற்பத்தியாகிறது.
♣ சீநாத், டெலன், சந்தூர், சித்ரட்லா, கெங்குட்டி மற்றும் நன் ஆகியவை இதன் முக்கிய துணையாறுகளாகும். இந்நதி வங்காள விரிகுடாவில் கலக்கிறது.

**ஆ) கோதாவரி**

♣ தீபகற்ப இந்தியாவில் பாயும் மிக நீளமான ஆறு கோதாவரி ஆகும்.
♣ இது மகாராஷ்ட்ரா மாநிலம் நாசிக் மாவட்டத்தில் அமைந்துள்ள மேற்குத் தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகிறது. இந்நதி விருத்தகங்கா எனவும் அழைக்கப்படுகிறது.
♣ இது ஆந்திரப்பிரதேசம் வழியாக பாய்ந்து வங்காள விரிகுடாவில் கலக்கிறது.

**இ) கிருஷ்ணா**

♣ மகாராஷ்ட்டிரா மாநிலத்தில் உள்ள மேற்கு தொடர்ச்சி மலையில் ஊற்றாக உருவாகிறது.
♣ இது சுமார் 1400 கி.மீ நீளம் வரையும் 2.58 இலட்சம் ச.கி.மீ பரப்பளவு வடிநிலத்தை கொண்டிருக்கிறது. இது தீபகற்ப ஆறுகளில் இரண்டாவது பெரிய நதியாகும்.
♣ இந்நதி ஆந்திரப்பிரதேசத்தின் வழியாக பாய்ந்து வங்காள விரிகுடாவில் கலக்கிறது.

**ஈ) காவிரி**

♣ காவேரி ஆறு கர்நாடக மாநிலத்தில் குடகு மலையிலுள்ள தலைக்காவேரியில் உற்பத்தியாகிறது.
♣ இது தென் இந்தியாவின் கங்கை என்றும் அழைக்கப்படுகிறது.
♣ கர்நாடாகாவில் இரண்டாக பிரிந்து சிவசமுத்திரம் மற்றும் ஸ்ரீரங்கப்பட்டினம் ஆகிய புனித ஆற்றுத்தீவுகளை உருவாக்குகிறது.
♣ தமிழ்நாட்டில் ஒகேனக்கல் என்ற இடத்தில் நீர் வீழ்ச்சியாக பாய்கிறது.

| 2. மேற்கு நோக்கி பாயும் ஆறுகள் |
| --- |
| அ) நர்மதை |
| ஆ) தபதி |

**அ) நர்மதை**

- ♣ மத்திய பிரதேசத்தில் உள்ள அமர்கண்டாக் பீடபூமியில் உற்பத்தியாகிறது.
- ♣ இது 27 கி.மீ நீளத்திற்கு ஒரு நீண்ட கழிமுகத்தை உருவாகி காம்பே வளைகுடா வழியாக அரபிக் கடலில் கலக்கிறது.

**ஆ) தபதி**

- ♣ மத்திய பிரதேசத்தில் உள்ள பெட்டூல் மாவட்டத்தில் முல்டாய் என்ற இடத்தில் உற்பத்தியாகிறது.
- ♣ பின்பு காம்பே வளைகுடா வழியாக அரபிக்கடலில் கலக்கிறது.
- ♣ தீபகற்ப இந்திய ஆறுகளில் நர்மதை, தபதி மற்றும் மாஹி ஆகிய மூன்று ஆறுகள் மட்டுமே கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி பாய்கின்றன.

**3. கங்கை ஆற்று வடிநிலம் குறித்து விரிவாக எழுதுக. (PTA -4)**

- ♣ கங்கையாற்றின் தொகுப்பு 8,61,404 ச.கி.மீ பரப்பளவில் பாயும் இந்தியாவின் மிகப்பெரிய வடிகால் அமைப்பைக் கொண்டதாகும்.
- ♣ கங்கை சமவெளியில் பல நகரங்கள் ஆற்றங்கரையையொட்டியும் அதிக மக்களடர்த்தி கொண்டதாகவும் உள்ளன.
- ♣ கங்கை ஆறு உத்தரகாண்ட் மாநிலத்தில் உள்ள உத்தர் காசி மாவட்டத்தில் 7010 மீ உயரத்தில் கங்கோத்ரி பனியாற்றிலிருந்து பாகிரதி என்னும் பெயருடன் உற்பத்தியாகிறது.
- ♣ இந்நதியின் நீளம் சுமார் 2525 கி.மீ ஆகும்.
- ♣ வட பகுதியிலிருந்து கோமதி, காக்ரா, கண்டக், கோசி மற்றும் தென் பகுதியிலிருந்து யமுனை, சோன், சாம்பல் போன்ற துணையாறுகள் கங்கையுடன் இணைகின்றன.
- ♣ வங்கதேசத்தில், கங்கை பத்மா என்ற பெயரில் அழைக்கப்படுகிறது.
- ♣ கங்கை மற்றும் பிரம்மபுத்ரா ஆறுகள் சேர்ந்து உலகிலேயே மிகப்பெரிய டெல்டாவை உருவாக்கி பின் வங்காள விரிகுடாவில் கலக்கின்றன.

## கூடுதல் வினாக்கள்

**4. தீபகற்ப பீடபூமி - விவரி**

- ♣ தீபகற்ப பீடபூமி வட இந்திய சமவெளிக்கு தெற்கே அமைந்துள்ளது.
- ♣ இது சுமார் 16 லட்சம் சதுர கி.மீ பரப்பளவைக் கொண்டு இந்தியாவின் மிகப்பெரிய இயற்கைப் பிரிவாக உள்ளது.
- ♣ தீபகற்ப பீடபூமி தொன்மையான பாறை அமைப்புகளையும், பல குன்றுகளையும் பல்வேறு சிறு பீடபூமிகளையும், ஆற்றுப் பள்ளத்தாக்குகளால் பிளவுபட்டும் காணப்படுகின்றன.
- ♣ இப்பீடபூமி வடமேற்கே ஆரவல்லி மலைத்தொடர், வடக்கு மற்றும் வடகிழக்கே பண்டல் கண்ட் உயர்நிலப்பகுதி, கைமூர், ராஜ்மகால் குன்றுகள், மேற்கே மேற்குத் தொடர்ச்சி மலைகள், கிழக்கே கிழக்குத் தொடர்ச்சி மலைகள் ஆகியன எல்லையாக அமைந்துள்ளன.
- ♣ இப்பீடபூமியின் பெரும்பகுதி கடல் மட்டத்திலிருந்து சுமார் 600மீ. உயரத்தைக்கொண்டது.
- ♣ ஆனைமலையில் அமைந்துள்ள 2695மீ உயரமுடைய ஆனைமுடிச் சிகரம் இப்பீடப்பூமியின் உயர்ந்த சிகரமாகும். இப்பீடபூமி மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி சரிந்துள்ளது.
- ♣ இது கோண்டுவானா நிலப்பகுதியின் ஒரு பகுதியாகும்.
- ♣ ஆற்றின் மூப்பு நிலைக் காரணமாக ஆறுகள், அகலமான மற்றும் ஆழமற்ற பள்ளத்தாக்குகளை உருவாக்கியுள்ளன.
- ♣ நர்மதை ஆறு தீபகற்ப பீடபூமியை இரு பெரும் பகுதிகளாக பிரிக்கின்றது.
- ♣ இதன் வட பகுதியை மத்திய உயர்நிலங்கள் என்றும், தென் பகுதியை தக்காண பீடபூமி என்றும் அழைப்பர்.
- ♣ விந்திய மலைக்கு தென் பகுதியில் பாயும் ஆறுகளான கோதாவரி, காவிரி, மகாநதி, கிருஷ்ணா போன்றவை கிழக்கு நோக்கி பாய்ந்து வங்காள விரிகுடாவில் கலக்கின்றன.

**5. வடபெரும் சமவெளி - விளக்குக.**

- ♣ வளமான சமவெளிகள், வட இந்திய ஏழு மாநிலங்களில், வடக்கு மலைகளின் தென்புறம் பரந்து காணப்படுகிறது.
- ♣ சிந்து, கங்கை பிரம்மபுத்திரா மற்றும் அதன் துணையாறுகளால் உருவாக்கப்பட்ட வண்டல் மண் படிவுகளைக் கொண்ட உலகிலேயே வளமான சமவெளியாக இது உள்ளது.
- ♣ இது 7 லட்சம் சதுர கிலோமீட்டர் பரப்பளவிற்கு பரவியுள்ளது.
- ♣ வட இந்திய பெரும் சமவெளி மேடு பள்ளமற்ற ஒரு சீரான சம பரப்பாக அமைந்துள்ளது.
- ♣ இவை இமயமலை மற்றும் விந்திய மலைகளிலுள்ள ஆறுகளின் படியவைத்தல் செயல்முறைகளால் உருவாக்கப்பட்டுள்ளன.

➲ **வட பெரும் சமவெளி படிவுகளின் முக்கிய பண்புகள்:**

**அ) பாபர் சமவெளி**

இச்சமவெளி இமயமலை ஆறுகளால் படியவைக்கப்பட்ட பெரும் மணல்கள் மற்றும் பலதரப்பட்ட படிவுகளால் ஆனது

**ஆ) தராய் மண்டலம்**

தராய் மண்டலம் அதிகப்படியான ஈரப்பதம் கொண்ட பகுதியாகவும், காடுகள் வளர்வதற்கும் பல்வேறு விதமான வனவிலங்குகள் வாழ்வதற்கு ஏற்றதாகவும் உள்ளது

**இ) பாங்கர் சமவெளி**

பெரும் சமவெளியில் காணப்படும் பாங்கர் என்பது மேட்டு நில வண்டல் படிவுகளைக் கொண்ட நிலத்தோற்றம். இங்குள்ள படிவுகள் பழைய வண்டல் மண்ணால் ஆனவை.

**ஈ) காதர் சமவெளி**

காதர் மணல், களிமண், சேறு மற்றும் வண்டலைக் கொண்ட வளமிக்கச் சமவெளியாகும்.

**உ) டெல்டா சமவெளி**

காதர் சமவெளியைத் தொடர்ந்து காணப்படும் பகுதி டெல்டா சமவெளி கங்கை ஆற்றின் கடைப்பகுதியாக சுமார் 1.9 லட்சம் சதுர கி.மீ பரப்பை உள்ளடக்கியதாகும்.

**6. மத்திய உயர்நிலம் - விவரி.**

➔ **ஆரவல்லி மலைத்தொடர்**

- ♣ மத்திய உயர் நிலங்கள் நர்மதை ஆற்றிற்கும் வடபெரும் சமவெளிக்கும் இடையே அமைந்துள்ளன.
- ♣ இப்பகுதியின் வடக்கு மற்றும் வடமேற்கு எல்லையில் ஆரவல்லி மலைத்தொடர் அமைந்துள்ளது.
- ♣ இம்மலைத்தொடர் வடமேற்காக குஜராத்திலிருந்து ராஜஸ்தான் வழியாக டெல்லி வரை சுமார் 700 கி.மீ வரை நீண்டுள்ளது.
- ♣ வடக்கில் டெல்லிக்கு அருகில் சராசரியாக சுமார் 400மீ உயரத்தையும் தென் மேற்கில் 1500மீ உயரத்தையும் கொண்டுள்ளது.
- ♣ ஆரவல்லி மலைத் தொடரின் மிக உயரமான சிகரம் குருசிகார் (1722 மீ) ஆகும்.

➔ **மாளவப்பீடபூமி**

- ♣ மேற்கு பகுதியிலுள்ள மத்திய உயர்நிலங்கள் மாளவப் பீடபூமி எனப்படுகிறது.
- ♣ இப்பீடபூமி ஆரவல்லி மலைத்தொடருக்கு தென்கிழக்கிலும், விந்திய மலைக்கு வடக்கிலும் அமைந்துள்ளது.
- ♣ சம்பல், பீட்வா, கென், போன்ற ஆறுகள் இப்பீடபூமியில் பாய்ந்து யமுனை ஆற்றுடன் கலக்கின்றன.
- ♣ மாளவப் பீடபூமியின் கிழக்குத் தொடர் பகுதியை பண்டல் கண்ட் என்றும் இதன் தொடர்ச்சியை பாகல்கண்ட் என்றும் அழைப்பர்.
- ♣ சோட்டா நாகபுரி பீடபூமி மத்திய உயர் நிலங்களின் வடகிழக்கு பகுதியில் அமைந்துள்ளது.
- ♣ இப்பீடபூமி ஜார்க்கண்ட் மாநிலத்தின் பெரும் பகுதி, மேற்கு வங்காளம், பீகார், சத்தீஸ்கர் மற்றும் ஒடிசாவின் சில பகுதிகளை உள்ளடக்கியது.
- ♣ இப்பகுதி இரும்புத்தாது மற்றும் நிலக்கரி போன்ற கனிம வளத்திற்கு புகழ்பெற்றது.

**VII. நிலவரைபடப் பயிற்சி** (இப்புத்தகத்தின் பின்பகுதியை பார்க்கவும்)

www.Padasalai.Net

# குடிமையியல்

www.Padasalai.Net



# 1. இந்திய அரசியலமைப்பு

## முக்கிய குறிப்புகள்

| | |
|---|---|
| ☯ அரசியலமைப்பு | அரசியலமைப்பு என்ற கொள்கை முதன்முதலில் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் தோன்றியது. |
| ☯ இந்திய அரசியலமைப்பு | 1946-ஆம் ஆண்டு இந்திய அரசியல் நிர்ணய சபையால் இந்திய அரசியலமைப்பு உருவாக்கப்பட்டது. |
| ☯ அரசியலமைப்பு உறுப்பினர்கள் | இந்திய அரசியல் நிர்ணய சபையில் மொத்தம் 389 உறுப்பினர்கள் (93 நாடுகள்) இருந்தனர். |
| ☯ சபையின் முதற் கூட்டம் | இந்திய அரசியல் நிர்ணய சபையின் முதற் கூட்டம் 1946-ஆம் ஆண்டு டிசம்பர் 9-ஆம் நாள் நடைபெற்றது. |
| ☯ சபையின் தற்காலிக தலைவர் | இந்திய அரசியல் நிர்ணய சபையின் தற்காலிக தலைவர் டாக்டர் சச்சிதானந்த சின்கா தேர்ந்தெடுக்கப்பட்டார். |
| ☯ சபையின் தலைவர் | டாக்டர் இராஜேந்திர பிரசாத் இந்திய அரசியலமைப்பு நிர்ணய சபையின் தலைவராக தேரந்தெடுக்கப்பட்டார். |
| ☯ வரைவுக் குழுத் தலைவர் | அரசியலமைப்பு சட்ட வரைவுக் குழுத் தலைவர் டாக்டர்.பி.ஆர்.அம்பேத்கார் தலைமையின் கீழ் இந்திய அரசியலமைப்பு சட்டம் உருவாக்கப்பட்டது. |
| ☯ அரசியலமைப்பின் தந்தை | டாக்டர்.பி.ஆர்.அம்பேத்கார் இந்திய அரசியலமைப்பின் தந்தை என அறியப்படுகிறார். |
| ☯ அரசியலமைப்புச் சட்டத்தின் மொழி | பிரேம் பெஹாரி நரேன் ரைஜடா என்பவரால் இந்திய அரசியலமைப்புச் சட்டம் இத்தாலிய பாணியில், அவரது கைப்பட எழுதப்பட்டது. |
| ☯ அரசியலமைப்பின் முகவுரை | 1947, ஜனவரி 2ஆம் நாள் ஏற்றுக்கொள்ளப்பட்ட நேருவின் தீர்மானத்தின் அடிப்படையில் இந்திய அரசியலமைப்பின் முகவுரை அமைந்துள்ளது. |
| ☯ சட்ட திருத்தம் | 1976ஆம் ஆண்டு, சமதர்மம், சமயச் சார்பின்மை, ஒருமைப்பாடு, என்ற மூன்று புதிய சொற்கள் முகவுரையில் சேர்க்கப்பட்டன. |
| ☯ சிவிஸ் | 'சிட்டிசன்' எனும் சொல் 'சிவிஸ்' எனும் இலத்தீன் சொல்லிலிருந்து பெறப்பட்டதாகும். |
| ☯ குடியுரிமையை இழத்தல் | குடியுரிமைச் சட்டத்தின் படி, ஒருவர் தன் குடியுரிமையை, சட்டத்தின் மூலமாக துறத்தல், முடிவுறச் செய்தல், இழத்தல் என்ற வழிகளில் இழப்பார். |
| ☯ இந்தியாவின் மகாசாசனம் | அரசியலமைப்பின் பகுதி (III) 'இந்தியாவின் மகாசாசனம்' என அழைக்கப்படுகிறது. |
| ☯ அரசியலமைப்பின் பாதுகாவலன் | மக்களின் உரிமைகளைக் காப்பதினால் உச்சநீதிமன்றம் 'அரசியலமைப்பின் பாதுகாவலன்' என அழைக்கப்படுகிறது. |
| ☯ அரசியலமைப்பின் இதயம் | Dr. B.R. அம்பேத்கரின் கூற்றுப்படி அரசியலமைப்பு சட்டப்பிரிவு 32, இந்திய அரசியலமைப்பின் 'இதயம் மற்றும் ஆன்மா' ஆகும். |
| ☯ நீதிப்பேராணை | கட்டளையுறுத்தும் நீதிப்பேராணை மூலம் மனுதாரர் தனது மனுதொடர்பான பணியினைச் சம்மந்தப்பட்ட துறையிலிருந்து நிறைவேற்றிக் கொள்ளமுடியும். |
| ☯ கேட்பு பேராணை | உயர்நீதிமன்றம், ஆவணங்களை பரிசீலனைக்கு தனக்கோ அல்லது உரிய அதிகாரிக்கோ அனுப்பச் செய்ய கீழ்நீதிமன்றங்களுக்கு இடும் ஆணை ஆவணக் கேட்பு பேராணை ஆகும். |
| ☯ கோட்பாடுகள் | அரசு நெறிமுறையுறுத்தும் கோட்பாடுகள், இந்திய அரசியலமைப்புச் சட்டம் பகுதி IV சட்டப்பிரிவு 36ல் இருந்து 51 வரை தரப்பட்டுள்ளது. |
| ☯ புதுமையான சிறப்பம்சம் | இந்திய அரசியலமைப்பின் 'புதுமையான சிறப்பம்சம்' என Dr. B.R. அம்பேத்கர் அரசு நெறிமுறையுறுத்தும் கோட்பாடுகளை விவரிக்கிறார். |
| ☯ அடிப்படைக் கடமைகள் | 51 A என்ற பிரிவு குடிமக்களின் பத்து அடிப்படைக் கடமைகளை விளக்கும் குறிப்பிட்ட சட்டத் தொகுப்பாக உள்ளது. |
| ☯ பிரிவு 21 A | பிரிவு 21 A, இந்திய குடிமக்கள் அல்லது பெற்றோர்கள் 6 முதல் 14 வயதுள்ள தங்கள் குழந்தைகளுக்கு கல்வி பெறும் வாய்ப்பினை தர வேண்டும். |
| ☯ மூன்று பட்டியல்கள் | மத்திய பட்டியல், மாநில பட்டியல், பொதுப்பட்டியல் என மூன்று பட்டியல்கள் முறையே 97, 66, 47 என்று அதிகாரத்தை வழங்கியுள்ளது. |

www.Padasalai.Net



| | |
|---|---|
| மத்திய-மாநில உறவு | மத்திய-மாநில அரசுகளுக்கிடையே நிலவும் உறவினை சட்டம், நிர்வாகம், நீதி என்ற மூன்று வகை உள்ளன. |
| அதிகாரப் பகிர்வு | அதிகாரப் பகிர்வு என்பது மத்திய அரசு பட்டியலில் 100 துறைகள், மாநில அரசு பட்டியலில் 61 துறைகள், மற்றும் இரண்டுக்கும் பொதுவான பொதுப்பட்டியலில் 52 துறைகள் என்றும் மாற்றப்பட்டுள்ளது. |
| மூவர் குழு | 1969இல் மத்திய-மாநில அரசுகளின் உறவுகள் குறித்து முழுவதும் ஆராய தமிழக அரசு Dr. P.V. இராஜமன்னார் தலைமையின் கீழ் மூவர் குழு ஒன்றை நியமித்தது. |
| நிதிசார்ந்த உறவு | அரசியலமைப்பு சட்டம் பகுதி XII சட்டப்பிரிவு 268ல் இருந்து 293 வரை உள்ள பிரிவுகள் மத்திய-மாநில அரசுகளின் நிதிசார்ந்த உறவுகள். |
| நிதிக்குழு | சட்டப்பிரிவு 280ன் கீழ் குடியரசுத் தலைவரால் நியமனம் செய்யப்பட்ட நிதிக்குழுபடி மத்திய அரசால் சில வரிகள் வசூலிக்கப்பட்டு, மத்திய அரசாலும், மாநில அரசாலும் பிரித்துக்கொள்ளப்படுகின்றன. |
| அலுவலக மொழிகள் | அரசியலமைப்பு சட்டப் பகுதி XVII இல் 343 லிருந்து 351 வரையுள்ள சட்டப்பிரிவுகள் அலுவலக மொழிகள் பற்றி விவரிக்கின்றன. |
| புதிய வகைப்பாடு | 2004ஆம் ஆண்டு இந்திய அரசு "செம்மொழிகள்" எனும் புதிய வகைப்பாட்டினை ஏற்படுத்த தீர்மானித்தது. |
| 8வது அட்டவணை | அரசியலமைப்பின் 8வது அட்டவணையில் தற்போது 22 மொழிகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. |
| செம்மொழிகள் | 6 மொழிகள் செம்மொழி தகுதியை பெற்றுள்ளன. அவை தமிழ், சமஸ்கிருதம், தெலுங்கு, கன்னடம், மலையாளம் மற்றும் ஒடியா. |
| தமிழ் செம்மொழி | தமிழ் செம்மொழி தகுதியை பெற்ற ஆண்டு 2004. |
| அவசரநிலை | இந்தியாவின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டால், குடியரசுத் தலைவர், அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 352ன் கீழ் அவசரநிலையை அறிவிக்கலாம். |
| உள்நாட்டு அவசர நிலைகள் | உள்நாட்டு அவசர நிலைகள் 1962, 1971, 1975 ஆகிய ஆண்டுகளில் அறிவிக்கப்பட்டன. |
| குடியரசுத் தலைவர் ஆட்சி | இந்தியாவில் முதன் முறையாக 1951இல் பஞ்சாப் மாநிலத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி நடைமுறைப் படுத்தப்பட்டது. |
| நிதிசார்ந்த அவசரநிலை | அரசியலமைப்பு சட்டப்பிரிவு 360ன் கீழ்குடியரசுத் தலைவர் நிதிசார்ந்த அவசரநிலையைப் பிறப்பிக்கலாம். |
| அமெண்ட்மெண்ட் | அமெண்ட்மெண்ட்' எனும் சொல் மாற்றம், மேம்படுத்துதல், மற்றும் சிறு மாறுதல் என்பதைக் குறிக்கிறது. |
| நாடாளுமன்றத்தின் அதிகாரங்கள் | சட்டம் பகுதி XXல் 368வது சட்டப்பிரிவு, அரசியலமைப்பினை சட்ட திருத்தம் செய்வதில் நாடாளுமன்றத்தின் அதிகாரங்கள் பற்றி தெரிவிக்கிறது. |
| மாநில சட்ட மன்றம் | மாநில சட்ட மன்றத்தால் அரசியலமைப்பில் எந்தவொரு சட்டத்திருத்தத்தையும் கொண்டுவர முடியாது. |
| சிறிய அரசியலமைப்பு | அரசியலமைப்பின் 42வது சட்டத்திருத்தம் "சிறிய அரசியலமைப்பு" என அறியப்படுகிறது. |
| தேசிய சீராய்வு ஆணையம் | அரசியலமைப்பு செயல்பாடு குறித்து ஆய்வு செய்ய 2000ஆம் ஆண்டில் திரு M.N. வெங்கடாசலய்யா தலைமையில் தேசிய சீராய்வு ஆணையம் அமைத்தது. |
| M.M. பூஞ்சி | அரசின் பல்வேறு நிலைகள் ஏப்ரல் 2007ஆம் ஆண்டு மூன்று உறுப்பினர்களைக் கொண்ட M.M. பூஞ்சி தலைமையில் அரசு ஆணையத்தை அமைத்தது. |

## புத்தக வினாக்கள்

### I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்.

1. கீழ்காணும் வரிசையில் 'முகவுரை' பற்றிய சரியான தொடர் எது?

அ) குடியரசு, ஜனநாயக, சமயச் சார்பற்ற, சமதர்ம, இறையாண்மை

ஆ) இறையாண்மை, சமதர்ம, சமயச் சார்பற்ற, குடியரசு, ஜனநாயக

இ) இறையாண்மை, குடியரசு, சமயச் சார்பற்ற, சமதர்ம, ஜனநாயக

**ஈ) இறையாண்மை, சமதர்ம, சமயச் சார்பற்ற, ஜனநாயக, குடியரசு**

www.Padasalai.Net


2. இந்திய அரசியலமைப்பின் முகவுரை எத்தனை முறை திருத்தப்பட்டது?
   ***அ) ஒரு முறை*** ஆ) இரு முறை இ) மூன்று முறை ஈ) எப்பொழுதும் இல்லை
3. ஒரு வெளிநாட்டவர், கீழ்க்காணும் எதன் மூலம் இந்திய குடியுரிமை பெறமுடியும்?
   அ) வம்சாவளி ஆ) பதிவு ***இ) இயல்புரிமை*** ஈ) மேற்கண்ட அனைத்தும்
4. மாறுபட்ட ஒன்றைக் கண்டுபிடி. **(PTA -2)**
   அ) சமத்துவ உரிமை ஆ) சுரண்டலுக்கெதிரான உரிமை
   ***இ) சொத்துரிமை*** ஈ) கல்வி மற்றும் கலாச்சார உரிமை
5. கீழ்க்காண்பவற்றில் ஒன்று, அடிப்படை உரிமையைப் பயன்படுத்துவதற்கு உதாரணம் இல்லை. **(PTA -6)**
   அ) கர்நாடகாவிலிருந்து, கேரளா பண்ணைகளில் வேலையாட்கள் பணிசெய்தல்
   ஆ) கிறித்துவ சமயக்குழு, தொடர்ச்சியாக, பள்ளிகளை அமைத்தல்
   இ) ஆண், பெண் இருபாலரும் அரசுப்பணிகளுக்கு சம ஊதியம் பெறுதல்
   ***ஈ) பெற்றோர்களின் பூர்வீக சொத்துக்கள் அவர்களது பிள்ளைகளுக்கு செல்லுதல்***
6. பின்வருவனவற்றுள் எந்த உரிமை டாக்டர். B.R. அம்பேத்கர் அவர்களால் "இந்திய அரசியலமைப்பின் இதயம் மற்றும் ஆன்மா" என விவரிக்கப்பட்டது?
   அ) சமய உரிமை ஆ) சமத்துவ உரிமை
   ***இ) அரசியலமைப்புக்குட்பட்டு தீர்வு காணும் உரிமை*** ஈ) சொத்துரிமை
7. அடிப்படை உரிமைகள் எவ்வாறு நிறுத்திவைக்கப்பட முடியும்?
   அ) உச்சநீதி மன்றம் விரும்பினால்
   ஆ) பிரதம மந்திரியின் ஆணையினால்
   ***இ) தேசிய அவசரநிலையின் போது குடியரசு தலைவரின் ஆணையினால்***
   ஈ) மேற்கண்ட அனைத்தும்
8. நமது அடிப்படை கடமைகளை ………..இடமிருந்து பெற்றோம்
   அ) அமெரிக்க அரசியலமைப்பு ஆ) கனடா அரசியலமைப்பு
   ***இ) ரஷ்யா அரசியலமைப்பு*** ஈ) ஐரிஷ் அரசியலமைப்பு
9. எந்த பிரிவின் கீழ் நிதிநிலை அவசரநிலையை அறிவிக்க முடியும்?
   அ) பிரிவு 352 ஆ) பிரிவு 356 ***இ) பிரிவு 360*** ஈ) பிரிவு 368
10. எந்த குழுக்கள் / கமிஷன்கள் மத்திய-மாநில உறவுகள் பற்றி பரிந்துரை செய்தன?
    1. சர்க்காரியா குழு 2. ராஜமன்னார் குழு 3. M.N. வெங்கடாசலையா குழு
    கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளிலிருந்து சரியான விடையைத் தேர்ந்தெடு
    அ) 1, 2 & 3 ***ஆ) 1 & 2*** இ) 1 & 3 ஈ) 2 & 3

## கூடுதல் வினாக்கள்

11. இந்தியக் குடிமக்களின் அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டால் அவர்கள் ……..ஐ அணுகி தங்களது அடிப்படை உரிமையைப் பெறலாம்.
    அ) பாராளுமன்றம் ஆ) தலைமை வழக்குரைஞர்
    இ) இந்தியக் குடியரசு தலைவர் ***ஈ) இந்திய உச்சநீதிமன்றம்***
12. வழிகாட்டும் நெறிமுறைகள் எம்முறையில் வகைப்படுத்தப்படுகின்றன?
    அ) தாராளவாதம் மற்றும் கம்யூனிச கொள்கைகள்
    ஆ) சமதர்ம மற்றும் கம்யூனிச கொள்கைகள்
    இ) தாராளவாதம், காந்திய மற்றும் கம்யூனிச கொள்கைகள்
    ***ஈ) சமதர்ம, காந்திய மற்றும் தாராளக் கொள்கைகள்***
13. இந்திய அரசியலமைப்பின் எந்த பிரிவில் அரசியலமைப்பு திருத்தும் நடைமுறை குறித்து தரப்பட்டுள்ளது?
    அ) பிரிவு 352 ஆ) பிரிவு 356 இ) பிரிவு 360 ***ஈ) பிரிவு 368***
14. அரசியலமைப்பு என்ற கொள்கை முதன்முதலில் தோன்றிய நாடு …………
    அ) பிரான்சு ஆ) இங்கிலாந்து ***இ) அமெரிக்க ஐக்கிய நாடு*** ஈ) ஜப்பான்

15. அரசியலமைப்பு சட்டத்திருத்தத்தை பரிந்துரை செய்த கமிட்டி …….
அ) Dr. அம்பேத்கர் கமிட்டி ஆ) Dr. ராஜேந்திர பிரசாத் கமிட்டி
இ) Dr. சின்ஹா கமிட்டி ***ஈ) சர்தார் ஸ்வரன் சிங் கமிட்டி***

16. சிட்டிசன் என்ற வார்த்தை……….மொழியிலிருந்து பெறப்பட்டது.
***அ) இலத்தீன்*** ஆ) கிரேக்கம் இ) ரோமானியம் ஈ) ஆங்கிலம்

17. இந்திய அரசியலமைப்பு கூட்டம் எத்தனை முறைகள் நடைபெற்றது?
***அ) 166*** ஆ) 176 இ) 186 ஈ) 196

18. இந்திய அரசியலமைப்பு முன்னுரை குறிக்கோள் தீர்மானம் எழுதியவர் …………..
அ) Dr. B.R. அம்பேத்கர் ***ஆ) ஜவஹர்லால் நேரு***
இ) Dr. சின்ஹா ஈ) கிருஷ்ணமாச்சாரி

19. இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் முகவுரை தொடக்கத்தில்……..என்ற வார்த்தை இடம்பெற்றுள்ளது.
அ) தேசிய ஒருமைப்பாடு ஆ) வந்தே மாதரம்
***இ) இந்திய மக்களாகிய நாம்*** ஈ) நாம் அனைவரும் இந்தியர்

20. இந்திய அரசியலமைப்பின் மூன்றாம் பகுதி எவ்வாறு அழைக்கப்படுகிறது?
***அ) இந்தியாவின் மகாசாசனம்*** ஆ) இந்தியர்களின் இதயம்
இ) இந்தியர்களின் பெரும் பற்று ஈ) இந்திய ஆவணம்

21. அரசியலமைப்பின் பாதுகாவலன் …………
அ) தேர்தல் ஆணையம் ***ஆ) உச்சநீதிமன்றம்*** இ) பிரதமர் இல்லம் ஈ) ராஷ்டிரபதி பவன்

22. சமத்துவ உரிமை பிரிவு-16 எதனை வலியுறுத்துகிறது?
அ) தீண்டாமை ஒழித்தல் ***ஆ) பொது வேலைவாய்ப்பில் சமம்***
இ) பாகுபாடு ஒழித்தல் ஈ) நாம் அனைவரும் சமம்

23. அரசியலமைப்பு சட்டப்பிரிவு 14 வழங்குவது **(PTA -5)**
***அ) சட்டத்தின் முன் அனைவரும் சமம்*** ஆ) பாகுபடுத்துவதை தடை செய்தல்
இ) சம வாய்ப்பளித்தல் ஈ) பட்டங்களை நீக்குதல்

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக

1. முதன் முதலில் அரசியலமைப்பு எனும் கொள்கை ***அமெரிக்காவில்*** தோன்றியது.
2. அரசியல் நிர்ணய சபையின் தற்காலிக தலைவராக ***Dr. சச்சிதானந்த சின்கா*** தேர்ந்தெடுக்கப்பட்டார்.
3. இந்திய அரசியலமைப்பு ஏற்றுக்கொள்ளப்பட்ட நாள் மற்றும் ஆண்டு ***1949 ஆம் ஆண்டு நவம்பர் 26***
4. ***ஐந்து*** நீதிப்பேராணைகள் சட்டப்பிரிவு 32-ல் குறிப்பிடப்படுகின்றன.
5. இந்திய குடிமக்களுக்கு அடிப்படை கடமைகள் ***51A*** பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ளன.

### கூடுதல் வினாக்கள்

6. ***1946*** ஆம் ஆண்டு இந்திய அரசியல் நிர்ணய சபையால் இந்திய அரசியலமைப்பு உருவாக்கப்பட்டது.
7. இந்திய அரசியல் நிர்ணய சபையில் மொத்தம் ***389*** உறுப்பினர்கள் இருந்தனர்.
8. இந்திய அரசியலமைப்பு நிர்ணய சபையின் தலைவர் ***டாக்டர் இராஜேந்திர பிரசாத்***
9. இந்திய அரசியலமைப்பு நிர்ணய சபையின் கூட்டத்தில் ***2473*** திருத்தங்கள் முன்வைக்கப்பட்டது.
10. ***டாக்டர்.பி.ஆர்.அம்பேத்கர்*** இந்திய அரசியலமைப்பின் தந்தை என அறியப்படுகிறார்.
11. ***சிட்டிசன்*** எனும் சொல் 'சிவிஸ்' எனும் இலத்தின் சொல்லிலிருந்து பெறப்பட்டதாகும்.
12. தற்போது உள்ள அடிப்படை உரிமைகள் ***ஆறு***
13. சட்டத்திற்கு புறம்பாக ஒருவர் கைது செய்யப்படுவதிலிருந்து பாதுகாப்பது ***ஆட்கொணர்வு நீதிப் பேராணை***
14. அரசியலமைப்பின் 8வது அட்டவணையில் தற்போது ***22*** மொழிகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.
15. தமிழ் செம்மொழி தகுதியை பெற்ற ஆண்டு ***2004***.
16. அரசியலமைப்பின் 42வது சட்டத்திருத்தம் ***சிறிய அரசியலமைப்பு*** என அறியப்படுகிறது.

## III. பொருத்துக

| | | |
|---|---|---|
| 1. குடியுரிமைச் சட்டம் | - | அ) ஜவகர்லால் நேரு |
| 2. முகவுரை | - | ஆ) 42-வது அரசியலமைப்பு சட்டத்திருத்தம் |
| 3. குறு அரசியலமைப்பு | - | இ) 1955 |
| 4. செம்மொழி | - | ஈ) 1962 |
| 5. தேசிய அவசரநிலை **(PTA -4)** | - | உ) தமிழ் |

| **விடைகள்:** | 1 - இ | 2 - அ | 3 - ஆ | 4 - உ | 5 - ஈ |
|---|---|---|---|---|---|

### கூடுதல் வினாக்கள்

**அ)**

| | | |
|---|---|---|
| 1. முகவுரை திருத்த சட்டம் | - | அ) 1969 |
| 2. குடியுரிமை சட்டம் | - | ஆ) 1976 |
| 3. அனைவருக்கும் கல்வி சட்டம் | - | இ) 1978 |
| 4. மத்திய-மாநில அரசு உறவு குழு | - | ஈ) 1955 |
| 5. சொத்துரிமை நீக்கம் | - | உ) 2002 |

| **விடைகள்:** | 1 - ஆ | 2 - ஈ | 3 - உ | 4 - அ | 5 - இ |
|---|---|---|---|---|---|

**ஆ)**

| | | |
|---|---|---|
| 1. தீண்டாமை ஒழித்தல் | - | அ) பிரிவு 30 |
| 2. குழந்தை தொழிலாளர் முறை தடுப்பு | - | ஆ) பிரிவு 17 |
| 3. சிறுபான்மையினர் கல்வி நிறுவனம் நிர்வகிக்க உரிமை | - | இ) பிரிவு 32 |
| 4. சமயத்தை பரப்பும் உரிமை | - | ஈ) பிரிவு 24 |
| 5. நீதிமன்றத்தை அணுகி உரிமை பெறுதல் | - | உ) பிரிவு 25 |

| **விடைகள்:** | 1 - ஆ | 2 - ஈ | 3 - அ | 4 - உ | 5 - இ |
|---|---|---|---|---|---|

**இ)**

| | | |
|---|---|---|
| 1. தேசிய அவசர நிலை | - | அ) பிரிவு 356 |
| 2. மாநில அவசர நிலை | - | ஆ) பிரிவு 51A |
| 3. நிதி சார்ந்த அவசர நிலை | - | இ) பிரிவு 368 |
| 4. அரசியலமைப்பு திருத்தம் | - | ஈ) பிரிவு 352 |
| 5. அடிப்படை கடமைகள் | - | உ) பிரிவு 360 |

| **விடைகள்:** | 1 - ஈ | 2 - அ | 3 - உ | 4 - இ | 5 - ஆ |
|---|---|---|---|---|---|

## IV. சுருக்கமாக விடையளிக்கவும்.

**1. அரசியலமைப்பு என்றால் என்ன?**

- ஒரு நாட்டின் நிர்வாகமானது எந்த அடிப்படைக் கொள்கைகளைச் சார்ந்து அமைந்துள்ளது என்பதை பிரதிபலிக்கும் அடிப்படைச் சட்டமே அரசியலமைப்பு என்பதாகும்.
- ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு அரசியலமைப்பே அச்சாணி ஆகும்.
- அரசியலமைப்பு என்ற கொள்கை முதன்முதலில் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் (U.S.A) தோன்றியது.

**2. குடியுரிமை என்பதன் பொருள் என்ன? (PTA -5)**

- 'சிட்டிசன்' (Citizen) எனும் சொல் 'சிவிஸ்' (Civis) எனும் இலத்தின் சொல்லிலிருந்து பெறப்பட்டதாகும்.
- இதன் பொருள் ஒரு 'நகர அரசில் வசிப்பவர்' என்பதாகும்.
- இந்திய அரசியலமைப்பு, இந்தியா முழுவதும் ஒரே மாதிரியான ஒற்றை குடியுரிமையை வழங்குகிறது.
- இந்திய அரசியலமைப்பின் பாகம் II 5 லிருந்து 11 வரையுள்ள பிரிவுகள் குடியுரிமையை பற்றி விளக்குகிறது.

3. **இந்திய அரசியலமைப்பால் வழங்கப்படும் அடிப்படை உரிமைகளை பட்டியலிடுக.**
   - ♣ இந்திய அரசியலமைப்புச் சட்டம் பகுதி (III) 12 லிருந்து 35 வரையுள்ள பிரிவுகள் அடிப்படை உரிமைகள் பற்றி கூறுகின்றன.
   - ♣ தற்போது ஆறு அடிப்படை உரிமைகள் மட்டுமே உள்ளன.
     1. சமத்துவ உரிமை 2. சுதந்திர உரிமை
     3. சுரண்டலுக்கெதிரான உரிமை 4. சமய சார்பு உரிமை
     5. கல்வி, கலாச்சார உரிமை 6. அரசியலமைப்பு, சட்ட மேல்முறையீட்டு உரிமைகள்

4. **நீதிப்பேராணை (Writ) என்றால் என்ன?**
   - ♣ நீதிமன்ற முத்திரையுடன், நீதிமன்றத்தால் வெளியிடப்படும் கட்டளை அல்லது ஆணை நீதிப்பேராணை எனப்படும்.
   - ♣ இது சில சட்டங்களை நிறைவேற்றாமல் தடைசெய்ய, நீதிமன்றத்தால் வெளியிடப்படும் ஒரு ஆணையாகும்.
   - ♣ உச்சநீதிமன்றம் மற்றும் உயர்நீதி மன்றங்கள் இரண்டுமே ஐந்து வகையான நீதிப்பேராணைகளை வெளியிட அதிகாரம் பெற்றுள்ளன.

5. **இந்தியாவின் செம்மொழிகள் எவை?**
   - ♣ 2004ம் ஆண்டு இந்திய அரசு “செம்மொழிகள்” எனும் புதிய வகைப்பாட்டினை ஏற்படுத்த தீர்மானித்தது. அதன்படி 6 மொழிகள் செம்மொழி தகுதியை பெற்றுள்ளன.
   - ♣ அவை, தமிழ்(2004), சமஸ்கிருதம் (2005), தெலுங்கு(2008), கன்னடம்(2008), மலையாளம் (2013) மற்றும் ஒடியா(2014).

6. **தேசிய அவசரநிலை என்றால் என்ன?** **(PTA -6)**
   - ♣ போர், வெளிநாட்டினர் ஆக்கிரமிப்பு, அல்லது ஆயுதமேந்திய கிளர்ச்சி அல்லது உடனடி ஆபத்து அல்லது அச்சுறுத்தல் காரணமாக இந்தியாவின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டால், குடியரசுத் தலைவர், அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 352ன் கீழ் அவசர நிலையை அறிவிக்கலாம்.
   - ♣ போர் அல்லது வெளிநாட்டினர் ஆக்கிரமிப்பின் காரணமாக அவசரநிலை அறிவிக்கப்படும் பொழுது அது ‘வெளிப்புற அவசரநிலை’ எனப்படுகிறது.
   - ♣ ஆயுதமேந்திய கிளர்ச்சிக் காரணமாக அவசர நிலை அறிவிக்கப்படும் பொழுது அது “உள்நாட்டு அவசர நிலை“ எனப்படுகிறது.

7. **மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு இடையேயான உறவுகளை மூன்று தலைப்புகளில் பட்டியலிடுக.**
   - ♣ **சட்டமன்ற உறவுகள்** - மத்திய பாராளுமன்றம், இந்தியா முழுவதற்கும் அல்லது இந்தியாவின் எந்த பகுதிக்கும் சட்டமியற்றும் அதிகாரம் பெற்றுள்ளது.
   - ♣ **நிர்வாக உறவுகள்** - ஒரு மாநில அரசின் நிர்வாக அதிகாரம் அதன் சொந்த மாநிலத்தில் மட்டுமே உள்ளது, மத்திய அரசும், பிரத்தியோக நிர்வாக அதிகாரம் பெற்றுள்ளது.
   - ♣ **நிதி உறவுகள்** - மத்திய-மாநில அரசுகள், அரசியலமைப்பு சட்டத்தின் மூலம், பலவகையான வரிகளை விதிக்கும் அதிகாரங்களைப் பெற்றுள்ளன.

## கூடுதல் வினாக்கள்

8. **கட்டளையுறுத்தும் நீதிப்பேரானை – சிறுகுறிப்பு வரைக.** **(PTA -1)**
   - ♣ மனுதாரர் சட்ட உதவியுடன் தனது மனு தொடர்பான பணியினை சம்மந்தப்பட்ட துறையிலிருந்து நிறைவேற்றிக் கொள்வதே கட்டளையுறுத்தும் நீதிப் பேராணை எனப்படும்.
   - ♣ இது கீழ் நீதிமன்றங்களுக்கு உயர் நீதிமன்றம் இடும் ஆணை ஆகும்.
   - ♣ இது பணிகளை விரைந்து முடிக்க கீழ் நீதி மன்றங்களுக்கு உயர் நீதிமன்றம் ஆணை பிறப்பிப்பதால் தடைப்பட்ட பணிகள் விரைந்து முடிக்கப்படுகின்றன.

9. **ஏதேனும் இரு அடிப்படை உரிமைகளை எழுதுக.** **(PTA -3)**
   1. **சமத்துவ உரிமை**
      - ♣ பிரிவு 14 - சட்டத்தின் முன் அனைவரும் சமம் ♣ பிரிவு 17 - தீண்டாமையை ஒழித்தல்
   2. **சுதந்திர உரிமை**
      - ♣ பிரிவு 19 - பேச்சுரிமை, விரும்பிய இடத்தில் வசிக்கும் உரிமை
      - ♣ பிரிவு 21எ - தொடக்க கல்வி பெறும் உரிமை

**10. உலகளாவிய வயது வந்தோர் வாக்குரிமை என்றால் என்ன? (PTA -6)**

- மக்களவை மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களை தேந்தெடுப்பதில் வயது வந்தோர் வாக்குரிமை பின்பற்றப்படுகிறது.
- வாக்காளராக பதிவு செய்யப்பட்ட 18 வயது நிரம்பிய இந்திய மக்கள் அனைவரும் தங்கள் பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்க உரிமை உள்ளவர்கள்.
- 18 வயது என்பது உலகளாவிய வயது வந்தோர் வாக்குரிமைக்கான வயது ஆகும்.

**11. உச்சநீதிமன்றம் அரசியலமைப்பு சட்டத்தின் பாதுகாவலன் என ஏன் அழைக்கப்படுகிறது?**

ஆட்கொணர்வு நீதிப்பேராணை, கட்டளையுறுத்தும் நீதிப்பேராணை, தடையுறுத்தும் நீதிப்பேராணை, ஆவணக்கேட்பு நீதிப்பேராணை, தகுதிமுறை வினவும் நீதிப்பேராணை ஆகிய ஆணைகளை வெளியிட்டு மக்களின் உரிமைகளைக் காப்பதினால் உச்சநீதிமன்றம் 'அரசியலமைப்பின் பாதுகாவலன்' என அழைக்கப்படுகிறது.

**12. 2002 -ஆம் ஆண்டு 86வது சட்ட திருத்தம் பற்றி உமக்கு என்ன தெரியும்?**

- 2002 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட, 86 வது அரசியலமைப்பு சட்டத்திருத்தத்தின்படி, இந்திய அரசியலமைப்பின் பிரிவு 45 திருத்தப்பட்டு, பிரிவு 21 A வின் கீழ்தொடக்கக் கல்வி, அடிப்படை உரிமையாக சேர்க்கப்பட்டுள்ளது.
- இந்தத் திருத்தம், மாநில அரசுகள் முன்பருவ மழலையர் கல்வியை 6 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு வழங்க அறிவுறுத்துகிறது.

**13. 1976 -ஆம் ஆண்டு 42வது சட்ட திருத்தம் பற்றி உமக்கு என்ன தெரியும்?**

- 1976 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட 42 வது அரசியலமைப்பு சட்டத்திருத்தம் மாநிலப்பட்டியலில் இருந்து 5 துறைகளை, பொதுப் பட்டியலுக்கு மாற்றியது.
- கல்வி, காடுகள், எடைகள் மற்றும் அளவுகள், பறவைகள் மற்றும் வனவிலங்குகள் பாதுகாப்பு, மற்றும் உச்சநீதிமன்றம், உயர்நீதிமன்ற அமைப்புகளைத் தவிர பிற நீதிமன்றங்களின் நீதி நிர்வாகம் ஆகியனவாகும்.

**14. அரசியலமைப்பில் குறிப்பிட்டுள்ள மூன்று நெருக்கடி நிலைகள் யாவை?**

- தேசிய அவசரநிலை - பிரிவு 352
- மாநில அவசரநிலை - பிரிவு 356
- நிதிசார்ந்த அவசரநிலை - பிரிவு 360

**15. அரசியலமைப்பு திருத்த முறைகள் யாவை?**

- பாராளுமன்றத்தின் சாதாரண அறுதிப் பெரும்பான்மை மூலம் திருத்தப்படுதல்.
- பாராளுமன்றத்தின் சிறப்பு அறுதிப் பெரும்பான்மை மூலம் திருத்தப்படுதல்.
- பாராளுமன்றத்தின் சிறப்பு அறுதிப் பெரும்பான்மையுடன் பாதிக்கும் மேற்பட்ட மாநில சட்டமன்றங்களின் ஒப்புதலைப் பெறுவதன் மூலம் திருத்தப்படுதல்.

**16. அரசியலமைப்பு உருவாதல் குழு - குறிப்பு வரைக.**

- Dr. இராஜேந்திர பிரசாத் - இந்திய அரசியலமைப்பு நிர்ணய சபை தலைவர்.
- டாக்டர் அம்பேத்கார் - அரசியலமைப்பு வரைவுக்குழு தலைவர்.
- H.C. முகர்ஜி மற்றும் V.T. கிருஷ்ணாமாச்சாரி - துணைத் தலைவர்கள்.
- 11 அமர்வுகள் - 166 நாட்கள் நடைபெற்றது.

**17. டாக்டர் அம்பேத்கர் - குறிப்பு வரைக.**

- அரசியலமைப்பு சட்ட வரைவுகுழுத் தலைவர் டாக்டர் அம்பேத்கர் தலைமையின் கீழ் இந்திய அரசியலமைப்பு சட்டம் உருவாக்கப்பட்டது.
- எனவே இவரை 'இந்திய அரசியலமைப்பின் தந்தை' என அறியப்படுகிறார்.

18. **முகவுரை - குறிப்பு வரைக.**
   - ♣ முகவுரை என்ற வார்த்தை அரசியலமைப்பிற்கு அறிமுகம் அல்லது முகவுரை என்பதை குறிக்கிறது.
   - ♣ இது அரசியலமைப்பின் அடிப்படைக் கொள்கைகள், நோக்கங்கள் மற்றும் இலட்சியங்களை உள்ளடக்கியது.
   - ♣ இது பெரும் மதிப்புடன் அரசியலமைப்பின் திறவுகோல் என விவரிக்கப்படுகிறது.

19. **அமெண்மெண்ட் - குறிப்பு வரைக.**
   - ♣ அமெண்மெண்ட் எனும் பதம் மாற்றம், மேம்படுத்துதல் மற்றும் சிறு மாறுதல் என்பதைக் குறிக்கிறது.

## V. பின்வரும் வினாக்களுக்கு விரிவான விடையளிக்கவும்.

1. **இந்திய அரசியலமைப்பின் சிறப்புக் கூறுகளை விளக்குக.** **(PTA -1)**
   - ♣ உலகிலுள்ள எழுதப்பட்ட, அனைத்து அரசியலமைப்புகளை விடவும் மிகவும் நீளமானது.
   - ♣ இதன் பெரும்பாலான கருத்துக்கள் பல்வேறு நாடுகளின் அரசியலமைப்புகளிலிருந்து பெறப்பட்டது.
   - ♣ இது நெகிழாத் தன்மை கொண்டதாகவும், நெகிழும் தன்மை கொண்டதாகவும் உள்ளது.
   - ♣ கூட்டாட்சி முறை அரசாங்கத்தை (மத்திய, மாநில அரசுகள்) ஏற்படுத்துகிறது.
   - ♣ இந்தியாவை, ஒரு சமயச் சார்பற்ற நாடாக்குகிறது. சுதந்திரமான நீதித்துறையை வழங்குகிறது.
   - ♣ உலகளாவிய வயது வந்தோர் வாக்குரிமையை அறிமுகப்படுத்தியதோடு 18 வயது நிரம்பிய குடிமக்கள் அனைவருக்கும் எந்தவித பாகுபாடுமின்றி வாக்குரிமையை வழங்குகிறது.

2. **அடிப்படை உரிமைகளைக் குறிப்பிடுக.** **(MDL -19)**

| அடிப்படை உரிமைகள் |
|---|
| அ) சமத்துவ உரிமை |
| ஆ) சுதந்திர உரிமை |
| இ) சுரண்டலுக்கெதிரான உரிமை |
| ஈ) சமய சார்பு உரிமை |
| உ) கல்வி, கலாச்சார உரிமை |
| ஊ) அரசியலமைப்புக்குட்பட்டு தீர்வு காணும் உரிமை |

**அ) சமத்துவ உரிமை**
- ♣ பிரிவு 14- சட்டத்தின் முன் அனைவரும் சமம்.
- ♣ பிரிவு 15- மதம், இனம், சாதி, பாலினம் மற்றும் பிறப்பிடம் இவற்றின் அடிப்படையில் பாகுபடுத்துவதை தடைசெய்தல்.
- ♣ பிரிவு16- பொது வேலைவாய்ப்புகளில் சமவாய்ப்பளித்தல்
- ♣ பிரிவு17- தீண்டாமையை ஒழித்தல்
- ♣ பிரிவு 18- இராணுவ மற்றும் கல்விசார் பட்டங்களைத் தவிர மற்ற பட்டங்களை நீக்குதல்

**ஆ) சுதந்திர உரிமை**
- ♣ பிரிவு 19 - பேச்சுரிமை, கருத்து தெரிவிக்கும் உரிமை, அமைதியான முறையில் கூட்டம் கூடுவதற்கு உரிமை, சங்கங்கள், அமைப்புகள் தொடங்க உரிமை, இந்திய நாட்டிற்குள் விரும்பிய இடத்தில் வசிக்கும், மற்றும் தொழில் செய்யும் உரிமை.
- ♣ பிரிவு 20 - குற்றஞ்சாட்டப்பட்ட நபர்களுக்கான உரிமை மற்றும் தண்டனைகளிலிருந்து பாதுகாப்பு பெறும் உரிமை.
- ♣ பிரிவு 21 - வாழ்க்கை மற்றும் தனிப்பட்ட சுதந்திரத்திற்கு பாதுகாப்பு பெறும் உரிமை
- ♣ பிரிவு 21A - தொடக்கக்கல்வி பெறும் உரிமை
- ♣ பிரிவு 22 - சில வழக்குகளில் கைது செய்து தடுப்புக் காவலில் வைப்பதற்கெதிரான பாதுகாப்பு உரிமை

**இ) சுரண்டலுக்கெதிரான உரிமை**
- ♣ பிரிவு 23 - கட்டாய வேலை, கொத்தடிமை முறை மற்றும் மனிதத்தன்மையற்ற வியாபாரத்தைத் தடுத்தல்
- ♣ பிரிவு 24 - தொழிற்சாலைகள் மற்றும் ஆபத்தான இடங்களில் குழந்தைத் தொழிலாளர் முறையைத் தடுத்தல்

**ஈ) சமய சார்பு உரிமை**

- ♣ பிரிவு 25 - எந்த ஒரு சமயத்தினை ஏற்கவும், பின்பற்றவும், பரப்பவும் உரிமை.
- ♣ பிரிவு 26 - சமய விவகாரங்களை நிர்வகிக்கும் உரிமை
- ♣ பிரிவு 27 - எந்தவொரு மதத்தையும் பரப்புவதற்காக வரி செலுத்துவதற்கெதிரான சுதந்திரம்,
- ♣ பிரிவு 28 - மதம் சார்ந்த கல்வி நிறுவனங்களில நடைபெறும் வழிபாடு மற்றும் அறிவுரை நிகழ்வுகளில் கலந்துகொள்ளாமலிருக்க உரிமை

**உ) கல்வி, கலாச்சார உரிமை**

- ♣ பிரிவு 29 - சிறுபான்மையினரின் எழுத்து மொழி, மற்றும் கலாச்சாரப் பாதுகாப்பு
- ♣ பிரிவு 30 - சிறுபான்மையினரின் கல்வி நிறுவனங்களை நிறுவி, நிர்வகிக்கும் உரிமை.

**ஊ) அரசியலமைப்புக்குட்பட்டு தீர்வு காணும் உரிமை**

- ♣ பிரிவு 32 - தனிப்பட்டவரின், அடிப்படை உரிமைகள் பாதிக்கப்படும் போது நீதிமன்றத்தை அணுகி உரிமையை பெறுதல்.

**3. அரசியலமைப்புக்குட்பட்டு தீர்வு காணும் உரிமை பற்றி எழுதுக.**

| அரசியலமைப்புக்குட்பட்டு தீர்வு காணும் உரிமை |
|---|
| அ) ஆட்கொணர்வு நீதிப்பேராணை |
| ஆ) கட்டளையுறுத்தும் நீதிப்பேராணை |
| இ) தடையுறுத்தும் நீதிப்பேராணை |
| ஈ) ஆவணக் கேட்பு பேராணை |
| உ) தகுதிமுறை வினவும் நீதிப்பேராணை |

**அரசியலமைப்புக்குட்பட்டு தீர்வு காணும் உரிமை (சட்டப்பிரிவு-32)**

- ♣ நீதிமன்ற முத்திரையுடன், நீதிமன்றத்தால் வெளியிடப்படும் கட்டளை அல்லது ஆணை நீதிப்பேராணை எனப்படும்.
- ♣ இது சில சட்டங்களை நிறைவேற்றாமல் தடைசெய்ய, நீதிமன்றத்தால் வெளியிடப்படும் ஆணையாகும்.
- ♣ உச்சநீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றங்கள் இரண்டுமே ஐந்து வகையான நீதிப்பேராணைகளை வெளியிட அதிகாரம் பெற்றுள்ளன.

**அ) ஆட்கொணர்வு நீதிப்பேராணை**

- ♣ சட்டத்திற்கு புறம்பாக ஒருவர் கைது செய்யப்படுவதிலிருந்து இது பாதுகாக்கிறது.

**ஆ) கட்டளையுறுத்தும் நீதிப்பேராணை**

- ♣ மனுதாரர் சட்ட உதவியுடன் தனது மனுதொடர்பான பணியினை சம்மந்தப்பட்ட துறையிலிருந்து நிறைவேற்றிக் கொள்ள முடியும்

**இ) தடையுறுத்தும் நீதிப்பேராணை**

- ♣ ஒரு கீழ்நீதிமன்றம் தனது, சட்ட எல்லையைத் தாண்டி செயல்படுவதைத் தடுக்கிறது.

**ஈ) ஆவணக் கேட்பு பேராணை**

- ♣ உயர்நீதிமன்றம், ஆவணங்களை நியாயமான பரிசீலனைக்கு தனக்கோ அல்லது உரிய அதிகாரிக்கோ அனுப்பச் செய்ய கீழ்நீதிமன்றங்களுக்கு இடும் ஆணை ஆகும்.

**உ) தகுதிமுறை வினவும் நீதிப்பேராணை**

- ♣ இப்பேராணை சட்டத்திற்குப் புறம்பாக, தகாத முறையில், அரசு அலுவலகத்தைக் கைப்பற்றுவதை தடை செய்கிறது.

4. அடிப்படை உரிமைகளுக்கும், அரசு நெறிமுறையுறுத்தும் கோட்பாடுகளுக்கும் இடையேயான வேறுபாடுகளைக் குறிப்பிடுக.

| வ.எண் | அடிப்படை உரிமைகள் | அரசு நெறிமுறையுறுத்தும் கோட்பாடுகள் |
|---|---|---|
| 1. | இது அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசியலமைப்பிலிருந்து பெறப்பட்டது. | இது அயர்லாந்து நாட்டின் அரசியலமைப்பிலிருந்து பெறப்பட்டது. |
| 2. | அரசாங்கத்தால் கூட இந்த உரிமையை சுருக்கவோ, நீக்கவோ முடியாது. | இவை அரசுக்கு வெறும் அறிவுறுத்தல்களே ஆகும். |
| 3. | இவற்றை நீதிமன்ற சட்டத்தால் செயற்படுத்த முடியும். | எந்த நீதிமன்றத்தாலும் கட்டாயப்படுத்த முடியாது |
| 4. | இவை சட்ட ஒப்புதலைப் பெற்றவை | இவை தார்மீக மற்றும் அரசியல் ஒப்புதலைப் பெற்றவை. |
| 5. | இந்த உரிமைகள் நாட்டின் அரசியல் ஜனநாயகத்தை வலுப்படுத்துகிறது. | இந்த கொள்கைகளை செயற்படுத்தும் பொழுது, சமுதாய மற்றும் பொ ருளாதார ஜனநாயகம் உறுதியாகிறது |

## கூடுதல் வினாக்கள்

5. இந்திய குடிமகனின் அடிப்படை கடமைகளை குறிப்பிடுக. (PTA -4)

➲ **அடிப்படைக் கடமைகள்**

- ♣ இந்திய அரசியலமைப்பில் அடிப்படைக்கடமைகள் என்பவை முன்னாள் சோவியத் யூனியன் (USSR) அரசியலமைப்பின் தாக்கத்தால் சேர்க்கப்பட்டதாகும்.
- ♣ 1976ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது சர்தார் ஸ்வரன் சிங் கமிட்டியை அமைத்து அடிப்படைக் கடமைகள் குறித்து ஆராய பரிந்துரை செய்தது.
- ♣ ஒவ்வொரு இந்தியக்குடிமகனின் கடமைகளாக பின்வருவனவற்றை பிரிவு 51A வலியுறுத்துகிறது.

➲ **அடிப்படைக் கடமைகளின் பட்டியல்**

- ♣ ஒவ்வொரு இந்தியக் குடிமகனும் அரசியலமைப்பு, அதன் கொள்கைகள், நிறுவனங்கள், தேசிய கீதம், தேசியக்கொடி, தேசிய சின்னங்கள் ஆகியவற்றை மதித்தல்.
- ♣ சுதந்திர போராட்டத்திற்கு தூண்டுகோலாக அமைந்த உயரிய நோக்கங்களை போற்றி வளர்த்தல்.
- ♣ இந்தியாவின் இறையாண்மை, ஒற்றுமை, ஒருமைப்பாடு இவற்றை பேணிப் பாதுகாத்தல்.
- ♣ தேசப் பாதுகாப்பிற்காக, தேவைப்படும் பொழுது தேசப்பணியாற்ற தயாராயிருத்தல்.
- ♣ சமய, மொழி மற்றும் பிராந்திய அல்லது பகுதி சார்ந்த வேறுபாடுகளை மறந்து, இந்திய மக்கள் அனைவரிடையேயும் சகோதரத்துவத்தை வளர்த்தல்.
- ♣ காடுகள், ஏரிகள், ஆறுகள், வனவிலங்குகள் மற்றும் உயிரினங்கள் அடங்கிய இயற்கை சுற்றுச்சூழலைப் பாதுகாத்து, மேம்படுத்தி அவை வாழும் சூழலை ஏற்படுத்துதல்.
- ♣ வன்முறையைக் கைவிட்டு பொது சொத்துக்களை பாதுகாத்தல்.
- ♣ தனிப்பட்ட மற்றும் கூட்டுசெயல்பாடுகள் என அனைத்து செயல்பாடுகளிலும் சிறந்தவற்றை நோக்கி செயல்பட்டு, தேசத்தின் நிலையான, உயர்ந்த முயற்சி மற்றும் சாதனைக்காக உழைத்தல்.
- ♣ 6 முதல் 14 வயது வரையுள்ள குழந்தைகள் அனைவருக்கும் கல்வி பெறும் வாய்ப்பினை வழங்குதல் போன்றவை ஆகும்.

6. இந்திய குடியுரிமை பெற என்னென்ன தகுதிகள் வேண்டும் - விவரிக்க.

| இந்திய குடியுரிமை பெறுவதற்கான தகுதிகள் |
|---|
| அ) பிறப்பு |
| ஆ) வம்சாவளி |
| இ) பதிவு |
| ஈ) இயல்புரிமை |
| உ) பிரதேச (நாடுகள்) இணைவு |

குடியுரிமைச் சட்டம் 1955 ன் படி ஒருவர் கீழ்க்காணும் ஏதேனும் ஒரு முறையில் குடியுரிமைப் பெறமுடியும்.

**அ) பிறப்பு**

1950 ஆம் ஆண்டு ஜனவரி 26 அன்றோ அல்லது அதற்கு பின்னரோ இந்தியாவில் பிறந்த அனைவரும் இந்திய குடிமக்களாகக் கருதப்படுவர்.

**ஆ) வம்சாவளி**

1950 ஆம் ஆண்டு ஜனவரி 26 அன்றோ அல்லது அதற்கு பின்னரோ வெளிநாட்டில் பிறந்த ஒருவரின் தந்தை(அவர் பிறந்தபோது) இந்தியக் குடிமகனாக இருக்கும் பட்சத்தில் வெளிநாட்டில் பிறந்த அவர், வம்சாவளி மூலம் இந்தியக் குடியுரிமை பெறமுடியும்.

**இ) பதிவு**

ஒருவர் இந்தியக் குடியுரிமை கோரி, பொருத்தமான அங்கீகாரத்துடன் பதிவு செய்வதன் மூலம் இந்தியக்குடியுரிமை பெறலாம்.

**ஈ) இயல்புரிமை**

ஒரு வெளிநாட்டவர், இந்திய அரசிற்கு, இயல்புரிமை கோரி விண்ணப்பிப்பதன் மூலம் அவர், இந்தியக் குடியுரிமை பெறலாம்.

**உ) பிரதேச (நாடுகள்) இணைவு**

பிற நாடுகள் / பகுதிகள் இந்தியாவுடன் இணையும் போது இந்திய அரசு அவ்வாறு இணையும் நாடுகளின் மக்களை தமது குடிமக்களாகக் கருதி அவர்களுக்கு குடியுரிமை வழங்கலாம்.

7. **பேராணை அதிகாரங்கள் குறித்து எழுதுக.** **(PTA -6)**

**அ) பேராணை அதிகாரங்கள்:**

நீதிமன்ற முத்திரையுடன், நீதிமன்றத்தால் வெளியிடப்படும் கட்டளை அல்லது ஆணை நீதிப் பேராணை எனப்படும். இது சில சட்டங்களை நிறைவேற்றாமல் தடைசெய்ய, நீதிமன்றத்தால் வெளியிடப்படும் ஆணையாகும்.

- ❖ இந்திய அரசிலயமைப்பு சட்டப்பிரிவு 226 அடிப்படை உரிமைக்காக மட்டுமின்றி மற்ற நோக்கங்களுக்காகவும் பேராணைகள் வெளியிடும் அதிகாரங்களை உயர்நீதி மன்றங்களுக்கு வழங்கியுள்ளது.
- ❖ சட்டப்பிரிவு 32-ன் கீழ் உச்ச நீதிமன்றம் வழங்கும் நீதிப் பேராணைகள், ஆணைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் போன்றே உயர்நீதிமன்றமும் ஆணைகளை வழங்க அதிகாரம் பெற்றுள்ளது.
- ❖ இந்த சட்டப்பிரிவுகளின் வெளியிட உயர் நீதிமன்றங்களுக்கு வழங்கிய அதிகாரம் பெரியதாகும்.
- ❖ அடிப்படை உரிமைகள் மீறப்பட்டால் மட்டுமே உச்ச நீதிமன்றம் இதுபோன்ற வழக்குகளில் மட்டுமே சாதாரண சட்ட மீறலுக்கும் நீதிப் பேராணைகளை வெளியிட முடியும்.

**ஆ) நீதிப்பேராணை வகைகள்**

1. **ஆட்கொணர்வு நீதிப்பேராணை**

சட்டத்திற்கு புறம்பாக ஒருவர் கைது செய்யப்படுவதிலிருந்து இது பாதுகாக்கிறது.

2. **கட்டளையுறுத்தும் நீதிப்பேராணை**

மனுதாரர் சட்ட உதவியுடன் தனது மனுதொடர்பான பணியினைச் சம்மந்தப்பட்ட துறையிலிருந்து நிறைவேற்றிக் கொள்ள முடியும்.

3. **தடையுறுத்தும் நீதிப்பேராணை**

ஒரு கீழ்நீதிமன்றம் தனது, சட்ட எல்லையைத் தாண்டி செயல்படுவதைத் தடுக்கிறது.

4. **ஆவணக் கேட்பு பேராணை**

உயர்நீதிமன்றம், ஆவணங்களை நியாயமான பரிசீலனைக்கு தனக்கோ அல்லது உரிய அதிகாரிக்கோ அனுப்பச் செய்ய கீழ்நீதிமன்றங்களுக்கு இடும் ஆணை ஆகும்.

5. **தகுதிமுறை வினவும் நீதிப்பேராணை**

இப்பேராணை சட்டத்திற்கப் புறம்பாக, தகாத முறையில் அரசு அலுவலகத்தைக் கைப்பற்றுவதை தடை செய்கிறது.

www.Padasalai.Net

# பொருளியல்

www.Padasalai.Net



# 1. மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் அதன் வளர்ச்சி: ஓர் அறிமுகம்

## முக்கிய குறிப்புகள்

| | |
|---|---|
| நாட்டு வருமானம் | நாட்டு வருமானம் என்பது ஒரு நாட்டில் ஓர் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பாகும். |
| மொத்த நாட்டு உற்பத்தி (GNP) | மொத்த நாட்டு உற்பத்தி என்பது அந்தநாட்டு மக்களால் ஒரு வருடத்தில் உற்பத்தி செய்யப்பட்ட வெளியீடுகளின் மதிப்பைக் குறிக்கும். GNP = C +I+G=(X-M)+NFIA (C =நுகர்வோர் G=அரசு செலவுகள் X-M=ஏற்றுமதி-இறக்குமதி NFIA = வெளிநாட்டிலிருந்து ஈட்டப்பட்ட நிகர வருமானம்) |
| மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) | ஒரு ஆண்டில் நாட்டின் புவியியல் எல்லைக்குள் உள்ள உற்பத்தி காரணிகளால் உற்பத்தி செய்யப்பட்ட வெளியீடுகளின் (பண்டங்கள் + பணிகள்) மொத்த மதிப்பே மொத்த உள்நாட்டு உற்பத்தியாகும். |
| நிகர நாட்டு உற்பத்தி (NNP) | மொத்த உள்நாட்டு உற்பத்தியிலிருந்து மூலதன தேய்மானத்தின் மதிப்பை நீக்கிய பின் கிடைக்கும் பண மதிப்பு நிகர நாட்டு உற்பத்தி = மொத்த உள்நாட்டு உற்பத்தி – தேய்மானம் |
| நிகர உள்நாட்டு உற்பத்தி (NDP) | நிகர நாட்டு உற்பத்தி, மொத்த நாட்டு உற்பத்தியிலிருந்து மூலதன தேய்மானத்தின் மதிப்பை நீக்கிய பின் கிடைக்கும் பண மதிப்பு. நிகர உள்நாட்டு உற்பத்தி = மொத்த உள்நாட்டு உற்பத்தி - தேய்மானம் |
| தலா வருமானம் (PCI) | தலா வருமானம் என்பது மக்களின் வாழ்க்கைத் தரத்தை உணர்த்தும் ஒரு கருவியாகும். நாட்டு வருமானத்தை மக்கள் தொகையில் வகுப்பதன் மூலம் தலா வருமானம் பெறப்படுகிறது. $\text{தலா வருமானம்} = \frac{\text{நாட்டு வருமானம்}}{\text{மக்கள் தொகை}}$ |
| தனிப்பட்ட வருமானம் (PI) | இது நேர்முக வரிவிதிப்பிற்கு முன் தனி நபர்கள் மற்றும் ஒரு நாட்டின் குடும்பங்களின் மூலம் அனைத்து ஆதாரங்களிலிருந்து பெறப்படுகின்ற மொத்த பண வருமானத்தை தனிப்பட்ட வருமானம் எனலாம். |
| செலவிடத் தகுதியான வருமானம் (DI) | செலவிடத் தகுதியான வருமானம் (DI) தனி நபர்கள் மற்றும் குடும்பங்களின் உண்மையான வருமானத்தில் நுகர்வுக்கு செலவிடப்படுகின்ற வருமானத்தை செலவிடத் தகுதியான வருமானம் எனப்படுகிறது. DPI = தனிப்பட்ட வருமானம் + நேர்முக வரி (நுகர்வு முறையில் DI = நுகர்வுச்செலவு + சேமிப்பு) |
| இந்தியாவின் GDP | இந்தியாவில் உற்பத்தி செய்யப்படுகின்ற பண்டங்கள் மற்றும் பணிகளின் அங்காடி மதிப்பே இந்தியாவின் GDP என அழைக்கப்படுகிறது. |
| உள்நாட்டு பொருளாதாரத்தின் 3 துறைகள் | 1. முதன்மை துறை (வேளாண்மை)<br>2. இரண்டாம் துறை (தொழில் துறை)<br>3. மூன்றாம் துறை (பணிகள்) |
| GVA | ஒரு பொருளாதாரத்தில் ஒரு பகுதி, தொழில் அல்லது துறையில் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் மற்றும் பணிகளின் மதிப்பே மொத்த மதிப்பு கூடுதல் (GVA) எனப்படும். |
| அமர்த்தியா சென் | பொருளாதார வளர்ச்சி மனிதனின் பொருள்சார் தேவைக்கு மட்டும் கவனம் செலுத்துகிறது. ஆனால் ஐக்கிய நாடுகளின் பார்வையில், பொருளாதார வளர்ச்சி என்பது வாழ்க்கை தரம் உயர்தல் அல்லது ஒட்டுமொத்த வளர்ச்சியில் கவனம் செலுத்துதலாகும். |
| HDI | ஒரு பொருளாதாரத்தின் உண்மையான முன்னேற்றத்தை அளப்பதற்கு மனிதவள மேம்பாட்டு குறியீடு (HDI) பயன்படுகிறது. |
| மனித மேம்பாட்டுக் குறியீடு | 1990ஆம் ஆண்டு பாகிஸ்தானின் முகஹப் - உல் ஹிக் என்ற பொருளியல் அறிஞரால் அறிமுகப்படுத்தப்பட்டது. |

www.Padasalai.Net



## புத்தக வினாக்கள்

### I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்.

1. GNP யின் சமம்

அ) பணவீக்கத்திற்காக சரிசெய்யப்பட்ட NNP

ஆ) பணவீக்கத்திற்காக சரிசெய்யப்பட்ட GDP

இ) GDP மற்றும் வெளிநாட்டில் ஈட்டப்பட்ட நிகர சொத்து வருமானம்

**ஈ) NNP மற்றும் வெளிநாட்டில் ஈட்டப்பட்ட நிகர சொத்து வருமானம்**

2. நாட்டு வருமானம் அளவிடுவது

அ) பணத்தின் மொத்தமதிப்பு

ஆ) உற்பத்தியாளர் பண்டத்தின் மொத்த மதிப்பு

இ) நுகர்வு பண்டத்தின் மொத்த மதிப்பு

**ஈ) பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பு**

3. முதன்மை துறை இதனை உள்ளடக்கியது

**அ) வேளாண்மை** ஆ) தானியங்கிகள் இ) வர்த்தகம் ஈ) வங்கி

4. …………முறையில் ஒவ்வொரு இடைநிலை பண்டத்தின் மதிப்பை கூட்டும்போது, இறுதி பண்டத்தின் மதிப்பை கணக்கிடலாம்.

அ) செலவு முறை **ஆ) மதிப்பு கூட்டு முறை** இ) வருமான முறை ஈ) நாட்டு வருமானம்

5. GDP யில் எந்த துறை மூலம் அதிகமான வேலைவாய்ப்பு ஏற்படுகிறது?. **(PTA-5)**

அ) வேளாண் துறை ஆ) தொழில்துறை **இ) பணிகள் துறை** ஈ) மேற்கண்ட எதுவுமில்லை

6. பணிகள் துறையில் நடப்பு விலையில் மொத்த மதிப்பு கூடுதல் 2018-19இல் …….. லட்சம் கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது.

அ) 91.06 ***ஆ) 92.26*** இ) 80.07 ஈ) 98.29

7. வேளாண் பண்டங்களின் உற்பத்தியில் இந்தியா ……………..அதிகமாக உற்பத்தியாளர் ஆகும்.

அ) 1 வது ஆ) 3 வது இ) 4 வது ***ஈ) 2 வது***

8. இந்தியாவில் பிறப்பின் போது எதிர்பார்க்கப்பட்ட ஆயுட்காலம் ………ஆண்டுகள் ஆகும்.

***அ) 65*** ஆ) 60 இ) 70 ஈ) 55

9. கீழ்கண்டவற்றுள் எது வர்த்தக கொள்கை?

அ) நீர்பாசன கொள்கை **ஆ) இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கொள்கை**

இ) நில சீர்திருத்தக் கொள்கை ஈ) கூலிக் கொள்கை

10. இந்திய பொருளாதாரம் என்பது

**அ) வளர்ந்து வரும் பொருளாதாரம்** ஆ) தோன்றும் பொருளாதாரம்

இ) இணை பொருளாதாரம் ஈ) அனைத்தும் சரி

### கூடுதல் வினாக்கள்

11. நிகர உள்நாட்டு உற்பத்தி என்பது **(PTA -2)**

(அ) மொத்த உள்நாட்டு உற்பத்தி - தேய்மானம்

**(ஆ) மொத்த நாட்டு உற்பத்தி - தேய்மானம்**

(இ) தனிப்பட்ட வருமானம் - நேர்முகவரி

(ஈ) மேற்கூறிய எதுவும் இல்லை

12. புள்ளியியல் துறை …………ஆவணங்களை பாதுகாக்கிறது.

அ) GNH ஆ) GNP **இ) GDP** ஈ) GVA

13. உலகில் இந்தியா தொழிற்துறையில் ……….இடத்தை வகிக்கிறது.

அ) 6 ஆ) 7 ***இ) 8*** ஈ) 10

14. பொருளாதார வளர்ச்சி என்பது வாழ்வாதார முன்னேற்றத்தின் அம்சமாகும் எனக்கூறியவர் …….
**அ) அமர்த்தியா சென்** ஆ) ஜான் மார்ஷல் இ) மன்மோகன்சிங் ஈ) C.K. ரங்கராஜன்

15. 1970களில் பள்ளிகள் மற்றும் வங்கிகளில் பயன்படுத்த அனுமதிக்காதது……
அ) இங்க் பேனாக்கள் ஆ) கறுப்பு மை பேனாக்கள்
**இ) பந்து முனை பேனாக்கள்** ஈ) சிவப்பு மை பேனாக்கள்

16. இந்தியா கடுமையான சட்டமுறையும், அதிகமான ………….பேசுபவர்களையும் கொண்டுள்ளது.
அ) இந்தி ஆ) தெலுங்கு **இ) ஆங்கிலம்** ஈ) தமிழ்

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக

1. இந்தியாவில் ***பணிகள்*** துறை முதன்மை துறையாகும்.
2. ***தலா வருமானம்*** மக்களின் வாழ்க்கைத் தரத்தை உணர்த்தும் ஒரு கருவியாகும்.
3. இரண்டாம் துறையை வேறுவிதமான ***தொழில்*** துறை என அழைக்கலாம்.

### கூடுதல் வினாக்கள்

4. இந்திய பொருளாதாரத்தின் வளர்ச்சி இயந்திரம் ***பணிகள்*** துறையாகும். **(PTA -6)**
5. அமர்த்தியா சென் ***பொருளியல்*** அறிஞர் ஆவார்.
6. இந்தியா, உலகத்தில் ***ஆறாவது தரவரிசையில்*** மிகப்பெரிய பொருளாதார நாடாகும்.
7. இந்தியா ***ஐந்தாவது*** மிக வேகமாக வளரும் நாடாகும்.
8. GDP யின் விரைவான பொருளாதார வளர்ச்சியைப் பெற நவீன மயமாக்கத்துடன் கூடிய விரைவான தொழில்மயமாக்கல் என்று ***தொழில்துறை*** கொள்கை கூறுகிறது.
9. ***நாட்டு வருமானம்*** என்பது ஒரு நாட்டில் ஓர் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பாகும்.
10. ***நிகர நாட்டு உற்பத்தி*** மொத்த நாட்டு உற்பத்தியிலிருந்து மூலதன தேய்மானத்தின் மதிப்பை நீக்கிய பின் கிடைக்கும் பண மதிப்பு நிகர நாட்டு உற்பத்தியாகும்.
11. ***நிகர உள்நாட்டு உற்பத்தி*** என்பது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் ஒரு பகுதியாகும்.
12. நிகர உள்நாட்டு உற்பத்தி = ***மொத்த உள்நாட்டு உற்பத்தி*** - தேய்மானம்.
13. தேனீர் தயாரிக்க பயன்படுத்தப்படும் டீத்தூள், பால் மற்றும் சர்க்கரை ஆகியன ***இடைநிலை பண்டங்கள்*** ஆகும்.
14. மொத்த உள்நாட்டு உற்பத்தி முறையில் ***வாங்கும் திறன்*** மதிப்பீடு செய்வதற்கு உதவுகிறது.
15. ***சைமன் குஸ்நட்*** என்பவரால் GDPயின் நவீன கருத்து முதன் முதலில் 1934இல் உருவாக்கப்பட்டது.

### கூடுதல் வினா: சரியான கூற்றினை தேர்ந்தெடுக்கவும்.

1. பின்வரும் காரணங்களினால் இந்தியாவின் சேமிப்பு விகிதம் குறைவாக உள்ளது. **(PTA -6)**
i) குறைந்த தனிநபர் வருமானம்
ii) மோசமான செயல்திறன் மற்றும் பொதுத்துறையின் குறைவான பங்களிப்பு
iii) வீடுகள் துறையின் மோசமான பங்களிப்பு
iv) கிராமப்புறத் துறையின் சேமிப்பு திறனை முழுமையாக பயன்படுத்தாதது.
**அ) i, ii, மற்றும் iv சரியானவை** ஆ) i, ii மற்றும் iii சரியானவை
இ) i, ii, iii மற்றும் iv சரியானவை ஈ) i, iii, மற்றும் iv சரியானவை

## III. பொருத்துக

1. மின்சாரம் / எரிவாயு மற்றும் நீர் - அ) நாட்டு வருமானம் / மக்கள் தொகை
2. விலைக் கொள்கை - ஆ) மொத்த உள்நாட்டு உற்பத்தி
3. GST - இ) தொழில் துறை
4. தலா வருமானம் - ஈ) வேளாண்மை
5. C+I+G+(X-M) - உ) பண்டம் மற்றும் பணிகள் மீதானவரி

| விடைகள்: | 1 - இ | 2 - ஈ | 3 - உ | 4 - அ | 5 - ஆ |
|---|---|---|---|---|---|

## V. சுருக்கமாக விடையளிக்கவும்.

**1. நாட்டு வருமானம் - வரையறு**

- ♣ நாட்டு வருமானம் என்பது ஒரு நாட்டில் ஓர் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பாகும்.
- ♣ பொதுவாக நாட்டு வருமானம் மொத்த நாட்டு உற்பத்தி அல்லது நாட்டு வருமான ஈவு எனப்படுகிறது.

**2. மொத்த உள்நாட்டு உற்பத்தி என்றால் என்ன? (PTA -6)**

ஒரு ஆண்டில் நாட்டின் புவியியல் எல்லைக்குள் உள்ள உற்பத்தி காரணிகளினால் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் மற்றும் பணிகளின் அங்காடி மதிப்பே மொத்த உள்நாட்டு உற்பத்தியாகும்.

**3. GDPயின் முக்கியத்துவத்தை எழுதுக**

- ♣ பொருளாதார வளர்ச்சி பற்றிய ஆய்வு பற்றி அறிந்து கொள்ளப் பயன்படுகிறது.
- ♣ பணவீக்கம் மற்றும் பணவாட்டத்தின் சிக்கல்கள் பற்றி அறிய உதவுகிறது.
- ♣ உலகின் வளர்ந்த நாடுகளுடன் ஒப்பீடு செய்வதற்குப் பயன்படுகிறது.
- ♣ வாங்கும் திறனை மதிப்பீடு செய்வதற்கு உதவுகிறது.
- ♣ பொதுத் துறை பற்றி அனைவரும் தெரிந்து கொள்ளப் பயன்படுகின்றது.
- ♣ பொருளாதாரத்தில் திட்டமிட வழிக்காட்டியாகவும் பயன்படுகிறது.

**4. தனி நபர் வருமானம் என்றால் என்ன? (PTA -3, MDL -19)**

- ♣ தனிநபர் வருமானம் (அ) தலா வருமானம் என்பது மக்களின் வாழ்க்கைத் தரத்தை உணர்த்தும் ஒரு கருவியாகும்.
- ♣ நாட்டு வருமானத்தை மக்கள் தொகையால் வகுப்பதன் மூலம் கிடைப்பதே தலா வருமானம் ஆகும்.

$$\text{தலா வருமானம்} = \frac{\text{நாட்டு வருமானம்}}{\text{மக்கள்தொகை}}$$

**5. மதிப்பு கூட்டுமுறையை எடுத்துக்காட்டுடன் வரையறு**

- ♣ உற்பத்தியில் பயன்படுத்தப்பட்ட அனைத்து இடைநிலை பண்டங்களின் மதிப்பை சேர்க்கும் பொழுது, பொருளாதாரத்தில் உற்பத்தி செய்யப்பட்ட இறுதிப் பண்டங்களின் மொத்த மதிப்பை மதிப்பு கூட்டு முறை எனப்படுகிறது.
- ♣ மதிப்புக் கூட்டு முறை = டீத்தூள்+பால்+சர்க்கரை = தேனீர்
- ♣ (இடைநிலைபண்டங்கள் மொத்த மதிப்பு = இறுதிப்பண்டம் மொத்த மதிப்பு)

**6. இந்தியாவின் பொருளாதாரக் கொள்கைகளின் பெயர்களை எழுதுக.**

- ♣ வேளாண் கொள்கை
- ♣ தொழில் துறை கொள்கை
- ♣ புதிய பொருளாதாரக் கொள்கை

**7. சிறு குறிப்பு வரைக. 1) மொத்த தேசிய மகிழ்ச்சி GNH 2) மனித மேம்பாட்டுக் குறியீடு HDI**

**1. மொத்த தேசிய மகிழ்ச்சி GNH**

**➲ GNHஇன் நான்கு தூண்கள்**

1. நிலையான மற்றும் சமமான சமூகபொருளாதார வளர்ச்சி
2. சுற்றுச்சூழல் பாதுகாப்பு
3. கலாச்சாரத்தை பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துதல்
4. நல்ல ஆட்சித் திறன்

**➲ GNHஇன் 9 கலங்கள்**

- ♣ உளவியல் நலன்
- ♣ உடல் நலம்
- ♣ நேரம் பயன்பாடு
- ♣ கல்வி
- ♣ கலாச்சார பன்முகத் தன்மை
- ♣ நல்ல ஆட்சி
- ♣ சமூகத்தின் உயர்வு
- ♣ சுற்றுச்சூழல் பன்முகத் தன்மை
- ♣ வாழ்க்கைத் தரம்

**2. மனித மேம்பாட்டுக் குறியீடு HDI**

மனிதவள மேம்பாடு குறியீடு (HDI) - பொருளாதாரத்தில் வெளியீட்டின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு, HDIயின் குறியீட்டின் முன்னேற்றம் வாழ்க்கைத் தரத்தில் உயர்வு, தொழில் நுட்ப முன்னேற்றம், மற்றும் ஒரு நாட்டின் ஒட்டு மொத்த மகிழ்ச்சி குறியீட்டைக் கருதுகிறது.

www.Padasalai.Net



## கூடுதல் வினாக்கள்

**8. இரண்டாம் துறை – குறிப்பு வரைக.** **(PTA -2)**

- ♣ தொழில்துறையை இரண்டாம் துறை எனவும் அழைக்கலாம்.
- ♣ இரும்பு மற்றும் எஃகு தொழில், ஜவுளித் தொழில், சணல், சர்க்கரை, சிமெண்ட், காகிதம், பெட்ரோலியம், ஆட்டோமொபைல் மற்றும் பிற சிறுதொழில்கள் முக்கிய தொழில்களாகும்.

**9. இந்திய பொருளாதாரத்தை மேம்படுத்த உதவும் காரணிகள் யாவை?** **(PTA -5)**

- ♣ தொழில் நுட்ப மேம்பாடு
- ♣ தொழிலாளர் சீர்திருத்தம்
- ♣ வாழ்க்கைத் தரத்தை அதிகப்படுத்துவது
- ♣ பொருளாதார அமைப்புகளில் மாற்றம் ஏற்படுத்துவது

**10. மொத்த உள்நாட்டு உற்பத்தி கணக்கிடும் முறைகள் யாவை?**

♣ செலவின முறை ♣ வருமான முறை ♣ மதிப்பு கூட்டு முறை

**11. GDPயில் பங்களிப்புள்ள துறைகளை எடுத்துக்காட்டுடன் எழுதுக.**

| விவசாயத்துறை | தொழில் துறை | பணிகள் துறை |
|---|---|---|
| கால்நடை பண்ணைகள், மீன் பிடித்தல், சுரங்கங்கள், காடுகள் வளர்த்தல், சோளம், நிலக்கரி | இரும்பு மற்றும் எஃகு தொழில், ஜவுளித் தொழில், சணல், சர்க்கரை, சிமெண்ட், காகிதம், பெட்ரோலியம், ஆட்டோ மொபைல்ஸ் மற்றும் பிற சிறுதொழில்கள் | அரசு, அறிவியல் ஆராய்ச்சி, போக்குவரத்து, தகவல் தொடர்பு, வர்த்தகம், தபால் மற்றும் தந்தி, வங்கி, கல்வி, பொழுதுபோக்கு, சுகாதாரம் மற்றும் தகவல் தொழில் நுட்பம் |

**12. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் முக்கியத்துவம் என்ன?**

- ♣ பொருளாதார வளர்ச்சி பற்றிய ஆய்வு பற்றி அறிந்துகொள்ளப் பயன்படுகிறது.
- ♣ செல்வம் சமனற்ற முறையில் விநியோகம் செய்யப்படுவது குறித்து அறிந்துகொள்ள உதவுகிறது.
- ♣ பணவீக்கம் மற்றும் பணவாட்டத்தின் சிக்கல்கள் பற்றி அறிய உதவுகிறது.
- ♣ உலகின் வளர்ந்த நாடுகளுடன் ஒப்பீடு செய்வதற்கு பயன்படுகிறது.
- ♣ வாங்கும் திறனை மதிப்பீடு செய்வதற்கு உதவுகிறது.
- ♣ பொதுத்துறைபற்றி அனைவரும் தெரிந்து கொள்ள பயன்படுகின்றது.

**13. தனிப்பட்ட வருமானம் - குறிப்பு வரைக**

நேர்முக வரிவிதிப்பிற்கு முன் தனி நபர்கள் மற்றும் ஒரு நாட்டின் குடும்பங்களின் மூலம் அனைத்து ஆதாரங்களிலிருந்து பெறப்படுகின்ற மொத்த பண வருமானத்தை தனிப்பட்ட வருமானம் எனலாம்.

**14. பொருளாதார முன்னேற்றம் என்றால் என்ன?**

- ♣ ஒரு பொருளாதாரத்தின் பரந்த முறையில் தெளிவான உலகத்தை பொருளாதார முன்னேற்றம் காண்பிக்கிறது,
- ♣ உற்பத்தி நிலையை அல்லது பொருளாதாரத்தின் வெளியீட்டை அதிகப்படுத்துவது.
- ♣ மக்களின் வாழ்க்கை தரத்தை முன்னேற்றுவது இதில் அடங்கும்.

**15. தேய்மானம் - குறிப்பு வரைக.**

அதிக பயன்பாட்டின் காரணமாக பொருட்கள் தேய்மானம் அடைதல் அல்லது பழைமையாதல் போன்றவைகளால் சொத்தின் பண மதிப்பு குறைவதே தேய்மானம் எனப்படும்.

## VI. பின்வரும் வினாக்களுக்கு விரிவான விடையளிக்கவும்.

1. நாட்டு வருமானத்தை கணக்கிடுவதற்கு தொடர்புடைய பல்வேறு கருத்துக்களை விவரி. **(PTA -1)**

| நாட்டு வருமானத்தை கணக்கிடுவதற்கு தொடர்புடைய பல்வேறு கருத்துக்கள் |
|---|
| அ) மொத்த நாட்டு உற்பத்தி (GNP) |
| ஆ) மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) |
| இ) நிகரநாட்டு உற்பத்தி (NNP) |
| ஈ) நிகரஉள்நாட்டு உற்பத்தி (NDP) |
| உ) தலா வருமானம் அல்லது தனி நபர் வருமானம் (PCI) |
| ஊ) தனிப்பட்ட வருமானம் (PI) |
| எ) செலவிடத் தகுதியான வருமானம் (DI) |

**அ) மொத்த நாட்டு உற்பத்தி (GNP)**

- மொத்த நாட்டு உற்பத்தி என்பது அந்த நாட்டு மக்களால் ஒரு வருடத்தில் (ஈட்டிய வருமானம்) உற்பத்தி செய்யப்பட்ட வெளியீடுகளின் (பண்டங்கள் + பணிகள்) மதிப்பைக் குறிக்கும். வெளிநாட்டு முதலீடு மூலம் ஈட்டிய இலாபமும் இதில் அடங்கும்.

$$GMP = C + I + G + (X - M) + NFIA$$

C - நுகர்வோர் I - முதலீட்டாளர் G - அரசு செலவுகள்

X - M - ஏற்றுமதி - இறக்குமதி: NFIA - வெளிநாட்டிலிருந்து ஈட்டப்பட்ட நிகரவருமானம்.

**ஆ) மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP)**

- ஒரு ஆண்டில் நாட்டின் புவியியல் எல்லைக்குள் உள்ள உற்பத்தி காரணிகளினால் உற்பத்தி செய்யப்பட்ட வெளியீடுகளின் (பண்டங்கள் + பணிகள்) மொத்த மதிப்பே மொத்த உள்நாட்டு உற்பத்தியாகும்.

**இ) நிகரநாட்டு உற்பத்தி (NNP)**

- மொத்தநாட்டு உற்பத்தியிலிருந்து மூலதன தேய்மானத்தின் மதிப்பை நீக்கிய பின் கிடைக்கும் பண மதிப்பு நிகர நாட்டு உற்பத்தியாகும்.
- நிகரநாட்டு உற்பத்தி (NNP) = மொத்தநாட்டு உற்பத்தி (GNP) - தேய்மானம்.

**ஈ) நிகர உள்நாட்டு உற்பத்தி (NDP)**

- நிகரஉள்நாட்டு உற்பத்தி என்பது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் ஒரு பகுதியாகும். மொத்த உள்நாட்டு உற்பத்தியிலிருந்து தேய்மானத்தைக் (தேய்மான செலவின் அளவு) கழித்து பின் கிடைப்பது நிகர உள்நாட்டு உற்பத்தியாகும்.
- நிகர உள்நாட்டு உற்பத்தி (NDP) = மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) - தேய்மானம்.

**உ) தலாவருமானம் அல்லது தனி நபர் வருமானம் (PCI)**

- தலா வருமானம் என்பது மக்களின் வாழ்க்கைத் தரத்தை உணர்த்தும் ஒரு கருவியாகும்.
- நாட்டு வருமானத்தை மக்கள் தொகையில் வகுப்பதன் மூலம் தலா வருமானம் பெறப்படுகிறது.

$$\text{தலா வருமானம்} = \frac{\text{நாட்டு வருமானம்}}{\text{மக்கள்தொகை}}$$

**ஊ) தனிப்பட்ட வருமானம் (PI)**

- நேர்முக வரி விதிப்பிற்கு முன் தனி நபர்கள் மற்றும் ஒரு நாட்டின் குடும்பங்களின் மூலம் அனைத்து ஆதாரங்களிலிருந்து பெறப்படுகின்ற மொத்த பண வருமானத்தை தனிப்பட்ட வருமானம் எனலாம்.
- தனிப்பட்ட வருமானம் = நாட்டு வருமானத்தில் பெரு நிறுவனங்களின் வருமான வரி – பெரு நிறுவனங்களின் பகிர்ந்தளிக்கப்படாத வருவாய் – சமூகபாதுகாப்பு பங்களிப்பு + மாற்று வருவாய்.

**எ) செலவிடத் தகுதியான வருமானம் (DI)**

- தனி நபர்கள் மற்றும் குடும்பங்களின் உண்மையான வருமானத்தில் நுகர்வுக்கு செலவிடப்படுகின்ற வருமானத்தை செலவிடத் தகுதியான வருமானம் எனப்படுகிறது.
- DPI = தனிப்பட்ட வருமானம் - நேர்முகவரி (நுகர்வு முறையில் DI = நுகர்வுச்செலவு + சேமிப்பு)

2. GDPஐ கணக்கிடும் முறைகள் யாவை? அவைகளை விவரி. (PTA -4, MDL -19)

| மொத்த உள்நாட்டு உற்பத்தியின் கணக்கீட்டு முறைகள் |
|---|
| அ) செலவினமுறை |
| ஆ) வருமானமுறை |
| இ) மதிப்பு கூட்டு முறை |

**அ) செலவினமுறை**

- இந்தமுறையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியை ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு நாட்டில் உற்பத்தி செய்த அனைத்து இறுதிப் பண்ட பணிகளுக்கு மேற்கொள்ளும் செலவுகளின் கூட்டுத் தொகையேயாகும். $Y = C + I + G + (X - M)$

**ஆ) வருமானமுறை**

- பண்டங்கள் மற்றும் பணிகளை உற்பத்தி செய்வதில் ஈடுபட்டுள்ள ஆண்கள் மற்றும் பெண்களின் வருமானத்தை கணக்கிட்டு மொத்த உள்நாட்டு உற்பத்தியை இந்த முறை கூறுகிறது.
- வருமான முறையில் GDPஐ கணக்கிடும்போது,

**வருமானம் = கூலி + வாரம் + வட்டி + லாபம்**

**இ) மதிப்பு கூட்டு முறை**

- மதிப்புக் கூட்டு முறையில், ஒவ்வொரு இடைநிலை பண்டத்தின் மதிப்பை கூட்டினால், இறுதிப்பண்டத்தின் மதிப்பை அளவிடலாம்.
- உற்பத்தியில் பயன்படுத்தப்பட்ட அனைத்து இடைநிலை பண்டங்களின் மதிப்பை சேர்க்கும் போது, பொருளாதாரத்தில் உற்பத்தி செய்யப்பட்ட இறுதிப் பண்டங்களின் மொத்தமதிப்பு கிடைக்கிறது.
- இடைநிலைபண்டங்களின் கூட்டு = இறுதிப்பண்டம்

3. இந்தியாவில் GDP யில் பல்வேறு துறைகளின் பங்கினை விவரி.

| GDP யில் பல்வேறு துறைகளின் பங்கு |
|---|
| அ) பணிகள் துறை |
| ஆ) தொழில் துறை |
| இ) வேளாண்மை துறை |

**அ) பணிகள் துறை**

- நடப்பு விலையில் மொத்த மதிப்பு கூடுதலில் (GVA) பணிகள் துறைகள் 2018-2019ல் 92.26 லட்சம் கோடி என மதிப்பிடப்பட்டுள்ளன.
- இந்தியாவில் மொத்த மதிப்பு கூடுதலான 169.61 லட்சம் கோடியில், 54.40% பணிகள் துறையின் பங்காகும்.
- வர்த்தகம், ஹோட்டல்கள், போக்குவரத்து, தகவல் தொடர்பு - 18.62%
- நிதி, ரியல் எஸ்டேட் - தொழில் முறை சேவைகள் - 20.96%
- பொது நிர்வாகம், பாதுகாப்பு, பிற பணிகள் - 14.82%
- உலகில் இந்தியா பணிகள் துறையில் ஆறாவது இடத்தில் உள்ளது.

**ஆ) தொழில் துறை**

- தொழில் துறையின் பங்களிப்பு 29.73% ம் இவற்றில் சுரங்கம் மற்றும் குவாரி - 2.7% உற்பத்தி - 16.83%, மின்சாரம், எரிவாயு, நீர் வழங்கல், பிற பயன்பாட்டு சேவைகள் - 2.67% கட்டுமானம் - 7.53% அடங்கும்
- உலகில் இந்தியா தொழில் துறையில் எட்டாவது இடத்தில் உள்ளது.

**இ) வேளாண்மை துறை**

- வேளாண்மை சார்ந்த சார்பு துறையின் பங்கு 15.87% ஆகும்.
- விவசாயம், காடுகள் மற்றும் மீன்பிடித்தல் ஆகியவை அடங்கும்.
- விவசாய பண்டங்களின் உற்பத்தியில் இந்தியா இரண்டாவது பெரிய நாடாகும்.
- உலகின் மொத்த விவசாய பொருட்களின் வெளியீட்டில் 7.39% இந்தியாவினால் வெளியிடப்படுகிறது.
- இந்திய பொருளாதாரத்தில் விவசாய துறையின் பங்களிப்பு, உலக சராசரி 6.4% விட அதிகமாக உள்ளது.

4. பொருளாதார வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் இடையேயுள்ள ஏதேனும் ஐந்து வேறுபாடுகளைக் கூறுக.

| வ.எண் | பொருளாதார வளர்ச்சி | பொருளாதார முன்னேற்றம் |
|---|---|---|
| 1. கருத்து | இது ஒரு குறுகிய கருத்து | இது ஒரு பரந்த கருத்து |
| 2. வரையறை / பொருள் | ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு பொருளாதாரத்தின் வெளியீட்டில் இது நேர்மறை அளவு மாற்றத்தைக் கொடுக்கும். | HDI குறியீட்டின் முன்னேற்றம், வாழ்க்கைக் தரத்தில் உயர்வு, தொழில் நுட்ப முன்னேற்றம், மற்றும் ஒரு நாட்டின் ஒட்டு மொத்த மகிழ்ச்சி குறியீட்டைக் கருதுகிறது |
| 3. அணுகுமுறை இயல்பு | அளவின் இயல்பு | தரத்தின் இயல்பு |
| 4. நோக்கம் | GDP, GNP, FDI, FII போன்ற அளவுகள் அதிகரிக்கும் | வாழ்க்கை எதிர்பார்ப்பு விகிதம், குழந்தை, எழுத்தறிவு விகிதம், வறுமை விகிதத்தில் முன்னேற்றம். |
| 5. கால வரம்பு | குறுகிய காலத்தை உடையது | நீண்ட காலத்தை உடையது |
| 6. பொருந்தும் தன்மை | வளர்ந்த நாடுகள் | வளர்ந்து வருகின்ற நாடுகள் |
| 7. அளவீட்டு நுட்பங்கள் | நாட்டு வருமானத்தை அதிகரித்தல் | தனிநபர் வருமானத்தை அதிகரித்தல் |
| 8. நிகழ்வின் அதிர்வெண் | ஒரு குறிப்பிட்ட காலம் | தொடர்ச்சியான செயல்முறை |
| 9. அரசாங்க உதவி | அரசாங்க உதவி / ஆதரவு அல்லது தலையீடு தேவைப்படாது | அரசாங்க தலையீட்டை மிகவும் நம்பியுள்ளது. |

5. கீழ்க்கண்ட பொருளாதார கொள்கைகளை விவரி.

அ) வேளாண் கொள்கை ஆ) தொழிற்கொள்கை இ) புதிய பொருளாதார கொள்கை

**அ) வேளாண் கொள்கை**

- ♣ உள்நாட்டு வேளாண்மை மற்றும் வெளிநாட்டு வேளாண்மை இறக்குமதி பொருட்கள் பற்றிய அரசின் முடிவுகளையும், நடவடிக்கைகளையும் பற்றியது வேளாண் கொள்கையாகும்.
- ♣ சில பரவலான கருப்பொருள்கள், இடர் மேலாண்மை மற்றும் சரிசெய்தல், பொருளாதாரநிலைத் தன்மை, இயற்கை வளங்கள், சுற்றுச்சூழல் நிலைத் தன்மையின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, உள்நாட்டு பொருட்களுக்கான சந்தை அணுகல் ஆகியவை வேளாண்கொள்கையில் அடங்கும்.
- ♣ சில வேளாண்கொள்கைகள். விலைக் கொள்கை, நில சீர்திருத்தகொள்கை, பசுமைப்புரட்சி, பாசனக் கொள்கை, உணவுக் கொள்கை, விவசாய தொழிலாளர் கொள்கைமற்றும் கூட்டுறவு கொள்கை போன்றவைகளாகும்.

**ஆ) தொழிற் கொள்கை**

- ♣ தொழில் துறை முன்னேற்றம் எந்த ஒரு பொருளாதாரத்திற்கும் முக்கியமான அம்சமாகும். இது வேலை வாய்ப்பை உருவாக்குகிறது.
- ♣ ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டை ஊக்குவிக்கிறது.
- ♣ நவீனமயமாக்கலுக்கு வழிவகுக்கப்பட்டு இறுதியில் பொருளாதாரம் தன்னிறைவு அடைகிறது.
- ♣ உண்மையில், தொழில் துறைவளர்ச்சி, புதிய பண்ணை தொழில் நுட்பம் மற்றும் பணிகள் துறை போன்ற துறைகளை ஊக்குவித்து பொருளாதார வர்த்தக வளர்ச்சிக்கு முக்கிய பங்கு வகிக்கிறது.
- ♣ தொழில் துறை கொள்கைகள் பெரிய அளவிலான தொழிற்சாலைகளுக்காக தொழில் கொள்கைகள், ஜவுளித் தொழில் கொள்கை, சர்க்கரை தொழில் கொள்கை, தொழில் துறை வளர்ச்சி விலைக் கொள்கை, சிறு தொழில் தொழில் கொள்கை மற்றும் தொழில் துறை தொழிலாளர் கொள்கை ஏற்படுத்தப்பட்டவையாகும்.

**இ) புதிய பொருளாதாரக் கொள்கை**

- ♣ புதிய பொருளாதார சீர்திருத்தம் பொதுவாக, LPG அல்லது தாராளமயமாக்கல், தனியார் மயமாக்கல் மற்றும் உலகமயமாக்கல் மாதிரி என அழைக்கப்படுகிறது.
- ♣ இந்த பொருளாதார சீர்திருத்தங்கள், நாட்டின் ஒட்டு மொத்த பொருளாதார வளர்ச்சியை ஒரு குறிப்பிடத்தக்க வகையில் முன்னேற்றமடையச் செய்தது.

## கூடுதல் வினாக்கள்

**6. வளர்ச்சி பாதையின் அடிப்படையில் GDP மற்றும் வேலை வாய்ப்பு பற்றி விவரி.**

**வளர்ச்சி பாதையில் GDP**

- ♣ இந்தியா தன் வளர்ச்சி பாதையில் முதலாவதாக நெருக்கமான வர்த்தகக் கொள்கையை எடுத்துக் கொண்டது.
- ♣ இது உள்நாட்டு தொழில்களுக்கு ஒரு உந்துதலையும், வெளிநாட்டு பொருட்களையும், நிறுவனங்களையும் சார்ந்திருத்தலைக் குறைக்கும் நிலையையும் ஏற்படுத்தியது..
- ♣ இந்தியாவின் எல்லைகளைத் திறந்த வர்த்தகத்திற்குத் திறக்க முடிவு செய்து, அதன் பொருளாதாரம் தாரளமாயக்கப்பட்டு, வெளிநாட்டு நிறுவனங்களை இந்திய பொருளாதாரத்திற்குள் அனுமதிப்பதன் மூலம் 1991 ஆம் ஆண்டு வரை இந்த பார்வை தொடர்ந்தது.
- ♣ இந்தியாவில் கடந்த இரண்டு சகாப்தங்களாக GDP யின் நிலையான அதிக வளர்ச்சியால் தனிநபர் வருமானம் அதிகரித்தும், முழு வறுமை குறைந்தும் காணப்படுகின்றன.
- ♣ 12 ஆண்டுகளில் தனிநபர் வருமானம் இரண்டு மடங்காக உயர்ந்துள்ளது. இந்தியா தனி நபர் வருமானத்தில் நடுத்தர வருவாய் நாடுகளின் பிரிவில் இடம் பிடித்துள்ளது.

**வளர்ச்சி பாதையில் வேலைவாய்ப்பு**

- ♣ ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் வேலைவாய்ப்பு உருவாக்கத்திற்கு ஒரு உந்துதல் வழங்கப்பட்டது.
- ♣ வறுமைஒழிப்பு மற்றும் கிராமப்புற வளர்ச்சி இந்திய வளர்ச்சிப்பாதையின் ஒரு பகுதியாகும்.
- ♣ பொதுத் துறைக்கு குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. தனியார் நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகள் கடுமையான ஒழுங்கு முறை மற்றும் தரநிலைக்கு உட்பட்டவை ஆயின.
- ♣ பிறப்பின் போது எதிர்பார்க்கப்பட்ட ஆயுட்காலம் 65 ஆண்டுகள் மற்றும் 5 வயதுக்குட்பட்ட 44 % குழந்தைகள் ஊட்டச்சத்து குறைபாடுடன் உள்ளனர். 15 வயதும் அதற்கு மேலும் உள்ள மக்கள் தொகையில் 63 % பேர் கல்வியறிவு பெற்றவர்களாக உள்ளனர். இது ஒப்பீட்டளவில் குறைந்த நடுத்தர வருவாய் நாடுகளில் 71% ஆகும்.

**7. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் குறைபாடுகள் யாவை?**

**➲ GDPயில் பல முக்கிய பண்டங்கள் மற்றும் பணிகள் சேர்க்கப்படவில்லை**

- ♣ சந்தையில் விற்கப்படும் பண்டங்கள் மற்றும் பணிகளின் மதிப்பு மட்டுமே மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அடங்கும்.
- ♣ பெற்றோர்கள் குழந்தைகளுக்கு செய்யும் பணிகள் / சேவைகள் மிக முக்கியமானது. இது போலவே, சுத்தமான காற்றும், ஆரோக்கியமான வாழ்க்கைக்கு முக்கியமானது. இவற்றிற்கு சந்தை மதிப்பு இல்லை. ஆகவே, இவை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வரம்புக்கு வருவதில்லை.

**➲ GDP அளவை மட்டும் அளவிடுகிறது, தரத்தை அல்ல**

- ♣ 1970களில் பள்ளிகள் மற்றும் வங்கிகளில் பந்துமுனை பேனாக்கள் பயன்படுத்த அனுமதிக்கவில்லை.
- ♣ ஏனென்றால், இந்தியாவில் கிடைக்கக்கூடிய மிக தரமற்ற பொருளாக இருந்தது.
- ♣ அதன் பின்னர், இந்தியாவில் தயாரிக்கப்பட்ட பந்துமுனை பேனாக்களின் தரம் மேம்படுத்தப்பட்டதால், அவற்றின் உற்பத்தியும் குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்தது.
- ♣ எனவே, பண்டத்தினுடைய தரம் என்பது மிக முக்கியமானதாகும்.
- ♣ ஆனால், அது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பின்பற்றப்படுவதில்லை.

**➲ GDPயில் நாட்டு வருமான பகிர்ந்தளிப்பு பற்றி கூறவில்லை**

- ♣ ஒரு நாட்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தி விரைவாக வளரலாம்.
- ♣ ஆனால் வருமானம் சமனற்ற நிலையில் பகிர்ந்தளிக்கப்படுகிறது.
- ♣ இதனால் ஒரு சிறிய சதவீத மக்களே பயன் அடைகிறார்கள்.

**➲ GDP மக்கள் வாழும் வாழ்க்கை முறையைப் பற்றி கூறவில்லை**

GDP மிகவும் குறைந்த சுகாதார நிலை, மக்கள் ஜனநாயகமற்ற அரசியல் அமைப்பு, அதிகமாக மற்றும் உயர் தற்கொலை விகிதம் ஆகியவற்றை கருத்தில் கொள்ளாமல் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் உயர்மட்ட தனி நபர் வருமானத்துடன் கைகோர்த்து செல்கிறது.

www.Padasalai.Net

## For Orders Please Contact Our District Co-Ordinators

| | |
|---|---|
| **Ariyalur:** 7094441952, 9843427724 | **Ramanathapuram:** 7094441959, 9150854043 |
| **Chennai:** 7094441953, 7868911969 | **Salem:** 7397774511, 9952499928 |
| **Coimbatore:** 7397774501, 8973711777 | **Sivaganga:** 7397774512, 7639682894 |
| **Cuddalore:** 7397774502, 9003557799 | **Thanjavur:** 7094441960, 9787609090 |
| **Dharmapuri:** 7397774503, 9787144519 | **Theni:** 7397774513, 9092794793 |
| **Dindigul:** 7094441954, 9150078022 | **Thoothukudi:** 7397774507, 7598011962 |
| **Erode:** 7397774504, 9788831237 | **Thiruvarur:** 7094441962, 7598868760 |
| **Kanchipuram:** 7397774505, 9600526295 | **Tirunelveli:** 7397774515, 9500806359 |
| **Kanniyakumari:** 7397774506, 9488582088 | **Tiruchirappalli:** 9626053030, 9787609090 |
| **Karur:** 7094441955, 9842964646 | **Thottiam:** 9344322007, 8667686395 |
| **Krishnagiri:** 7094441956, 9994394610 | **Thiruvallur:** 7397774514, 8667604216 |
| **Madurai:** 7094441957, 9843349892 | **Tiruppur:** 7397774524 9788776767 |
| **Nagapattinam:** 7094441966, 7598868760 | **Tiruvannamalai:** 7094441963, 9952782495 |
| **Namakkal:** 7094441958, 7094807585 | **Vellore:** 7094441964, 9994311090 |
| **Nilgiris:** 9787609090, 9787201010 | **Thirupathur:** 7094441961, 9786315453 |
| **Perambalur:** 7397774509, 9003557799 | **Villuppuram:** 7094441965, 9943153202 |
| **Pudukottai:** 7397774510, 9787609090 | **Virudhunagar:** 7397774516, 8189844465 |

(OR) Please call **9787609090 or 9787201010 or 0431 2703031**

## You can buy our products from our Retailers (Book Shops)

**Chennai:** Paris-Bunder Street–MK Stores, Kings, MSK, Limra books, FA Stores **Coimbatore:** Majestic book House, Cheran Book House, Raja Ganapathi Books, Radhamani books **Cuddalore:** Bell book house, Emborium book shop **Ariyalur:** Tamilkalam Books (Sendhurai Road) **Dharmapuri:** Sri Krishna School needs **Dindigul:** Ayyanar Books (bus stand), Jai Books (no.28, Solai Hall Road). KV Narayana Iyyar, JK Books Palani-Vinoth, Elumalayan Books **Erode:** Dhana, Senthil, Palaniyappa, Selvam Books, Amirthalingam Book House Pallipalayam-Amman Sanjeevi **Kanchipuram:** VBC Books **Kanniyakumari:** Nagarkoil – New India Book House **Karur:** Udhayam Solar Systems, Krishna Traders, SPN Note books, Vani Books **Krishnagiri:** Sri Ramana Book House, Vijaya Books, **Madurai:** Pudumandapam: Mano, Jayam, Bharath Book House **Nagapattinam:** Vinayaga papers, Mayiladuthurai: Balaji Seerkazhi-Semmalar Vedharanyam: Nandhini books **Namakkal:** Saravana Books(Bus stand), Rasipuram-Sakthi, Babu Books Tiruchengode-Chola Books. Thottiam-Arun, Janani books **Nilgiris:** Kothagiri-Bharani traders **Perambalur:** Chandra Stores **Pudukottai:**Tamilnadu paper mart **Ramanathapuram:** Aruna Stores. **Salem:** AKC, Rajaganapthi, Vignesh, Saraswathi, Pattu, Palaniappa Attur-Saraswathi Books **Sivaganga:** New Ayyanar Books (thondi road) **Thanjavur:**LKR, Murugan, Pattukottai-Arasu, Arasi, Vinayaga Balaji Books, Kumbakonam- Balaji, Markandeya Books **Theni:** Maya books **Thoothukudi:** Eagle Books, Sri Durga Stores, **Thiruvarur:** Anand papers, Enbajothy Vilas, Manonmani Books, Mannargudi-Balaji, Thiruthuraipoondi-Jolly, Nannilam-Mullai, **Tirunelveli:** Eagle Books, Sri Shyamala Puthaga Angadi, Tenkasi: Maheswari Books **Tiruchirappalli:** Rasi, Sumathi, Murugan Books, P.R.Sons, Kumaran, Viswas, Market-Mani Puthaga Nilyam, Raghavendra, Gayathri, Manapparai: Jothies **Thiruvallur:** Gumidipoondi-Jaya books **Tiruppur:** Chola book house, **Tiruvannamalai:** APM Stores, Saraswathi Book Stall, **Vellore:**Vellore Books, Thirupattur: Sri Sai Book Shop, **Villuppuram:** Sabarinathan Books, Book Park, Kallakurichi-Sri Kirubha Stationary, **Virudhunagar:** Sethu Books. **Pondicherry**: Balaji Books

For updated version of this list Visit us: **www.waytosuccess.org** Mail us: **way2s100@gmail.com**